

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்
# உங்கள் நூலகம்
மாத இதழ்

*திருவள்ளுவராண்டு 2051*
*மலர் - 13 இதழ் - 01 - ஏப்ரல் 2021*

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கிருஷ்ணமூர்த்தி*

இதழ் வடிவமைப்பு
*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


# உள்ளே...


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்.......... 04

பாரதியும் கலைச்சொல் கோட்பாடும்
டாக்டர் சு.நரேந்திரன்.......... 09

மருத்துவர் ஜீவா ஒரு வற்றாத சிந்தனை நதி
க. பழனித்துரை.......... 15

இயக்கமாக விளங்கியவர் டாக்டர் ஜீவா
த. ஸ்டாலின் குணசேகரன்.......... 18

புன்னகை மன்னன் மருத்துவர் ஜீவா
வி.பி.குணசேகரன்.......... 23

டாக்டர் இல்லாத வீடும்... டாக்டர் இல்லாத நண்பர்களும்...
ம. ராஜேந்திரன்.......... 26

புரட்சிக்காரரான டாக்டர்
எம். பாண்டியராஜன்.......... 30

'அலவாக்கோட்டை'யிலிருந்து ஓர் அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத் தலைமை 'ஆரெம்மெஸ்'
மு.இராமசுவாமி.......... 35

மார்க்சிய சிந்தனை மிக்க பேராசிரியர்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்.......... 40

பேரா.இராம.சுந்தரம் அவர்களின் நினைவேந்தல்
கி.அரங்கன்.......... 46

அவர் ஓர் இயக்கம்
கி.ரா.சங்கரன்.......... 51


முதல் மூன்று தமிழ் நாவல்கள் சரித்திரமும் பயணமும்
தி.சு. நடராசன்.......... 53

மூன்று முகங்கள்
பாவண்ணன்.......... 58

தமிழ்ச் சமூகத்தின் தொன்மை அடையாளத் தடங்கள்
முனைவர் மு. ஏழுமலை.......... 63

உ.வே.சாமிநாதையர் பார்வையில் தமிழ் நூல்களும் அறிஞர்கள் பார்வையில் உ.வே.சாமிநாதையரும்
முனைவர் இரா. வெங்கடேசன்.......... 67

பகிர்வு



# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# பேரரசை உலுக்கிய வழக்கு

**The Case that Shook the Empire One man's Fight for the Truth about the Jallianwala Bagh Massacre.**

*Raghu Palat and PusKa palat (2019)*
*BLOOMSBURY.New Delhi.London,New York.Sydney.*

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

பஞ்சாப் மாநிலத்தில், அம்மாநிலத்தின் துணை ஆளுநரான ஓட்வியரும் இராணுவ அதிகாரியான டயரும் இணைந்து நடத்திய கொடூரச் செயல்கள் சென்ற இதழில் இடம் பெற்றிருந்தன. இந்நிகழ்வுகள் குறித்த சரியான புரிதல் பிரித்தானிய மக்களுக்கு இல்லை. உண்மையான செய்திகள் நாளேடுகளில் இடம் பெறாதவாறு அதிகார வர்க்கம் பார்த்துக்கொண்டது. பஞ்சாப் மாநில மக்கள்மீது இராணுவ அடக்குமுறையை முன்னின்று நடத்திய ஓட்வியர், டயர் என்ற இருவரைக் குறித்தும் மாவீரர் போன்ற ஒரு பிம்பம் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டிருந்தது.

இச்சூழலில் சர் சங்கரன் நாயர் என்பவர் ஜாலியன்வாலாபாக் நிகழ்வுகளின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் நூல் ஒன்றை எழுதினார்.

இந்நூல் குறித்து அவதூறு வழக்கு ஒன்று இங்கிலாந்து நீதிமன்றத்தில் சங்கரன் நாயருக்கு எதிராகத் தொடரப்பட்டது. இவ்வழக்கை அவர் எதிர்கொண்டார். 1857 இல் நிகழ்ந்த சிப்பாய் எழுச்சி போன்ற ஒரு கலகச் செயல் நிகழ இருந்த நிலையில் ஓட்வியரும் டயரும் இணைந்து உரியநேரத்தில் மேற்கொண்ட தீரமான செயல்பாடுகள்தான் அது நிகழாதவாறு தடுத்து நிறுத்தியது என்ற எண்ணம் மேலோங்கியிருந்த சூழலில் இவ்வழக்கு அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டது. இவ்வழக்கின் வரலாறும், இதற்குக் காரணமான நூல் எழுதப்பட்டதற்கான தேவை குறித்தும், வழக்கின் முடிவும் அது ஏற்படுத்திய விளைவுகளும் குறித்தும் இனிக் காண்போம்.

பஞ்சாப் மாநில நிகழ்வுகளும், ஜாலியன்வாலாபாக் படுகொலைச் செயல்களும் வெளிவராதபடி பஞ்சாப் மாநிலத்தின் அதிகாரவர்க்கம் பார்த்துக்கொண்டது. இருப்பினும் வெளிமாநிலங்களில் இருந்து வெளியான ஆங்கில இதழ்களில் இந் நிகழ்வுகள் குறித்த செய்திகள் வெளியாயின. இச் செய்திகளை இலண்டனில் இருந்த இந்தியாவுக்கான செயலாளர் மாண்டேகு படிக்க நேரிட்டது. உடனே அமிர்தசரஸ் துப்பாக்கிச் சூடு, இராணுவச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டமை குறித்த விவரங்களை அனுப்பிவைக்கும்படி இந்தியாவின் வைசிராயாக இருந்த செம்ஸ்போர்டுக்குக் கடிதம் எழுதினார்.

இதற்கான பதிலை 21 மே 1919இல் தந்தி வாயிலாக செம்ஸ்போர்டு அனுப்பினார். அதில் டெல்லி, அமிர்தசரஸ், அகமதாபாத், கல்கத்தா ஆகிய நகரங்களில் மொத்தம் ஆறு அல்லது ஒன்பது அய்ரோப்பியர்களும், ஏறத்தாழ 400 இந்தியர்களும் இறந்து போனதாகக் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் தெருவில் ஊர்ந்து செல்லும் தண்டனை நடைமுறைப்படுத்தப் பட்டிருந்ததையும் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய வைசிராயின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்த சங்கரன் நாயரைப் பஞ்சாப் நிகழ்வுகள் பெரிதும் வருத்தின. வைசிராயின் அனுமதியின் பெயரிலேயே பஞ்சாப் கொடூரங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறிந்தபோது அவர் அதிர்ச்சி அடைந்தார். வைசிராயின் ஆலோசனைக் குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகும் முடிவை எடுத்தார். அவ்வாறு செய்யவேண்டாமென்று ஆண்ட்ரூஸ் பாதிரியார் , அன்னிபெசண்ட் , மோதிலால் நேரு ஆகியோர் அறிவுறுத்தினர். ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் அவர் ஒருவர்தான் இந்தியர் என்ற நிலையில் அவரது பணி தேசத்திற்கு தேவை என்ற நிலையில் இவ்வாறு கூறினர்.

**ஆண்ட்ரூஸ் பாதிரியார்**

இவ்வாறு சங்கரன் நாயரை அறிவுறுத்தியவர்களில் ஒருவரான சி.எஃப். ஆண்ட்ரூஸ் பாதிரியார் இங்கிலாந்து கிறித்தவத் திருச்சபையின் குரு ஆவார். சமயப்பரப்பலுக்காக இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தவர். இருப்பினும் இந்திய தேசிய இயக்கத்தின் ஆதரவாளராக விளங்கினார். பஞ்சாப் நிகழ்வுகள் குறித்து வைசிராயைச் சந்தித்து உரையாடியபோது, ஓர் ஆங்கிலேயரைத் துன்புறுத்தினால் ஏற்படும் விளைவுகளை, இந்தியர்கள் இப்போது உணர்ந்திருப்பார்கள் என்று வைசிராய் குறிப்பிட்டார்.

இதைக் கேள்வியுற்ற நாயர் வைசிராயின் ஆலோசனைக் குழுவில் இருந்து விலகுவதில் மேலும் உறுதியான நிலைபாட்டை எடுத்தார். தாம், லாகூர் சென்று திரும்பும் வரை உறுப்பினர் பதவியில் தொடரும்படி ஆண்ட்ரூஸ் பாதிரியார் வேண்டினார். ஆனால் லாகூர் செல்லும் வழியிலேயே அவர் கைது செய்யப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டார்.

**பதவி விலகல்**

எனவே முதலில் எடுத்த முடிவுப்படி 1919 ஜுன் 23 இல், வைசிராய் நிர்வாகக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து நாயர் விலகினார். தன்னை வந்து பார்க்கும்படி செம்ஸ்போர்டு அவரை அழைத்தார். அதன்படி நாயர் அவரைச் சந்தித்தபோது, நாயரின் பதவி விலகல் குறித்து வருத்தம் தெரிவித்தார். அவரது பதவி விலகலைத் தான் ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தும் வகையில், அவருக்குப் பதிலாக வேறு ஒருவரின் பெயரைப் பரிந்துரைக்க முடியுமா என்று வைசிராய் வினவினார். அவ்வாறு பரிந்துரைக்க முடியும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் "Yes" (எஸ்) என்று கூறிவிட்டு, மென்மையான குரலில், 'ராம்பிரசாத்' என்று கதவருகில் நின்று கொண்டிருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டினார். அவர் சுட்டிக்காட்டிய ராம்பிரசாத் தலையில் தலைப்பாகையுடன் சீருடையில் நின்று கொண்டிருந்த கடைநிலை ஊழியர் (பியூன்) ஆவார்.

நாயரின் உடனடியான இப்பதில் செம்ஸ்போர்டை அதிர்ச்சி அடையச் செய்தது. நாயர் தொடர்ந்தார்.

"ஏன் கூடாது? அவர் நல்ல தோற்றப்பொலிவுடன் உள்ளார். தன் சீருடையை நன்றாக அணிந்துள்ளார். நீங்கள் கூறும் எல்லாவற்றிற்கும் சரி என்று கூறுவார். ஆலோசனைக் குழுவுக்குப் பொருத்தமான உறுப்பினராக விளங்குவார்". இவ்வாறு கூறிவிட்டு, வைசிராயிடம் கை குலுக்கி விடை பெற்றுச் சென்றார்.

நாயரின் பதவி விலகல் உடனடியாகச் சில விளைவுகளைத் தோற்றுவித்தது. அவர் பதவி

விலகிய மூன்று நாட்களில், பஞ்சாபில் நடைமுறையிலிருந்த ஊடகத் தணிக்கை நீக்கப்பட்டது. பதினைந்து நாட்களில் இராணுவச் சட்டம் நீக்கப்படும் என்று வைசிராய் அறிவித்தார். நாயரின் பதவி விலகலால் அதிர்ச்சியடைந்த மாண்டேகு பஞ்சாப் நிகழ்வுகள் குறித்து ஆராய விசாரணை ஆணையம் ஒன்றை அமைக்கும்படிக் கூறினார்.

**ஹண்டர் விசாரணை ஆணையம்**

செம்ஸ்போர்டுக்கு இதில் உடன்பாடு இல்லையென்றாலும் அரைகுறை மனதுடன் 1919இல் விசாரணை ஆணையம் ஒன்றை நிறுவினார். இதன் தலைவராக வில்லியம் ஹண்டர் என்பவரை நியமித்தார். இவர் ஸ்காட்லாந்து சட்டக்கல்லூரியின் பேரவை உறுப்பினராகவும் (செனட்டர்) இங்கிலாந்து அரசின் தலைமை வழக்கறிஞராகவும் பணியாற்றியவர். 1919ஆவது ஆண்டில் அமிர்தசரசிலும் பிற பகுதிகளிலும் உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிவது இந்த ஆணையத்தின் நோக்கமாக அமைந்தது. இதன் உறுப்பினர்களாக ஹண்டர் உள்ளிட்ட எண்மர் இருந்தனர். இவர்களுள் ஐவர் ஆங்கிலேயர்; மூவர் இந்தியர்.

விசாரணை ஆணையம் நிறுவப்பட்ட பின்பு, ஆணையத்தின் தலைவரான ஹண்டரிடம் மாண்டேகு கூறியதன் சாரம் வருமாறு: இந்த விசாரணை ஆணையத்தின் நோக்கம் உண்மையை உலகறியச் செய்வதும் இழந்துபோன பொது மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதும்தான்

ஹண்டர் விசாரணை ஆணையத்தில் அதன் தலைவரான ஹண்டர் தவிர எழுவர் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களுள் நால்வர் ஆங்கிலேயர்கள். மூவர் இந்தியர்கள். 1919 அக்டோபர் 29 இல் தில்லியில் எட்டு நாட்களும் அகமதாபாத்தில் ஆறு நாட்களும் மும்பையில் மூன்று நாட்களும் லாகூரில் 29 நாட்களும் இவ் ஆணையத்தில் சாட்சியளித்தனர். ஓட்வியர் உள்ளிட்ட நால்வர் மட்டுமே வெளிப்படையாக இன்றி மூடிய அறைக்குள் சாட்சியமளித்தனர். விசாரணை ஆணையத்தின் உறுப்பினர்கள் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடத்தி விரிவான முறையில் நடந்த நிகழ்வுகளை வெளிப்படுத்தினர். இவை வெளிப்படையாக நிகழ்ந்தமையால் விரிவான முறையில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் செய்தித்தாள்களில் வெளியாயின.

இந்தியாவுக்கான செயலாளரான மாண்டேகு விசாரணை அறிக்கையைப் படித்தறிந்தார். அதன் அடிப்படையில் பாராளுமன்றக் குழு ஒன்றினை இது குறித்து ஆராய அமைத்தார். இக் குழுவின் முன் சாட்சியமளிக்க இலண்டனுக்கு வரும்படி நாயரை அழைத்தார். இதை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதிய நாயர் மாண்டேகுவின் அழைப்பை ஏற்றுக் கொண்டார். இலண்டனுக்குச் செல்வதற்குமுன் நாயர் வைசிராய் செம்ஸ்போர்டைச் சந்தித்தார். தமது இலண்டன் பயணம் குறித்து செம்ஸ்போர்டிடம் குறிப்பிட்டபோது, தம் சொந்தச் செலவிலேயே நாயர் இலண்டன் செல்ல வேண்டுமென்றும் அரசின் விருந்தினராக அவர் கருதப்படமாட்டார் என்றும் செம்ஸ்போர்ட் கூறினார். செலவைப் பற்றிக் கவலைப்படாது நாயர் இலண்டன் சென்றார்.

வைசிராய் செம்ஸ்போர்டு அனுப்பிய விரிவான அறிக்கை மாண்டேகுவை அதிர்ச்சியடையச் செய்தது. குப்புற விழுந்த நிலையில் தெருவில் ஊர்ந்து செல்லும் தண்டனையானது அருவருப்பானதாகவும் வெறுக்கத்தக்க ஒன்றாகவும் அவருக்குப் பட்டது. டயர் மீது கடுமையான எதிர்மறை விமர்சனங்களை முன்வைத்ததுடன் தலைமைப் பொறுப்பிலிருந்து டயரை விடுவித்து இங்கிலாந்துக்கு அனுப்பும்படி கூறிவிட்டார். ஆனால் செம்ஸ்போர்டுக்கு இதில் உடன்பாடில்லை. டயர் மேற்கொண்ட செயல்களை நியாயப்படுத்தி பதில் அனுப்பினார். மாண்டேகு இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிகழ்வுகள் ஒருபுறம் இருக்க மற்றோரு பக்கம் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக்குழு ஜூன் 8இல் அலகாபாத்தில் கூடியது. பஞ்சாப் மாநில நிகழ்வுகளுக்கு விசாரணை வேண்டும் என்ற முடிவை அங்கு எடுத்தது. அத்துடன் இலண்டன் சென்று இதற்கு ஆதரவு திரட்டும்படி சங்கரன் நாயரை வேண்டியது.

**சங்கரன் நாயர்**

கேரளத்தின் பரத ஆற்றங்கரையில் உள்ள மன்காரா என்ற கிராமத்தில் 1857 ஆவது ஆண்டில் பிறந்தவர் சங்கரன் நாயர். அவருடைய தாத்தா அரசு அதிகாரியாகப் பணியாற்றியவர். அவருடைய தந்தை தாசில்தார் ஆக இருந்தார். இதனால் நவீனக் கல்வி கற்பதன் அவசியத்தை அவரது குடும்பத்தினர் உணர்ந்திருந்தனர். பள்ளிப்படிப்பை முடித்தவுடன் சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலை வகுப்பில் பயின்று பட்டம் பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரியில் பயின்று பி.எல். பட்டம் பெற்று வழக்கறிஞரானார். பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியுமானார்.

காங்கிரஸ் இயக்கத்தில் அவருக்கு ஈடுபாடு இருந்தது. 1858இல் விக்டோரியா மகாராணி வெளியிட்ட அறிக்கை மீது அவருக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால் அந்த அறிக்கையில் இடம் பெற்றிருந்த அமைதி, அன்பு, சுதந்திரம், சமத்துவம் என்பன இந்தியாவில் உள்ள அவரது குடிமக்கள் அனைவருக்கும் உரியவை என்ற அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதில் இந்தியாவில் பணியாற்றும் ஆங்கில அதிகாரிகள் ஆர்வம் காட்டாததுடன்,

இந்தியர்களுக்கு எதிராகவே செயல் படுகிறார்கள் என்பது அவரது கருத்தாக இருந்தது. கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு வழங்கியது போன்ற சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டு இந்தியாவை இந்தியர்களே ஆளும் நிலையை அவர் விரும்பினார்.


1897இல் அமராவதியில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரசின் 13ஆவது மாநாட்டிற்குத் தலைமை ஏற்கும்படி அவரை அழைத்திருந்தனர். இதற்கு முன்னும் பின்னும் தலைமை ஏற்றவர்களில் இவர்தான் வயதில் இளையவர். அந்த ஆண்டுதான் திலகருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இது குறித்து சில உண்மைகளைத் தம் உரையில் அவர் குறிப்பிட்டிருந்தார். பிரித்தானிய அரசானது ஓர் இந்தியரைக் கைது செய்து எவ்வித நீதி விசாரணையும் இன்றி சிறையில் அடைக்க முடியும். ஆனால் ஓர் ஆங்கிலேயனைக் கைது செய்தால் நீதி வழங்கும் ஆயத்தார் ((Jury) முன் நிறுத்தி விசாரித்த பின்பே தண்டனை வழங்கப்படும். இத்துடன் நில்லாது வேறு சில விமர்சனங்களையும் அவர் முன்வைத்தார். அவை வருமாறு:

இந்திய நாட்டின் வருவாயிலிருந்து இந்திய ராணுவம் பராமரிக்கப் படுகின்றது. பிரித்தானிய. ஆட்சியைப் பிற நாடுகளில் தக்கவைத்துக் கொள்ள இந்த ராணுவம் பயன்படுத்தப்படுகிறது. இதற்காகும் செலவை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஓர் இனம் என்ற முறையில் தங்களை உயர்வானவர்கள் என்று கருதும் ஆங்கிலேயர்கள், இந்தியர்கள் பொறுப்பற்றவர்கள் என்று கருதி இந்தியாவை ஆயுதங்களின் துணையுடன் அடக்கிவைத்துள்ளார்கள், என்று கண்டித்தார். அனைத்து முக்கிய அலுவலகங்களும் ஆங்கிலேயர்களால் நிர்வகிக்கப் படுவதைச் சுட்டிக்காட்டி அரசுப் பொறுப்புகளில் இந்தியர்களும் ஆங்கிலேயர்களுக்கு இணையாக நியமிக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தினார்.

1920களில் இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராகவும். சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், இந்திய வைசிராயின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். இத்தகைய ஆளுமை கொண்ட இவர் காந்தியின் கருத்துக்கள் சிலவற்றுடன் மாறுபாடு கொண்டிருந்தார்.

**நாயரின் இலண்டன் வருகை**

ஹண்டர் ஆணையத்தின் முன் டயர் அளித்த சாட்சியம் இங்கிலாந்தின் 'பயோனியர்' இதழில் வெளியான நேரத்தில் நாயர் இலண்டன் வந்தடைந்தார். அதில் ஜாலியன் வாலாபாக் துப்பாக்கிச் சூடை முன்னரே திட்டமிட்டதாகவும், கூட்டத்தைக் கலைப்பதற்காக மட்டுமின்றி ஒரு படிப்பினையை நாடு முழுவதற்கும் வழங்கவேண்டும் என்பதற்காகவும்




மேற்கொண்டதாகக் குறிப்பிட்டிருந்தான். வாய்ப்புக் கிட்டியிருந்தால் இயந்திரத் துப்பாக்கிகளையும் கவச ஊர்திகளையும் பயன்படுத்தி இருப்பேன் என்றும் கூறியிருந்தான். காயமடைந்தவர்களை சாகும்வரை விட்டுவிடும் முடிவைத் தான் முதலிலேயே எடுத்து விட்டதாகவும் ஒத்துக்கொண்டான்.

டயரின் இக்கூற்றை வெஸ்ட் மினிஸ்டர் கெசட் இதழின் ஆசிரியர் பார்வைக்கு நாயர் கொண்டு சென்றார். இதன் அடிப்படையில் அவர் எழுதிய கட்டுரை இங்கிலாந்து முழுவதும், பரபரப்பை ஏற்படுத்தியது. அமிர்தசரசில் உண்மையில் என்ன நடந்தது என்பது இங்கிலாந்தின் பொதுமக்களுக்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டிருப்பதாக "தி மார்னிங் போஸ்ட்" இதழ் எழுதியது. டயர் குறித்த திறனாய்வுடன் கூடிய தன் கருத்துக்களை மாண்டேகுவிற்கு நாயர் எழுதியனுப்பினார். இந்தியாவுக்கான செயலாளரின் பேரவையில் உறுப்பினர் பொறுப்பை நாயருக்கு வழங்குவதாக மாண்டேகு கூறினார். நாயர் அதை ஏற்றுக்கொண்டு 2-1-1920 இல் அப் பேரவையில் உறுப்பினரானார்.

**ஆணையத்திலிருந்து குழுவிற்கு**

பஞ்சாப் கொந்தளிப்பு குறித்த இந்திய அரசின் அறிக்கையானது நாயர் இப் பதவியை ஏற்றுக்கொண்ட

சில நாட்களில் இந்தியாவுக்கான செயலாளரின் பேரவைக்கு வந்தது. நாயரைத் தவிர ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் இந்திய அரசின் கருத்தை ஏற்றுக் கொண்டனர். பஞ்சாபில் இந்திய அரசின் செயல்பாடுகள் கண்டனத்திற்குரியவை என்ற கருத்தமைந்த அறிக்கையை நாயர் முன்வைத்தார்.

இவ்விரண்டு அறிக்கைகளும் கலைந்து போகும்படி மக்களிடம் கூறாமை, எச்சரிக்கை செய்யாது சுட்டமை, மக்கள் திரள் கலைந்துபோக ஆரம்பித்த பின்னரும் சுட்டமை என்ற செயல்களுக்காக ஜெனரல் டயரைக் கண்டித்தன. இச் செயல்களின் மூலம் மாபெருந் தவறை டயர் செய்ததாகக் கூறின. ஆயினும் ஏப்ரல் 13க்கு முன் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடை நியாயமான செயல் என்று ஆங்கிலேய உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். குழுவின் உறுப்பினர்களாய் இருந்த இந்தியர்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.இது போல் இராணுவச் சட்டம் நடை முறைப்படுத்தப் பட்டதைப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர்.ஜெனரல் டயரின் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கியதில் ஓட்வியர் தன் அறிவைச் செலுத்தியிருக்க வேண்டும் என்றும் விமர்சனம் செய்திருந்தனர். சலாம் இடும் கட்டளை, ஊர்ந்து செல்லும் கட்டளை என்ற இரண்டையும் விசாரணை ஆணையம் கண்டித்திருந்தது.

இருப்பினும், டயர் மீது எந்த நடவடிக்கைக்கும் விசாரணை ஆணையம் பரிந்துரைக்கவில்லை. இந்தியப் பணியில் இருந்து அவனை விடுவித்து மருத்துவ விடுப்பில் செல்லும்படி இந்திய அரசு பணித்தது. ஹண்டர் விசாரணை ஆணையத்தின் அறிக்கையைப் படித்த மாண்டேகு அது வெளிப்படுத்தியுள்ள உண்மையைப் பரிசீலிக்க குழு ஒன்றை அமைக்கும்படி இங்கிலாந்தின் மந்திரிசபையைத் தூண்டினார். அதன்படி குழு ஒன்று அமைக்கப்பட்டது. குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான வின்சண்ட் சர்ச்சில் டயர் தண்டிக்கப்படவேண்டும் என்று விரும்பினார். குழுவும் இதே கருத்தைக் கொண்டிருந்தது. ஆனால் இராணுவத் தலைமை இதை ஏற்றுக் கொள்ளவில்லை. உடல் நலம் குன்றிவந்த நிலையில் பணியில் இருந்து விலகிக்கொள்ள அனுமதிக்கப்பட்டான்.

மற்றொரு பக்கம் தன் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வேண்டி மாண்டேகுவைச் சந்திக்க ஓட்வியர் முயன்றான். அதில் பயன் கிட்டா நிலையில் தாமும் ஜெனரல் டயரும் மேற்கொண்ட செயல்கள் சரியானவை என்ற கருத்தை நிலைநாட்ட இங்கிலாந்தின் பிரதமராக இருந்த லாயிட் ஜார்ஜை சந்தித்தான். அவனது முறையீடு கேட்கப்பட்டதோடு முடிந்து போயிற்று. ஜாலியன் வாலாபாக்கிலும் பஞ் சாபிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியாது என்பதில் இங்கிலாந்து அரசு தெளிவாக இருந்தது.

### சங்கரன் நாயரின் நூல்

காந்தியுடனான தன் கருத்து மாறுபாடுகளை வெளிப்படுத்தி, “காந்தியும் அரசு இல்லாக் கொள்கையும்” *(Gandhi and Anarchy)* என்ற நூலை எழுதினார். இந்த நூலில் காந்தி மேற்கொண்ட சிவில் சட்டமறுப்பு இயக்கத்துடன் தமக்கு உடன்பாடு இல்லாமையை வெளிப்படுத்தியிருந்தார். அகிம்சை, ஒத்துழையாமை, சிவில் சட்ட மறுப்பு என்பனவற்றை மேற்கொண்டு இந்தியா தன்னாட்சி *(Home Rule)* பெறமுடியும் என்பதை அவர் நம்பவில்லை. இத்தகைய இயக்கமானது ஒழுங்கின்மை, குழப்பம், கலகம், இரத்தம் சிந்துதல் என்பனவற்றை ஏற்படுத்தும் என்று நம்பினார். இது குறித்து, தன்னுடைய மாற்றுக்கருத்துக்களை இந்நூலில் பதிவு செய்திருந்தார்.

அத்துடன் பஞ்சாப் மாநிலத்தில், குறிப்பாக அமிர்தசரஸ் நிகழ்வுகள் குறித்து சில கருத்துக்களையும் வெளிப்படுத்தியிருந்தார். அவற்றின் சாரம் வருமாறு:

பஞ்சாபின் துணை ஆளுநராக இருந்த ஓட்வியர் மேற்கொண்ட வன்கண்மையான முறைகளும், இராணுவச் சட்ட நடைமுறைகளும், குஜ்ரவாலில் விமானம் மூலம் குண்டு வீசித் தாக்கியதும் டயர் நடத்திய ஜாலியன் வாலாபாக் படுகொலையும் பஞ்சாப்பில் உருவான அமைதியின்மைக்குக் காரணம்.

ஓட்வியர் முற்றிலும் அறிந்தே, அவரது அனுமதியுடனேயே பஞ்சாபில் அட்டூழியங்கள் நிகழ்ந்துள்ளன.

சங்கரன் நாயர் எழுதிய நூலின் ஒரு படி இந்தியாவிலுள்ள அவரது நண்பர் வாயிலாக ஓட்வியரைச் சென்றடைந்தது. அதைப் படித்ததும் பஞ்சாப் நிகழ்வுகளின் காரணமாகத் தனக்கு ஏற்பட்டிருந்த அவப்பெயரைப் போக்கிக்கொள்ளும் கருவியாக இந்நூலைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்து விட்டான். ஹண்டர் ஆணைய அறிக்கை, பிரித்தானிய அரசு எடுத்த நடவடிக்கைகள், என்பனவற்றில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் வழிமுறையாக இந்நூலை எழுதிய சங்கரன் நாயர் மீது அவதூறு வழக்குத் தொடுத்தான்.

### வழக்கு

16.ஜுன் 1922இல் இங்கிலாந்தில் உள்ள உயர்நீதி மன்றத்தை *(King ‘s Bench)* இதற்காக அவன் தேர்வு செய்தான். இதில் பணியாற்றும் ஆங்கில நீதிபதிகள் தன் பக்கம் இருப்பார்கள் என்பதை அவன் உணர்ந்திருந்தமையே இத் தேர்வுக்கான காரணமாகும்.

தாம் எழுதிய நூலை, சங்கரன் நாயர் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும், மன்னிப்புக் கேட்கவேண்டும். அத்துடன் ஓட்வியர் குறிப்பிடும் அறச்செயல்களுக்கு ஆயிரம் பவுண்ட் பணம் தரவேண்டும் என்று நீதிமன்ற மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(தொடரும்)

கட்டுரை

# பாரதியும் கலைச் சொல் கோட்பாடும்

டாக்டர் சு.நரேந்திரன்



அறிவியல் கலைச் சொல் வரலாற்றின் இடைக்காலம், சுதந்திரப் போராட்டம் வேகம் பெற்று விளங்கிய காலம். ஆங்கில மொழி மிகுந்த செல்வாக்கினையும் பெற்றிருந்தது. ஆங்கிலம் அறிந்தோர் செல்வாக்கு உடையவர்களாகக் கருதப்பட்டனர். மற்றவர்கள் தாம் பிற்படுத்தப்பட்டது போன்ற தாழ்வு மனப்பான்மையை அடைந்தனர். இவர்கள் அரசுத்துறையிலும், நீதிமன்றங்களிலும், கல்வித்துறைகளிலும் பெரும் பதவி வகித்தனர். இதனால் பாமர மக்கள் தங்களுக்கு எதிரான ஒரு சங்கேத மொழியாக அது பயன்பட்டதென்ற உணர்வினால், தாம் பிற்படுத்தப்பட்டது போன்ற தாழ்வு மனப்பான்மையை அடைந்தனர். தமது இழிவு நிலை மாற அனைத்து மட்டங்களிலும் அனைவருக்கும் தெரிந்த தாய்மொழியான தமிழே இருக்க வேண்டும் என்ற உணர்வு அவர்கட்கு ஏற்பட்டது. ஆகவே விடுதலைக்குப் போராடிய தமிழர்கள் காலனி அரசை எதிர்த்தனர். இவ்வெறுப்பு அவர்களது மொழியான ஆங்கிலத்தின் மீதும் அதிகமாக எதிரொலித்தது. இக்காலகட்டத்தில்

தமிழ்நாட்டில் தொழிற்புரட்சியின் காரணமாகவும் பல அறிவியல் நூல்கள் தமிழில் எழுதப்பட்டன. இதற்குக் கலைச் சொற்கள் தேவைப்பட்டன. இச்சொற்கள் எப்படி அமையவேண்டும் என்று நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடியாக அறியப்படுகிற பாரதியார் தமிழில் அறிவியல் எழுதப்பட வேண்டும் என்ற தீராத வேட்கையுடன் இந்திய மொழிகளிலும் கலைச்சொற்களை ஆக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கருதினார்.

"பஞ்சபூதங்களின் இயற்கையைப் பற்றின ஆராய்ச்சிகளிலே நம்மைக் காட்டிலும் ஐரோப்பா முன்னேறி நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால் ஐரோப்பாவில் வழங்கும் லௌகீக சாஸ்திரங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று சில பண்டிதர்கள் மிகவும் ஆவலோடிருக்கிறீர்கள்; இந்த முயற்சி மேன்மேலும் வளரும்; வளர வேண்டும். வளர்ந்து தீர வேண்டும். அந்த சாஸ்திரங்களையெல்லாம் ஏக காலத்தில் எழுதி முடிப்பதற்காக ஒரு பண்டித சங்கை ஏற்படக் கூடும். நமது இராஜாக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், செட்டிகளுக்கும் நல்புத்தியுண்டாக்கித் தமிழில் நவீன சாஸ்திரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்களின் உதவியைக் கொண்டு விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக்கூடும்". *(சி. சுப்பிரமணிய பாரதி 1981:208)* என்ற அவரின் கூற்று வெளிப்படுகிறது. தமிழில் அறிவியல் நூல்கள் எழுதும் பொருட்டு அறிஞர்களின் அமைப்பு ஒன்று தொடங்குவது தேவை என்ற பாரதியின் கருத்து கவனிக்கத் தக்கது. அவர் இக்கருத்தைக் கூறிய காலகட்டத்தில் இலக்கிய, இலக்கண நூல்களைப் பதிப்பிப்பதிலும், புது நூல்களை அச்சிட்டு வெளியிடுவதிலும் தமிழ்நாட்டு ஜமீன்தார்களும், கிழக்காசிய வணிகத்தில் ஈடுபட்டிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் அதிக அக்கறை காட்டி வந்தனர்.

*1850*இல் சென்னைக் கல்விச் சங்கம் *(The Madras School Society)* நிறுவப்பட்டு அறிவியல் பாடநூல்களும் ஆக்கப்பட்டன, மொழிபெயர்ப்பு நூல்களும் கொணரப்பட்டன. இப்பள்ளிகளில் எல்லாம் தேசியக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற இயக்கம் வலுத்தது. இது பற்றி பாரதியார் பின்வருமாறு "தேச பாஷையின் மூலமாகவே சரித்திரப் படிப்பு மட்டுமேயன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். பௌதீக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில் மிகவும் தெளிவாக எளிய நடையில் பிள்ளைக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும்" என்று எழுதினார். மேலும் இந்திய மொழிகளிலும் கலைச் சொற்கள் ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கருதி அவ்வாறு கலைச் சொற்களை உருவாக்க 'ஸ்ரீகாசியிலே நகரிப்' சாரணி சபையார் ஐரோப்பிய ஸங்கேதங்களையெல்லாம் எளிய சமஸ்கிருதப் பதங்களில் போட்டு மிகப் பெரியதோர் அகராதி உண்டாக்கியிருக்கிறார்கள். அந்தச் சொற்களை வேண்டியவரை இயன்றவரை தேசிய பாஷைகள் எல்லாவற்றிலும் ஏக காலத்தில் கைக்கொண்டு வழங்கலாம். இவ்வாறு செய்தால் நமது தேசிய பாஷைகளில் சங்கேத ஒற்றுமையேற்படும் *(சி.சுப்பிரமணிய பாரதி 1977:209)* என்றுரைத்தார். இவ்வாறு ஐரோப்பியக் கலைச் சொற்களுக்கு இணைச் சொற்களாக சமஸ்கிருதச் சொற்களையே ஏற்றுக் கொள்ளலாம் என்பது இந்திய மொழிகளில் சமஸ்கிருதச் சொற்களால் மட்டுமே அறிவியலை வெளிப்படுத்த இயலும் என்ற அக்கால மொழிநிலைத் தாக்கத்தின் காரணமாக, பாரதி இக்கருத்தை வெளிப்படுத்தியிருக்கக் கூடும்.

இதே ஆங்கில மொழி எதிர்ப்பு தமிழ், சமஸ்கிருத ஆதரவு என்பது மகாகவிக்கு இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நீடித்ததை கலைச் சொல் வரலாற்றின் முதல் கட்டம் எனலாம். இதே கருத்தை பிறிதொரு இடத்தில் மிக ஆழமாகக் குறிப்பிடுகிறார். "தமிழ்நாட்டில் தேசியக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ்ப் பாஷையைப் பிரதானமாகக் காட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால் அதே தேசியம் என்ற பொருளுக்கு முழுவதும் விரோதமாக அமையுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே பிரதானமென்பது தேசியக் கல்வியின் பிரதானக் கொள்கை. இதனை மறந்துவிடக்கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாட்டிலிருந்து பரிபூரண ஸஹாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால் இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் செய்து அறிவிக்க வேண்டும். இன்றும் நம் பாரததேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூர்ணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக எனினும் தமிழ்நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்று தழைத்திடுக" *(1977 : 296,297)* என்று கூறுவதிலிருந்து அவரின் ஆங்கில மொழிக் கல்வி வெறுப்பையும் அதேசமயம் அவரது தமிழ்மொழிப் பற்றையும் வடமொழி ஆதரவையும் அறியமுடிகின்றது.

### கலைச்சொல்லாக்கக் கோட்பாடு

பாரதியார் கலைச் சொல்லாக்க முறை பற்றியும் கருத்து தெரிவித்துள்ளார். "பௌதீக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில் மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளைக்கு மிகவும் சுலபமாக

விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடங்களிலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும். திருஷ்டாந்தமாக ஆக்சிஜன், நைட்ரஜன் முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கனவே தமிழ்நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களை வழங்க வேண்டும். (சி.சுப்பிரமணிய பாரதி 1977 : 236) என்கிறார். இது போலவே மற்றொரு கட்டத்தில் தமிழிலேயே சொற்கள் வேண்டும் என்று கூறுகிறார். "அதன் மேலே காட்டிய குறியில் பொருள் யாது, தமிழ்நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல் னகரம் புள்ளி இறுதியாக எல்லா வயஹாரங்களும் தமிழ் பாஷையில் நடத்த வேண்டும் என்பது பொருள். ஆரம்ப விளம்பரம் தமிழில் பிரசுரம் செய்ய வேண்டும். பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டால் அங்கு நூல்களை எல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவது மட்டுமின்றி பலகை, குச்சி எல்லாவற்றிற்கும் தமிழிலேயே பெயர் சொல்ல வேண்டும். ஸ்லேட் என்ற சொல்லக் கூடாது" என்று கூறும் பாரதி கலைச் சொல்லாக்கத்தில் தெளிந்த, எளிய தமிழ்நடையை வற்புறுத்துவதோடு, ஏற்கனவே வழங்கிவரும் சொற்களுக்கும் புதிய சொற்களும் உருவாக்கத் தேவையில்லை என்கிறார்.

கலைச் சொற்களைத் தமிழில் தேடவேண்டும், தமிழில் கிடைக்காதபோது சமஸ்கிருதத்தில் தேடவேண்டும். இரண்டு மொழிகளிலும் கிடைக்காதபோது மட்டும் ஆங்கிலத்தில் தேடவேண்டும் என்ற அவரின் கருத்து, இலங்கையில் தமிழில் மேலை மருத்துவ நூல்களைப் படைத்த மருத்துவர் கிறீனின் கருத்துக்களுடன் ஒத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் கிறீன் 1867 லேயே கலைச்சொல்லாக்கக் கோட்பாடுகளைத் தந்தவர். அவரது சொல் வரிசை, தமிழ்-சமஸ்கிருதம்-ஆங்கிலம் என்ற முறை. முதலிலே கலைச் சொற்கள் தமிழ்ச் சொற்களாகப் படைக்கப்பட வேண்டும். இயலாதெனின், சமஸ்கிருதச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட இருமுறைகளிலும் சொற்களை ஆக்க இயலாத நிலையில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்று விதி செய்தார்.

இக்கருத்தை "தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் சமஸ்கிருதப் பதங்களையே வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமின்றி கிரயங்களுக்கும், அவஸ்தைகளுக்கும் நிலைமைகளுக்கும் தமிழ் சமஸ்கிருத மொழிகளாலே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப்படுத்தலாம்" என்கிறார் மகாகவி. (சி.சுப்பிரமணிய பாரதி 1977:236) பாரதியின் கலைச் சொல்லாக்கக் கோட்பாடு தமிழ்-சமஸ்கிருதம்-ஆங்கிலம் என்ற வரிசையில் அமைந்துள்ளது. இது அக்கால கட்டத்தில் நிலவி வந்த அகில இந்திய மொழிக் கொள்கையின் தாக்கமாகும். ஆனால் கிறீனின் கலைச் சொல்லாக்க அடிப்படைகள் அக்கால மொழி நிலையையும் கல்விப் பயனையும் கருத்தில் கொண்டது ஆகும்.

பாரதியாரின் இந்நோக்கு இராஜாஜி தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கம் ஆரம்பித்து கலைச்சொற்களுக்கென ஒரு திங்களிதழை ஆங்கிலத்தில் வெளியிட்ட பொழுதும் தெளிவாகத் தெரிகிறது. (பாரதியார் கட்டுரைகள் 1977) பிறிதொரு இடத்தில் பாரதி நல்ல கலைச் சொல்லைக் கண்டுபிடிக்கப்பட்ட பாட்டை விளக்குகிறார்.

"மெம்பர் என்பதற்குச் சரியான சொல் எனக்கு அகப்படவில்லை. இதில் ஆச்சர்யத்திலும் 'ஆச்சர்யம்' அவயவி சரியான வார்த்தை இல்லை. 'அங்கத்தான்' கூட்டி வராது. 'சபிகன்' சரியான பதம் தான். ஆனால் பொதுமக்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன். உறுப்பாளி, ஏதெல்லாமோ யோசித்து நினைத்தேன். ஒன்றும் மனத்திற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன். கடைசியாக மெம்பர் என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆர அமர யோசித்துப் பார்த்து சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்லுகிறேன்..." என்று கூறுகிறார்.

இதில் பாரதியாருக்கு உள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்க வேண்டும் என்ற பேரார்வம் வெளிப்படுகிறது. மாறாக வடமொழிச் சொல்லும், தமிழுக்கு வேற்று மொழிச் சொல்தான் என்னும் கருத்து அவருக்கு ஏற்படவில்லை. அவ்வடசொற்களை தன் கட்டுரைகளில் கலந்து எழுதுகிறார். இந்நிலையில் அறிவியலை தமிழில் சொல்ல முடியுமோ? என்பதற்கும் பதில் அளிக்கிறார். "தமிழ் நாட்டு ஜனங்களுக்குள்ளே வழக்கமான பிறகல்லவோ அவை தமிழ் பாஷையிலே வழக்கமாவதற்குச் சுலபமாகும். நீராவியால் ஓட்டப்படும் இரயில் வண்டி இந்நாட்டிலே வழக்கமாயிருக்கிறது. இப்போது பொது ஜனங்கள் அதற்கு வார்த்தை உண்டாக்கிக் கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சார சக்தியால் தந்தி ஏற்பட்டிக்கிறது. அதற்குத் தமிழர்கள் வார்த்தை உண்டாக்கிச் கொள்ளவில்லையா? கோவணமில்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்க




வஸ்திரத்திற்குப் பெயர் கிடையாது என்றால் அதற்கு அவர்களுடைய பாஷையின் மேல் என்ன குற்றமிருக்கிறது'' என்று விடையளிக்கிறார்.

இதை அடுத்து ''தமிழ்நாட்டில் முழுவதும் தமிழ் நடையை விட்டு விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம். நம் பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது'' என்று வருந்துகிறார். பாரதியின் கருத்துகளுக்கு உயிர் கொடுக்கும் விதமாகக் காலனி அரசு இந்திய சமுதாயத்தின் மீது திணித்த ஆங்கிலக் கல்வி முறையை எதிர்த்தும் தேசியக் கல்வி முறையை ஆதரித்தும் காங்கிரஸ் மகாசபை அதிகாரப் பூர்வமாக, தீர்மானம் நிறைவேற்றியது.

''தேச பாஷைகள் எல்லாவற்றிலும் ஏக காலத்தில் சமஸ்கிருத பதங்களைப் பயன்படுத்தலாம்'' என்று பாரதியார் கூறியது இதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு வளரும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே எனலாம். ஆங்கிலத்தை ஆதிக்க மொழி என வெறுத்தொதுக்கி, அயல்மொழிக் கல்வியை அகற்றி நாட்டு மொழிகளிலேயே கல்வியைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற உணர்வுத் துடிப்பு கொண்ட தேசிய இயக்கத்தினர் சமஸ்கிருதத்தை இந்தியாவுக்குப் பொதுவான மொழியாகக் கருதியதால் ஆங்கிலக் கல்வியை அகற்றுவதற்கு சமஸ்கிருதத்தின் துணையை நாடினர்.

காந்தியடிகளால் பெரிதும் மதிக்கப்பட்ட இந்தியக் கல்வியாளர்களில் ஒருவராகிய ஸ்ரீமந்நாராயண் அகர்வால் ''தற்போதைக்கு, மாகாண மொழிகள் சமஸ்கிருதம் அல்லது அரபு-பாரசீக மொழியையோ அல்லது இரண்டு மொழிகளையுமோ அடிப்படையாகக் கொண்டு கலைச்சொற்களை ஆக்கிக் கொள்ளலாம்'' என்று கருத்து தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. தேசியவாதிகளின் கல்வி பற்றிய கொள்கையையே அகர்வால் எடுத்துக் கூறினார். இத்தகைய கொள்கையின் விளைவாக மாநில மொழிகளின் வளர்ச்சி தடைபடும் என்பதை அவர்கள் உணர்ந்திலர். எனவே இத்தகைய கலைச் சொற்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது தமிழ் மறு மலர்ச்சியாளர்கள் எதிர்ப்புக்குரல் கொடுத்தனர்.

சமஸ்கிருத மேலாண்மையை (சொல்லாக்கம். சி.மறைமலை ப.32) விரும்பியவர்களுக்கும் சமஸ்கிருத மேலாண்மையால் தமிழ் வளர்ச்சி தடைபடும் என்று எச்சரித்த தமிழியக்கத்திற்கும் இடையேயான போராட்டம் 1930-ஆம் ஆண்டிற்கு முன்பே தொடங்கி விட்டது எனலாம்.

1920களில் தனித்தமிழ் இயக்கம் தமிழ்நாட்டில் மறைமலையடிகளால் துவங்கப் பெற்றது. அதன் காரணமாக வடமொழி எதிர்ப்பு தீவிரமடைந்தது. 1932இல் சென்னை அரசு கலைச் சொல் பட்டியலை வெளியிட்டது. அதில் ஏராளமான வடசொற்கள் கலந்திருந்தன. அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் நோக்கில் தமிழிலே சொற்களை உருவாக்கி சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 1936இல் ஒரு கலைச் சொல் பட்டியலை வெளியிட்டனர். இதில் தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபட்டோர்களால் தமிழ்க் கலைச் சொற்கள் அதிகமாக உருவாக்கப்பட்டன.

அறிவியல் தமிழ் வளர்ச்சி காரணமாக சில இலக்கண நெகிழ்வைக் கூட ஏற்றுக் கொள்ள வேண்டிய காலகட்டம் ஏற்பட்டது. இக்காலத்தில் பாரதியைக் கொண்டாடியவர்கள் கூட ஆங்கிலம் போன்ற பிறமொழிச் சொற்களை தமிழ்மொழி வளர பயன்படுத்துவதில் தயக்கம் கூடாது என்றனர்.

ஒருவன் தன் கருத்துக்கும் தான் எழுத முற்பட்ட நூலின் தன்மைக்கும் ஏற்பச் சொற்களை எடுத்தாளும் போது பிறமொழிச் சொற்கள் சிலவற்றையும் பயன்படுத்துவதால், தமிழின் பெருமையோ வளர்ச்சியோ குன்றிவிடாது என்கிறார் பேரா.வையாபுரிப்பிள்ளை. தமிழ் மொழியைக்

கடலாகவும் வழக்கில் புகும் பிறமொழிச் சொற்களைப் பல ஆறுகளிலிருந்து வரும் நீராகவும் உவமிக்கிறார். இவர் மேலும் எழுத்து, சொல், புதிய உருபுகள் புதிய வினைவாய்ப்பாடுகள், புதிய வாக்கிய அமைதி ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய இலக்கணம் தமிழ்மொழிக்கு எழுத வேண்டும் என்றும் கூறுகிறார். *(1947:154-155)*.

டி.கே.சி. சில கடிதங்களில் அறிவியல் சொல்லாக்கம் குறித்த தம்முடைய எண்ணத்தைப் புலப்படுத்தியுள்ளார். பிற மொழிகளிலுள்ள அறிவியல் தொடர்பான கலைச் சொற்களை, அம்மொழிகளில் உள்ளவாறே வழங்க வேண்டும் என்பதும் அவற்றைத் தமிழாக்கம் செய்தல் பயனற்றது என்பதும் இவர்தம் கொள்கைகளாம்.

"மேல்நாட்டான் ஒரு பிள்ளையைப் பெற்றான். அதற்கு ஏதோ 'விக்டர்' என்று பெயரிட்டான். நாமும் அவனை 'விக்டர்' என்று சொல்லிவிட்டால் தமிழ் கெட்டா போகும்? போகாது" என்கிறார் டி.கே. சிதம்பரனார்.

தமிழக சட்டப் பேரவைத் தலைவர் (சபாநாயகர்) தமிழ்க்குடிமகன் சென்னையில் செப்டம்பர் 11,12, 1989இல் நடைபெற்ற பாரதி விழாவில் பேசியபோது, 'எத்தனையோ மொழிகள், எவ்வளவோ முன்னேறி-யிருக்க, மிகத் தொன்மையான தமிழ்மொழி போதிய வளர்ச்சியடையவில்லையே, எனத் தம் ஆதங்கத்தை வெளியிட, அதற்குக் 'கல்கி'ப் பத்திரிகை போதிய அளவில் வளர்ச்சியடைந்தால்தானே சாத்தியமாகும் எனவும், இது மட்டுமா? நவீன விஞ்ஞான யுகத்திற்கு ஏற்பத் தமிழ் வளம் பெறவேண்டும். இருபத்தோராம் நூற்றாண்டை அதன் பிரமிக்கத்தக்க விஞ்ஞான முன்னேற்றத்தை அற்புதங்களை எதிர்கொண்டு வரவேற்கத் தமிழ் தயார் நிலையில் இருக்க வேண்டும். ராக்கெட் வேக வளர்ச்சி தேவை. இதை எப்படி சாதிப்பது? எனக் கேட்டு அதற்குரிய தம் கருத்தினை கீழ்கண்டவாறு வெளியிடுகிறது 'கல்கி'.

ராஜாஜி இந்தப் பிரச்சினை குறித்து நிறைய யோசித்திருந்தார். ஆரம்பகாலத்தில் கலைச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் அவரே ஆர்வம் காட்டியிருக்கிறார். பின்னர் டி.கே.சி.யின் கருத்தை ஏற்றுத் தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டார். வளர்ச்சியுற்ற மொழிக்குத்தான் அகராதியே தவிர, கலைச் சொல்லாக்கம் என்ற பெயரில் கோடிக்கணக்கில் செலவிட்டு அகராதி தயாரிப்பதில் மொழி வளராது என உணர்ந்தார். "கலைச் சொற்களை எல்லாம் மொழிபெயர்த்துக் கொண்டிருப்பது வீணான வேலை, இலேசான ஒலி மாற்றம் செய்து, தமிழில் எழுதிவிட்டால் போதும், அவை தமிழாகிவிடும் என்பது டி.கே.சி.யின் கருத்து. 'டெலிபோன், ரயில், கார், சைக்கிள் போன்ற சொற்களை தமிழ் என்றே சமுதாயம் ஏற்றுக் கொண்டுவிட்டது. அதுபோல தித்தானியம், குரோமியம், யூரேனியம் போன்ற எண்ணற்ற விஞ் ஞானக் கலைச் சொற்களையும் தமிழ் என்றே ஏற்றுக் கொண்டு விடலாம்" என்பது டி.கே.சி.யின் முடிவு.

இதுபற்றி டி.கே.சி., ராஜாஜி மட்டுமல்ல அவர்களுக்கு முன்பாகவே பாரதியாரும் கருத்து தெரிவித்திருக்கிறார் *(பாரதி நூல்கள் கட்டுரைகள் பக்.516-518.)* ஆங்கிலப் பாடநூல்களை வைத்துக் கொண்டு, ஆங்கிலக் கலைச் சொற்களையே பயன்படுத்தி, தமிழில் ஆசிரியர்கள் விஷயத்தை மாணவர்களுக்கு விளக்கிக் கூறிவந்தால் தமிழ் அந்தக் கலைச் சொற்களை அப்படி அப்படியே நாளடைவில் ஏற்றுக் கொண்டுவிடும் என்ற ராஜாஜியின் கருத்து பாரதியின் கருத்தை ஒட்டியதாகவே உள்ளது.

●

## FORM - IV

Statement about ownership and other particulars about newspaper New Centuryin Ungal Noolagam to be published in the first issue every year after the last day March.

1. Place of Publication : Chennai

2. Periodicity of its Publication : Monthly

3. Printer's Name : A.Sivakumar
   Nationality : Indian
   Address : Pavai Printers (P) Ltd., 16(142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

4. Publisher's Name : Shanmugam Saravanan
   Nationality : Indian
   Address : New Century's Readers Sangam, 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

5. Editor's Name : T.Stalin Gunasekaran
   Nationality : Indian
   Address : 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

6. Names and addresses of individuals those who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

I, Shanmugam Saravanan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Shanmugam Saravanan)

Signature of Publisher


## என்.சி.பி.எச் சிறுநூல் வரிசையில்...

மே 2021 வெளியீடு

# பாரிஸ் கம்யூன்: 150 ஆண்டுகள்

**மார்செல்லோ முஸ்ட்டோ**

ஆங்கிலம் வழி தமிழில்: **எஸ்.வி.ராஜதுரை**




மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் உலகின் முதல் பாட்டாளிவர்க்க அரசு என்று அழைக்கப்பட்டதும் பூர்ஷ்வா வர்க்கத்தால் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டதுமான **'பாரிஸ் கம்யூனி'ன்** 150ஆம் ஆண்டு நிறைவையொட்டி இந்த சிறுநூல் வெளிவருகின்றது.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050

☎ 044-26251968, 26258410, 48601884 | Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



# மருத்துவர் ஜீவா ஒரு வற்றாத சிந்தனை நதி

க. பழனித்துரை

என்னை ஓட ஓட விரட்டி சிந்தித்து களத்தில் செயல்பட வைத்தவருள் மருத்துவர் ஜீவாவும் ஒருவர். என்னைப் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியே எடுத்து களத்தில் செயல்பட வைக்க பல களச் செயல்பாட்டு ஆளுமைகளை என் துறைக்கு அழைத்து வந்து என்னுடன் உரையாட வைத்து செயல்பட்டவர் மருத்துவர் ஜீவா அவர்கள். என்னை இரவு 9.00 மணிக்கு மேல் தொடர்பு கொண்டு எனக்குக் களத்தில் வேலைத்திட்டத்தை தீட்டித் தந்து கொண்டே இருந்தவர்கள் இருவர். ஒருவர் ஏ.கே.வெங்கடசுப்ரமணியன் என்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி, அடுத்து மருத்துவர் ஜீவா. இருவரும் காந்தியத்தின் மீது நம்பிக்கை கொண்ட மனிதர்கள். இருவரும் என் பணிக்கு உறுதுணையாய் இருந்தவர்கள். மருத்துவர் ஜீவா சமுதாய நோய்க்கு மருத்து கண்டுபிடிக்கும் சமுதாய மருத்துவராக அறியப்பட்டவர். காந்திகிராம பல்கலைக்கழகத்தின் மீது அதிக நம்பிக்கை கொண்டு காந்திகிராம பல்கலைக் கழகத்திற்காக சிந்தித்த மாமனிதர். காந்திகிராமத்தில் பணி செய்வோர் கூட அப்படிச் சிந்தித்தது இல்லை. அந்த அளவுக்கு காந்திகிராமத்தின் மீது எதிர்பார்ப்பை வளர்த்துக் கொண்டு ஏங்கி நின்றவர். அவர் என்னுடன் களப்பணிக்கு சிந்திக்கும் ஒரு சகாவாக இருந்தார் என்றுதான் கூறவேண்டும். அவர் எப்போதும் தேடுதலுடன்

வாழ்ந்து கொண்டிருப்பார். ஒன்று மனிதர்களைத் தேடுவார், அல்லது நிறுவனங்களைத் தேடுவார், அல்லது புது யுக்திகளைத் தேடுவார். தேடிக் கண்டுபிடித்து அவரவர்க்குத் தகுந்த பணியைக் கொடுப்பார். நிறுவனங்களுக்கும் புதுமைகளுடன் செயல்படத் தேவையான யுக்திகளைக் கண்டுபிடித்துத் தருவார். புத்தகமானால் படித்துவிட்டு நம்மைப் படிக்க வைத்து விமர்சனத்திற்கு இறக்கிவிடுவார். ஆங்கிலப் புத்தகமாக இருந்தால் சமூகத்திற்கு பயனுள்ளதாக இருந்தால் உடனே மொழி பெயர்ப்பு செய்து விடுவார். மொழி பெயர்த்த உடனே அச்சுக்குச் செல்ல வேண்டும் எனத் துடிப்பார். அந்த அளவுக்கு செயல்பாட்டில் வேகம் அவரிடம் பார்க்க முடியும். எவரிடமும் இல்லாத புதுவித ஓட்டமாகச் செயல்படுவார். அவர் மிக எளிமையாக காந்தியையும் மார்க்ஸையும் இணைத்துப் பார்க்கக் கூடியவர். நல்ல சிந்தனைக்கு உடனே செயல் திட்டம் தீட்டி செயல்பாட்டுக்கு களம் வந்து விடுவார். அவரின் தூண்டுதலால் பலரை இயங்க வைத்து சாதனைகள் பல செய்துள்ளார். என்னைப் போன்றோரின் மனச்சாட்சியைக் கலங்கடித்து அவர் நினைத்ததை நடத்திக் காட்டி விடுவார். அவர் தன்னைப் பலருடன் இணைத்துக் கொள்வது நேரத்தைப் போக்க அல்ல. அவர் சதா சமூக மூலதனத்தின் மாண்பறிந்து அதைக் கட்டிக் கொண்டேயிருப்பார். அதுதான் அவர் சேர்த்த சொத்து.

அவர் ஊர்சுற்றத் தயங்குவதில்லை. அந்தப் பயணங்கள் என்பது கற்றுக்கொள்வதற்காக. கற்றதை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளாமல் இருந்தது கிடையாது. கற்றுக் கொள்வதில் எப்போதும் ஆர்வம் மிக்கவர் அவர். அதைவிட கற்றதை நடைமுறைப்படுத்த முயல்வதிலும் அவர் வல்லவர். எதையும் துரிதமாக செயல்படுத்தும் வல்லமை பெற்றவர். காரணம் வியாபார யுக்தி அவருக்குக் கைவந்த கலையாக இருந்ததால். இந்த உலகம் வேகமாக இயங்குகிறது, எனவே அந்த வேகத்துக்கு நாம் செயல்படவில்லை என்றால் தோற்றுவிடுவோம் என்று அடிக்கடி கூறுவார். பழமையைத் தேடித் தேடிப் பிடித்து படித்து அவைகளில் உள்ள சாரத்தை எடுத்து நவீனப்படுத்திக் கொடுப்பதில் அவருக்கு ஈடு இணை கிடையாது. காந்திகிராமத்தின் மீது அளவற்ற பற்றுக் கொண்டு காந்திகிராமம் காந்தியத்தை நவீனப்படுத்தி களத்தில் செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தார். நவீனத்துவ காந்தியவாதிகளை களத்தில் அடையாளம் கண்டு அவர்களைக் குழுவாக மாற்றி செயல்பட வைத்தவர். அவர்களுக்குத் தேவையான ஆதரவுச் சூழலை உருவாக்குவதிலும், அவர்களின் தொடர்பை விரிவாக்கிக் கொடுப்பதற்கும் கடைசிவரை தொடர்ந்து பயணித்தவர். எப்படி அரவிந்த் கண் மருத்துவமனை சேவை வணிகம் என்ற கருத்தாக்கத்தை நடைமுறைப்படுத்தியதோ அதேபோல் நவீனக் கூட்டுறவுச் செயல்பாடுகளுக்கு தான் உருவாக்கிய மருத்துவமனை மூலம் ஒரு புதுக் கருத்தாடலை செயல்பாடுகளுக்குக் கொண்டு வந்தவர். எதையும் நடைமுறைச் சாத்தியத்தின் பின்புலத்தில் அலசிப்பார்த்து கருத்துக் கூறுபவர்.

இயற்கை மானுட உறவின் உன்னதங்களை முப்பது ஆண்டுகளுக்கு முன் புரிந்து கொண்டு பசுமை அரசியல் பேசியவர். பல நேரங்களில் அவர் ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகவே திகழ்ந்தார். ஒரு துறையில் நிபுணத்துவம் பெற்று அதில் ஆழ்ந்த நம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றியைச் சுவைத்தவர் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அவருடைய இரவு நேர உரையாடல்கள், சாதனை மனிதர்களைச் சந்தித்த அனுபவங்களைப் பகிர்தல் அவரிடம் நான் கண்டு வியந்த செயல்பாடு. அதற்கென்றே ஒரு முறைமை உருவாக்கி வைத்திருப்பார். பல அரிய புத்தகங்களைத் தருவித்து மதுரைக்குச் செல்லும்போது என்னிடம் தந்து விட்டுச் செல்வார். அதைப் படித்துப் பார்க்கும்போது, அந்தப் புத்தகங்களிலுள்ள கருத்துக்கள் பஞ்சாயத்துச் செயல்பாடுகளுக்கு எவ்வளவு பொருத்தப்பாடு உடையவையாக இருந்தன என்பதை அவரிடம் நான் கூறும்போது, அவைகளை அப்படியே தமிழில் எழுதுங்கள் என்று வற்புறுத்துவார். அப்படி நான் எழுதிய கட்டுரைகள் ஏராளம். அவருடன் நீண்ட பயணம் செய்வது ஒரு தனி அனுபவம். அந்த பயண நேரம் மிகப் பொருளுள்ளதாக மாறிவிடும். எந்தச் சிறுமைப் பேச்சும் இன்றி நாடும், மக்களும் இயற்கையும் என்ற கோணத்திலேயே விவாதங்களைக் கொண்டு செல்வது மிகவும் மனதுக்கு இதமாகவே இருக்கும். பல அரசியல் நிகழ்வுகளை பகிர்ந்து கொள்ளும்போது கோபமாகப் பேசுவார். பல உன்னதமான நிறுவனங்கள் தோற்றுப்போவதைப் பார்த்து ரௌத்திரம் கொண்டு என்னுடன் உரையாடி விட்டுச் சொல்வார், "பரவாயில்லை உங்களால் மிக எளிதாக இந்த நிகழ்வுகளை கடக்க முடிகிறது என்னால் கடக்க முடியவில்லை. உங்களை நான் தொந்தரவு செய்து விட்டேன்" என்பார். அரிய புத்தகங்களை மொழி பெயர்ப்பார். உடனே அதற்கு முன்னுரை எழுதத் தகுதி வாய்ந்த மனிதரைத் தேடுவார். ஒரு முறை அவர் என்னை அப்படி ஒரு புத்தகத்திற்கு முன்னுரை எழுதக் கேட்டுக் கொண்டார். அப்பொழுது நான் "வேறு யாராவது பெரிய மனிதர்களைத் தேடுங்கள்" என்றேன். அப்பொழுது

கூறினார், நான் முன்னுரை எழுதுவதற்கு ஆள் தேடுவது எதற்கு என்பதை நீங்கள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். நான் சமூகவியலில் பெரிய நிபுணர் அல்ல. கட்டுரைகள் எழுதுகின்றேன் பல துறைகளில். ஆனால் எனக்குப் புரிகிற அளவுக்கு புத்தகங்களை மொழி பெயர்த்து தருகிறேன். அந்தப் புத்தகத்திலுள்ள கருத்துக்கள் பொதுமக்களிடம் சேர வேண்டும் என்ற ஆதங்கத்தில் எழுதுகின்றேன். ஆனால் அவைகள் சமூகத்திற்கு பயன்படும் என்பது மட்டும் புரிகிறது. எனவே அவசரமாக மொழி பெயர்ப்பைச் செய்து விட்டேன். ஆனால் எனக்கு ஒன்றும் தெரியாது. அந்த புத்தகத்தின் கருத்தாழங்கள் சிதைவுறாமல், மாறாமல் என் மொழி பெயர்ப்பில் நான் கொண்டு வந்து விட்டேனா என்பதை, நிபுணர்களிடம் முன்னுரை வாங்கும்போது கண்டுபிடித்து விடுவேன்'', என்று கூறினார். அதன்பின் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தாமஸ் பெயின் எழுதிய 'பொது அறிவு' என்ற நூலின் மொழி பெயர்ப்புக்கு நான் ஒரு முன்னுரை எழுதினேன். அப்பொழுதுதான் நான் ஒன்றை ஜீவாவைப் பற்றி புரிந்து கொண்டேன்.

அவர் எதையும் கருத்துக்காக மட்டுமே செய்வதில்லை. மாறாக, இன்றைய சூழலுக்கு அந்தக் கருத்தாக்கம் எதாவது ஒரு வகையில் உதவிடுமா என்ற கோணத்தில் பார்த்துத்தான் செய்வார் என்று நான் அப்பொழுது தான் புரிந்து கொண்டேன். தாமஸ் பெயின் எழுதிய சிறிய புத்தகம் எனது முதுகலைப் பட்டப்படிப்பில் பாடமாக இருந்தது. மதிப்பெண் வாங்க அதைப் படித்துள்ளேன். அதை இன்று படிக்கும்போது, அதுவும் என் தாய்மொழியில் படிக்கும்போது, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் நம் அரசியலுக்கு தாமஸ் பெயின் கூறியது எவ்வளவு பொருத்தப்பாடுடன் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள உதவிகரமாக இருந்தது.

காந்தியைப் பற்றி லூயி பிஷர் எழுதும்போது கூறுவான் "நான் காந்தியிடம் வியந்து கண்டது பல அவைகளில் ஒன்று சமத்துவப் பார்வை'' என்று. அதேபோல் மருத்துவர் ஜீவாவின் சமத்துவப் பார்வை என்னை வியக்க வைத்தது. அந்தப் பார்வையை நம்மில் வளர்ப்பது அவ்வளவு எளிதல்ல, அதை வளர்த்துக் கொண்டு செயல்படுவதில் வல்லவர் அவரே. கடந்த ஆண்டு 2020 டிசம்பர் கடைசி நான் இரவு முழுவதும் காணொளிக் காட்சி மூலம் ஒரு கருத்தாய்வுக் கூட்டத்திற்கு சில நவீன காந்திய அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இரவு முழுவதும் அந்த நிகழ்வு நடந்தது. அவருக்கு இரவு ஒன்பது மணி ஒதுக்கப்பட்டிருந்தது. எனக்கு இரவு ஒரு மணிக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது பேசுவதற்கு. அதில் பங்கேற்றுப் பேசும்போது நம் அரசு மக்களை எப்படி மேய்க்க நினைக்கிறது, சந்தை எப்படி மயக்க நினைக்கிறது, சமூகம் எப்படி பிளவுபட்டு கிடக்கிறது, இதில் யாருக்காக இந்த மக்களாட்சி நடைபெறுகிறது என்பதை ஆதங்கத்துடன் பகிர்ந்து கொண்டார். ஆனால் நம்பிக்கை தளராமல் ஒரு செய்தியைச் சொன்னார். இன்றைய மயங்கிய இளைஞர் கூட்டத்திற்குள் ஒரு சாரர் நம்பிக்கையுடன் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டிருப்பது, நீர்நிலைகளைப் பாதுகாக்கும் பணிகளில் ஈடுபட்டிருப்பது, இயற்கை வளப் பாதுகாப்பிற்குச் செயல்படுவது, விதைகளைப் பாதுகாப்பது போன்ற பல்வேறு பணிகளை செய்வது பெரு நம்பிக்கையைக் கொடுக்கிறது என்று கூறி முடித்தார்.

அவரிடம் நான் கண்டு வியந்த மற்றொரு செயல், தெரியாததைத் தெரியவில்லை, எனக்குப் புரியவில்லை என்று குழந்தைகள் கூறுவது போல கூறுவார். அந்த மனோபாவம் என்பது கற்றுக்கொள்ளத் துடிப்பதாகும். எதையும் கற்றுக் கொள்ளவும் புரிந்து கொள்ளவும் தயாராக இருப்பதுடன் துடிப்புடன் செயல்பட தயாராக இருப்பதைக் காணமுடியும். ஆனால் கடைசி நேர பல சந்திப்புக்களில் சலிப்பாகவும் இடதுசாரிகள் தேய்வதைக் கண்டு மனம் வருந்தியும், தன்னைப் புதுப்பிக்க காங்கிரஸ் கட்சியும் முனையவில்லை, இடதுசாரிகளும் முனையவில்லை, காந்திய இயக்கங்களும் முனையவில்லை என்ற ஆதங்கத்தில் விவாதங்களை முன் வைத்துக் கொண்டே இருந்தார். அடுத்து கூட்டுறவு அடிப்படையில் பல்நோக்கு மருத்துவமனை ஒன்று மதுரைக்கு அருகாமையில் அமைக்க முயன்றார். அந்தப் பணிக்கான முயற்சிகள் அனைத்தும் தொய்வு பெற்ற நிலையில் அந்தப் பணியை முடுக்கிவிட ஓய்வு பெற்ற நீதியரசர் சிவராஜ் பாட்டீல் அவர்களின் இல்லத்தில் விவாதித்து முடிவெடுத்து நடைமுறைப்படுத்த ஆயத்தமானோம். அந்தப் பணிதான் அவர் கனவில் உதித்த ஒரு நிறைவடையாப் பணி.

கடைசி வரை இடதும், காந்தியும்தான் இன்றைய மானுடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இடது மற்றும் காந்தியச் சிந்தனை கொண்ட நண்பர்களுடன் தொடர்ந்து நட்பிலும் செயலிலும் இயங்கிக் கொண்டிருந்தார். அவரைப்போல் இன்னொருவர் செயல்பட முடியாது. அவருக்கு மாற்று அவரேதான். அவருக்குச் செலுத்தும் அஞ்சலி என்பது இடதிலும், காந்தியத்திலும் பயணிப்பதுதான். அதுதான் அவருக்கு ஏற்புடையது. அதை நாம் தொடர்வோம்.

●




# இயக்கமாக விளங்கியவர் டாக்டர் ஜீவா

த. ஸ்டாலின் குணசேகரன்

ஈரோட்டில் 'ஐயா' என்றால் எஸ்.மீனாட்சி சுந்தரமுதலியார் அவர்களைத்தான் குறிக்கும். அக்காலத்திலேயே பி.ஏ., எல்.டி. படித்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆற்றொழுக்கமான சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர். தனது பேச்சாற்றலால் 'இருமொழிச் சொற்கொண்டல்' என்று பட்டம் வழங்கப்பட்டவர். 'கலைமகள் கல்வி நிலையம்' என்ற கீர்த்திமிக்க கல்வி நிறுவனத்தின் நிறுவனர்.

அக்கல்வி நிறுவனத்தை அவர் வாழுங் காலத்திலேயே தரம் தகுதியில் தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையங்களில் ஒன்றாக வளர்த்தெடுத்தவர். கல்வியில் வணிகத்தைப் புகுத்தாதவர். அடிப்படையில் அவர் காங்கிரஸ் கட்சியில் அங்கம் பெற்றிருந்தவர். ஆழமான காந்திய நம்பிக்கையாளர்.

1921 ஆம் ஆண்டு மகாகவி பாரதி ஈரோடு வருகை தந்தபோது அவரை நேரில் பார்த்தவர். அவரின் ஆவேசமிக்க உரை கேட்டுப் பரவசமடைந்தவர். ஈரோடு நகரமன்றத் தலைவராகவும் திகழ்ந்தவர்.

இத்தகைய வளம்மிக்க வரலாற்றைத் தன்னகத்தே கொண்ட ஐயாவின் உடன்பிறந்த அண்ணன் மகன்தான் டாக்டர் ஜீவாவின் தந்தை எஸ்.பி.வெங்கடாசலம்.தனது

சித்தப்பாவின் அடியொற்றி இளம் வயதிலிருந்தே பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர் எஸ்.பி.வெங்கடாசலம்.

ஐயா தொடங்கிய கலைமகள் கல்வி நிலையத்தில் எல்கேஜி முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஏழாண்டுகள் நான் படித்தேன். பள்ளி வளாகத்தில் நுழைந்தவுடன் ஐயாவின் இல்லம் உள்ளே இருந்தது. தொடக்கப் பள்ளி மாணவனாக அரைக்கால் டவுசர் போட்டிருந்த அக்காலத்திலேயே ஐயாவைப் பார்க்க அங்கு வரும் எஸ்.பி.வி. அவர்களை நான் பலமுறை பார்த்துள்ளேன். ஐயாவின் இல்லத்திற்கு எதிரில் ஐயாவும் எஸ்.பி.வி.யும் நாற்காலியில் அமர்ந்து அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார்கள்.

கலப்புத் திருமணக் காரணத்தினால் உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டவராக எஸ்.பி.வெங்கடாசலம் இருந்த சூழலிலும் ஐயா மட்டும் விதிவிலக்காக எஸ்பிவியுடன் தொடர்பில் இருந்தார்.

எனது தந்தை ஈரோடுப் பொதுவுடைமை இயக்கத் தொடக்க காலத் தோழர்களில் ஒருவர் என்பதால் எஸ்.பி.விக்கு நெருங்கிய தோழராக விளங்கியவர். என்னுடைய எல்கேஜி அட்மிஷனின் போதே என் தந்தையுடன் கலைமகள் பள்ளிக்கு வந்தவர் எஸ்.பி.வி.

நான் ஆறாம் வகுப்பிலிருந்தே அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் இருந்தவன் என்பதாலும் கட்சிக் குடும்பத்தில் பிறந்தவன் என்பதாலும் எஸ்.பி.வி அவர்களையும் டாக்டர் ஜீவா அவர்களையும் பள்ளிப்பருவத்திலிருந்தே நன்கு அறிவேன்.

ஐயா மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களின் கல்விப் பணியைக் கண்ணாரக் கண்டும் நெஞ்சார உணர்ந்தும் வளர்ந்தவர் ஜீவா. பணத்திற்காகவோ புகழுக்காகவோ கிஞ்சிற்றும் ஆசைப்படாத ஐயாவின் உண்மைத் தொண்டுள்ளம் பேரன் ஜீவாவுக்கு ஆஸ்திபோல் கடத்தப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

தேசியத்தோடு புரட்சிகரக் கருத்தையும் கைகோத்துக் கொண்டவர் எஸ்.பி.வி. 1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூன்று புரட்சியாளர்களும் லாகூர் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டனர்.

அச்சூழலில் கராச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு ஈரோட்டிலிருந்து எம்.ஏ. ஈஸ்வரன், கேசவலால் காளிதாஸ் சேட் ஆகிய இருவரும் சென்றிருந்தனர். அவர்கள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸை அம்மாநாட்டில் சந்தித்து பகத்சிங்கின் அமைப்பான 'நவஜவான் பாரத் சபா'வின் தமிழக அளவிலான மாநாட்டை ஈரோட்டில் நடத்துவதாகவும், அதற்கு நேதாஜி வருகை புரிய வேண்டுமென்றும் நேரில் கேட்டுள்ளனர். நேதாஜியும் வருகைதர இசைவு தெரிவித்து விட்டார். கடைசி நேரத்தில் வேறு அவசரப் பணி நிமித்தமாக அவரால் வரமுடியாத சூழல் ஏற்பட்டு விட்டதால் வங்காளத்தைச் சேர்ந்த புரட்சியாளரான கிரண்தாஸை தன் பிரதிநிதியாக ஈரோட்டு மாநாட்டிற்கு நேதாஜி அனுப்பிவைத்தார். கிரண்தாஸ் பகத்சிங்குடன் லாகூர் சிறையில் அடைக்கப்பட்டு சிறைக்குள் 63 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த ஜதீந்திரநாத் தாஸின் உடன் பிறந்த சகோதரர்.

மூன்று புரட்சியாளர்கள் தூக்கிலிடப்பட்ட அதே 1931ஆம் ஆண்டு செப்டம்பர் 11, 12, 13 ஆகிய மூன்று நாட்கள் ஈரோட்டில் 'நவஜவான் பாரத் சபா' அமைப்பின் தமிழ் மாநில மாநாடு நடைபெற்றது.

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்று அந்த இளம் வயதில் தன்னை விடுதலைப் போராட்ட இயக்கத்தோடு இணைத்துக் கொண்டவர்தான் எஸ்.பி.வெங்கடாசலம். அம்மாநாட்டில் பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவாவும் பங்கேற்றுள்ளார்.

பகத்சிங்கின் தாக்கமும், பாரதி மீதான ஈர்ப்பும் பின்னர் ஏற்பட்ட ஜீவாவுடனான தொடர்பும் படிப்படியாக பொதுவுடைமை இயக்கச் சிந்தனையுள்ளவராக எஸ்.பி.வி உருவெடுக்க அடித்தளமாக விளங்கின.

காதல் திருமணம் - ஜாதி மறுப்புத் திருமணம் மட்டுமல்ல, மத மறுப்புத் திருமணம் செய்துகொண்டார் எஸ்.பி.வி. எஸ்.பி.வி - லூர்து மேரி திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தவர் தந்தை பெரியார்.

ஈரோட்டுப் பொதுவாழ்வுப் பிரமுகர்களில் ஒருவராக விளங்கினார். எஸ்.பி.வி. பொதுவுடைமை இயக்கத்தில் ஊறித் திளைத்தவர்.ஐந்து முறை ஈரோடு நகர மன்ற உறுப்பினராக விளங்கியுள்ளார். இந்தோ-சோவியத் நட்புறவுக் கழகத்தின் நிர்வாகிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். ஈரோடு அரசியல் களத்தில் ஆழங்கால் பட்டவர் எஸ்.பி.வி.

பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவாவுடன் எஸ்.பி.வி அணுக்கமாக விளங்கினார். எம்.கல்யாணசுந்தரம் எப்போது ஈரோடு வந்தாலும் எஸ்.பி.வியின் வீட்டில்தான் தங்குவார். ஏ.எம். கோபு, கே.டி. ராஜு, தா. பாண்டியன் போன்ற முக்கியத் தலைவர்கள் பலர் எஸ்.பி.விக்கு மிக நெருக்கமானவர்கள்.

எஸ்.பி.வி யின் மனைவி லூர்துமேரி இயல்பாகவே விருந்தோம்பல் பண்பு மிக்கவராகவும் எஸ்.பி.வியைக் கரம் பற்றிய பிறகு பொதுவுடைமை இயக்கம் பற்றிய புரிதலுள்ளவராகவும் விளங்கியதால் எஸ்.பி.விக்கு தலைவர்களை விருந்தோம்புவது சாத்தியமாயிற்று. கட்சித் தலைவர்களையும் எங்களைப்போன்ற தோழர்களையும் உறவாக நினைக்கும் பண்பு எஸ்.பி.விக்கு மட்டுமல்ல அவரது குடும்பத்தார் அனைவருக்குமே இருந்தது.

எம்.கல்யாணசுந்தரம் தொடக்ககாலத்தில் ஈரோடு ரயில் நிலையத்தில் ரயில்வே ஊழியராகப் பணியாற்றியவர். எம்.கே ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்தவர். கே.டிஆரும் ஈரோட்டில் ரயில்வே ஃபிட்டராகப் பணியாற்றியவர். எம்.கே.வும் கே.டி ஆரும் ஈரோட்டில் ரயில்வே ஊழியர்களாக இருந்தபோதே நெருங்கிப்பழகிய தோழர்கள். எஸ்.பி.வி தொடக்க காலத்திலிருந்தே இருவருக்கும் நெருக்கமானவர். அதற்கடுத்து தோழர் தா.பாண்டியன் அவர்களுடனான எஸ்.பி.வியின் பழக்கம் ஆழமானது... நெடியது... குடும்பப்பாங்கானது. இத்தனை தலைவர்களையும் பள்ளி, கல்லூரிக்காலங்களிலிருந்தே அருகிலிருந்து பார்க்கிற, பழகுகிற வாய்ப்பினைப் பெற்றிருந்தவர் டாக்டர் ஜீவா.

சூழ்நிலைதானே மனிதனை உருவாக்குகிறது. டாக்டர் ஜீவாவுக்கு இத்தகைய வரலாற்றுப் பின்புலமும் அமைந்த சூழலும் பெரும் தாக்கத்தை உருவாக்கியிருந்தன. டாக்டர் ஜீவாவின் விரிந்த வாசிப்பும், சமூக உணர்வும், கடின உழைப்பும், சுயசிந்தனையும் அவரை அவற்றோடு மட்டும் இருக்கவிடாமல் அடுத்தடுத்த கட்டத்திற்கும் இட்டுச் சென்றுள்ளன. செக்குமாடுபோல் இருந்தவரல்ல ஜீவா. புதிய சிந்தனைக்கும் புதிய வகைச் செயல்பாடுகளுக்கும் தன்னை ஆட்படுத்தியவர். ஆற்றுப்படுத்திக் கொண்டவர்.

காந்தியடிகளையும் காரல்மார்க்ஸையும் கடைசிமூச்சுவரை இறுகக் கரம்பற்றி நடந்தவர் ஜீவா. இவர், ஒரு போராளிக்கான அறச்சீற்றமும் சேவையாளருக்குரிய மனப்பக்குவமும் சரிவிகிதமாகக் கலந்த மனித உருவமாக விளங்கினார்.

பாரதியியல் சிந்தனைகளில் தன்னைக் கரைத்துக் கொண்டவர் ஜீவா. 1980களின் தொடக்கத்தில் 'பாரதி இலக்கியச் சுற்றம் 'என்ற அமைப்பை நிறுவி பாரதியின் கருத்துக்களைப் பரப்புவதில் தனிக்கவனம் செலுத்திவந்தார். அவருடன் இணைந்து அவ்வமைப்பில் பணியாற்றிய அனுபவமும் எமக்குண்டு.

1982 இல் பாரதி நூற்றாண்டின் போது ஆங்கிலேய ஆட்சியினரால் தடைசெய்யப்பட்ட பாரதியாரின் நூல்களான பொன்வால் நரி, ஆறில் ஒரு பங்கு, பெண் விடுதலை போன்ற நூல்களைப் பதிப்பித்து விமர்சையாக வெளிக்கொண்டு வந்தார்.

1921ஆம் ஆண்டு பாரதி ஈரோட்டிற்கு வருகை புரிந்ததை ஆவணப்படுத்தும் விதத்தில் ' ஈரோட்டில் பாரதி ' என்ற நூலொன்றைத் தொகுத்தும் தயாரித்தும் வெளியிட்டார். பாரதியின் கருத்துக்கள் அடங்கிய ஐந்து கல்வெட்டுகளைத் தயார் செய்து ஈரோடு நகரின் முக்கிய இடங்களில் அவற்றைப் பதித்தார். தமிழகத்தின் தலைசிறந்த சேர்ந்திசைக்குழுவான இசைமேதை எம்.பி சீனிவாசனின் இசைக்குழுவை ஈரோட்டிற்கு அழைத்துவந்து மிகப்பெரும் அரங்கொன்றில் முழுக்க முழுக்க பாரதியார் பாடல்களை இசைக்க வைத்தார். அப்போது நேயர் விருப்பமாக சில பாடல்கள் கேட்கப்பட்டபோது அவற்றையும் பாடினர் எம்.பி.எஸ் குழுவினர்.

அப்போது எம்.பி.எஸ் பாடிய 'விடுதலைப் போரினில் வீழ்ந்த மலரே... தோழா... தோழா', 'துமேராநாம் மேராநாம் வியட்நாம்... வியட்நாம் 'என்ற இரண்டு பாடல்களும் பாடி 40 ஆண்டுகளான பின் இன்றளவும் எமது நெஞ்சை விட்டு அகலவில்லை. அன்றைய அந்நிகழ்ச்சி எம்மைப் போன்ற பலருக்கும் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது.

1985இல் சித்தார்த்தா பள்ளி என்ற ஒரு மெட்ரிக்குலேஷன் பள்ளியை தொடங்கினார் ஜீவா. டாக்டரின் சகோதரி திருமதி ஜெயபாரதி அப்பள்ளியை நிர்வகிக்கிறார். எல்லா வகையிலும் ஜீவாவின் சிந்தனைக்கும் செயலுக்கும் இசைவாக இருந்ததோடு அவரும் ஒரு செயற்பாட்டாளராக உருவெடுத்தார்.

அப்பள்ளி மாணவர்களிடையே போதி இயற்கைக் காப்பு மன்றம், ஷெல்லி ஆங்கில இலக்கிய மன்றம், கபீர் இந்தி இலக்கிய மன்றம், சர்சி.வி ராமன் அறிவியல் மன்றம், ராமானுஜன் கணித மையம் ஆகிய குழுக்களைத் தொடங்கி அந்தந்தக் குழுஉறுப்பினர்களான மாணவர்களுக்கு சிறப்பு வல்லுனர்களை அழைத்து வந்து வித்தியாசமான பயிற்சிகள் பலவற்றை தொடர்ந்து இடையறாது அளித்து வந்தார் ஜீவா.

ஆர்வமுள்ள இப்பள்ளி மாணவர்கள் பலரைத் தேர்வு செய்து எம்.பி.எஸ் இசைக்குழு வல்லுனர்கள் மூலம் சிறப்புப் பயிற்சியளித்து தனி மாணவர் இசைக்குழுவையே உருவாக்கினார். அக்குழு பல பொது இடங்களிலும் சமூக விழிப்புணர்வுப் பாடல்களைப் பாடி வந்தனர். அப்பள்ளி ஆசிரியர்களுக்குள்ளும் அவ்வாறான ஒரு குழு உருவாக்கப்பட்டது. அப்பள்ளி இன்றளவும் அனைத்து வகையிலும் ஒரு வித்தியாசமான பள்ளியாக இயங்கி வருகிறது.

'விடுதலை வேள்வியில் தமிழகம்' நூலுக்காக 'காந்திஜியும் தென்னாப்பிரிக்கா தமிழர்களும் 'என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதித்தரும்படி டாக்டரிடம் கேட்டிருந்தோம். டாக்டர் எழுதிய கட்டுரை 2000ம் ஆண்டு வெளிவந்த அந்நூலில் இடம்பெற்றுள்ளது.

இக்கட்டுரைக்காக சில நூல்களை ஆழ்ந்து வாசித்தபோது தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் பற்றியான ஏராளமான புதிய தகவல்கள் கிடைத்ததாகவும் அவற்றில் முக்கியமானவற்றை தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் திருப்பூரிலிருந்து தில்லையாடி வரை நான்கு நாட்கள் ஒரு பயணப் பரப்புரை மேற்கொள்ளலாமென்றும் எம்மிடம் தெரிவித்தார்

டாக்டர். உடனடியாக அதற்கென ஒரு செயல் திட்டத்தைத் தீட்டி அவ்வியக்கத்தை அறிவித்தார்.

இலக்கியச்செல்வர் குமரி அனந்தன், காந்தி கிராமப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ந. மார்கண்டன் ஆகியோரையும் அழைத்து டாக்டர், நான் உள்ளிட்ட பலரும் திருப்பூரிலிருந்து புறப்பட்டோம். அப்பயணக் குழுவில் முக்கிய ஆளுமைகள் உள்ளிட்ட 34 பேர் இடம்பெற்றிருந்தனர். எழுச்சிகரமான தொடக்கவிழா திருப்பூரில் நடைபெற்றது. வழிநெடுக பள்ளிகள், கல்லூரிகள், தெருமுனைகள் என்று பல இடங்களில் பயணத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினோம். பல்லாயிரம் பேரைச் சந்தித்தோம்.

தில்லையாடியில் முடிந்தது இப்பயணம். அவ்வூரில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிலும் இலக்கியச் செல்வர், துணைவேந்தர், டாக்டர் உள்ளிட்ட நாங்களெல்லாம் பேசினோம். அந்த நான்கு நாட்கள் கிடைக்கப்பெற்ற அனுபவம் பொது மக்களுக்கு மட்டுமல்ல, வழிநெடுக எங்களின் தொடர்ச்சியான உரை கேட்ட பல்லாயிரம் மாணவர்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் புத்துணர்ச்சி ஏற்படுத்துவதாக அமைந்தது.

1998 ஆம் ஆண்டு நவம்பர் 19, 20, 21, 22 ஆகிய நான்கு நாட்கள் அந்தத் தியாகத்திருப்பயணம் நடைபெற்றது. ஆம்... அதற்கு 'தியாகத் திருப்பயணம்' என்றுதான் பெயரிட்டிருந்தார் டாக்டர்.

தில்லையாடி வள்ளியம்மையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுத்தான் அவ்வியக்கத்தை அறிவித்திருந்தார் டாக்டர். அந்த நிகழ்வையொட்டி தில்லையாடி வள்ளியம்மை பற்றியான 86 பக்க தொகுப்பு நூலொன்றை வெளியிட்டிருந்தார். எம்முடைய வேண்டுகோளுக்கு இணங்க 'விடுதலை வேள்வியில் தமிழகம்' நூலுக்காக டாக்டர் எழுதிய கட்டுரை அந்நூலில் இடம்பெற்றிருந்தது. "அந்த நூல் வருவதற்கு முன்பு இந்நூல் வருகிறது. அதற்காக எழுதப்பட்ட கட்டுரையை இப்போதே இதில் பயன்படுத்தலாமா?" என்று என்னிடம் கேட்டார் ஜீவா. "அதனால் என்ன... 'விடுதலை வேள்வியில் தமிழகம்' நூலின் நோக்கம் அது வெளிவருவதற்கு முன்பே நிறைவேறத் தொடங்கிவிட்டது என்று தானே அதற்கு அர்த்தம். கண்டிப்பாக அக்கட்டுரை இந்நூலில் வெளியாக வேண்டும்" என்று குறிப்பிட்டேன்.

அத்தோடு யாம் தொகுத்து அப்போது வெளியாகியிருந்த 'ஜீவா முழக்கம்' சுதந்திரப் பொன்விழா மலரில் இடம் பெற்றிருந்த ரகமியின் 'தமிழகமும் காந்திஜியும்' என்ற கட்டுரையையும் சேர்த்து அந்நூலில் வெளியிடுமாறு கூறினேன். அவ்வாறே அதனையும் அந்நூலில் இணைத்துக்கொண்டார் டாக்டர்.

'திப்பு: விடுதலைப்போரின் முன்னோடி' என்ற தொகுப்பு நூலொன்றை 1998ஆம் ஆண்டு வெளிக்கொண்டு வந்தார் ஜீவா. பின்னர் 'ஆட்சியாளர்களுக்கு ஒரு முன்னோடி திப்புசுல்தான்' என்ற சிறு வெளியீட்டைப் பதிப்பித்தார். 'விடுதலைப்புலி திப்புசுல்தான்' என்ற நூலொன்றை 2005 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார். 2016 ஆம் ஆண்டு 'திப்புவின் வாள்' என்ற டாக்டரின் புதிதான மொழி பெயர்ப்பு நூல் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இந்நூல் 2017 ஆம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான தமிழக அரசின் விருதைப் பெற்றது.

வெள்ளையரை எதிர்த்து திப்பு உயிர்த்தியாகம் செய்த 200 ஆம் ஆண்டை மதச்சார்பின்மையை வலியுறுத்தும் நிகழ்வாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் டாக்டர் ஈரோட்டிலிருந்து திப்பு வீரமரணமடைந்த கர்நாடக மாநிலத்திலுள்ள சீரங்கப்பட்டிணம் வரை மாணவர்கள் பங்கேற்கும் ஒரு சைக்கிள் பயணத்தை ஏற்பாடு செய்தார். இவருடைய சித்தார்த்தா பள்ளியுடன் மேலும் மூன்று பள்ளிகளில் பயிலும் மாணவர்களையும் ஒன்றிணைத்து மொத்தம் 35 மாணவர்கள் 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி ஈரோட்டிலிருந்து சைக்கிளில் சீரங்கப்பட்டிணம் புறப்படுமாறு திட்டமிட்டார். பயணத்தை அன்றைய ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்தையா பாண்டியன் தொடங்கி வைத்தார்.

பயணத்தின் முக்கிய நோக்கமாக சீரங்கப்பட்டிணத்தில் சிதிலமடைந்து கிடக்கிற திப்புவின் வரலாற்று நினைவிடங்களைப் புதுப்பித்து சீராக்குவதென அறிவித்தார். மாணவர்கள் வழிநெடுக வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் மதச்சார்பற்ற சிந்தனையை விதவிதமான முறைகளில் விதைத்துச் சென்றனர்.

பிப்ரவரி 13, 14 இருநாட்கள் மாணவர்கள் சீரங்கப்பட்டணத்திலேயே முழுக்கத் தங்கியிருந்து திப்புவின் வரலாற்று இடங்களை சீர்செய்யும் பணிகளில் நேரடியாகக் களமிறங்கினர். டாக்டரும், டாக்டரின் சகோதரி ஜெயபாரதியும், இவர்களின் தந்தை எஸ்.பி. வெங்கடாசலம் அவர்களும், சில ஆசிரியர்களும் உடனிருந்து மாணவர்களை வழிநடத்தினர். பணி முடிந்த பின்பு திரும்பவும் மாணவர்கள் சைக்கிளிலேயே ஈரோடு திரும்பினர்.

அந்நிகழ்ச்சியின் நிறைவுநாளில் கர்நாடக மாநில அமைச்சரே பணியிடத்திற்கு வருகைபுரிந்தார். மாணவர்கள் மூலம் அப்போது அரசிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை பின்னர் ஒரு கட்டத்தில் நிறைவேறியது. கர்நாடக அரசு அவ்விடத்தை ஒழுங்கு செய்ததோடு திப்பு வரலாற்று இடங்களை தொல்லியல் துறையிடம் ஒப்படைத்தது.

திப்பு பற்றியான டாக்டரின் நூல்கள் அனைத்தும் திப்புவின் விடுதலைப்போராட்டம் தொடர்பான வரலாற்று ஆதாரங்களையும், திப்பு இந்துமதக் கோயில்களுக்கும் நிறுவனங்களுக்கும் கொடுத்த மரியாதையை தக்க ஆவணங்கள் மூலம்

நிறுவுவதையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். எந்த இடத்திலும் மறந்தும் ஒரு மதம் சார்ந்து டாக்டர் எதையும் எழுதியதில்லை. இரு மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும், பரஸ்பர நம்பிக்கையையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும், இருதரப்பு மரியாதையையும் ஏற்படுத்துவதே டாக்டரின் இத்தகைய செயல்பாடுகளுக்கான அணுகுமுறையாக இருந்துள்ளன.

சாதி - மதத்தின் பெயரால் வன்மமும் வன்முறையும், கசப்பும் காழ்ப்பும் இல்லாத ஒரு ஆரோக்கியமும் அமைதியுமான சூழல் ஏற்பட வேண்டுமென்பதைத் தவிர வேறு எவ்விதமான எதிர்பார்ப்பும் டாக்டருக்கு இருந்ததில்லை.

'இந்து முஸ்லிம் ஒற்றுமை 'என்ற காந்தியடிகளின் கருத்துக்களடங்கிய தொகுப்பு நூலொன்றை 2002ஆம் ஆண்டு மொழிபெயர்த்து வெளிக்கொண்டு வந்தார் டாக்டர். பல்வேறு சந்தர்ப்பங்களில் காந்தியடிகள் மதங்களிடையே நல்லுறவை உருவாக்கும் மிக உயர்ந்த நோக்கில் வெளியிட்ட கருத்துக்களை உள்ளடக்கிய அந்நூலை மொழிபெயர்த்துள்ளார். 75 பக்கங்கள் கொண்ட அந்நூலை பத்மஸ்ரீ எஸ்கேஎம்.மயிலானந்தன் அவர்கள் தலைமையில் இயங்கும் தேசிய நல விழிப்புணர்வு இயக்கம் வெளியிட்டுள்ளது.

'மதங்களைக் கடந்த மனித நேயத்தை வளர்க்க வேண்டியதே இன்றைய தேவை. சிறந்த மத நம்பிக்கையாளராகவும் மனிதநேயம் மிக்கவராகவும் வாழ விழைவோர்க்கு மகாத்மாவின் சிந்தனைகள் நல்ல வழிகாட்டி' என்றும் 'இளம் தலைமுறையினர் மத்தியில் மதச்சார்பற்ற சிந்தனையை வளர்க்கவும், மத நல்லிணக்கத்திற்குப் பாடுபட அவர்களை உருவாக்கவும் தேசிய நல விழிப்புணர்வு இயக்கம் உறுதி கொண்டுள்ளது. அதன் ஒரு அம்சமே இந்நூல். இதை தேசத்திற்கு அர்ப்பணிக்கிறோம் 'என்றும் எஸ்கேஎம்.மயிலானந்தன் அந்நூலுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'தமிழக பசுமை இயக்கம்' என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக மக்களிடம் விதவிதமான வடிவங்களில் சுற்றுச்சூழல் பற்றியான விழிப்புணர்வை தொடர்ந்து பல்லாண்டுகளாக ஏற்படுத்தி வந்தார் டாக்டர். ஒருமுறை ஈரோட்டில் 20க்கும் மேற்பட்ட பொதுநல அமைப்புகளை ஒன்றிணைத்து இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் உண்ணாவிரதம் ஒன்றை முன்னின்று நடத்தினார்.

தாயுள்ளத்துடன் கூடிய நுட்பமான தொடர் முயற்சியால் ஆயிரக்கணக்கான குடி நோயாளிகளை அந்நோயிலிருந்து மீட்டெடுத்து அவர்களின் குடும்பங்களில் நிம்மதி நிலவக் காரணமாக இருந்தார்.

வீதி நாடகங்களுக்கான பயிற்சி முகாம்களை நடத்தி அவற்றின் மூலம் சமூகக்கருத்துகளை விதைத்தார். தலைசிறந்த திரைப்படங்களைப் பார்ப்பதற்கும் ரசிப்பதற்குமான அமைப்புக்களில் செயல்பட்டார்.

ஆர். நல்லகண்ணு, தா. பாண்டியன், கே.டி. ராஜு, ஏ.எம். கோபு, டி. ராஜா போன்ற கட்சித் தலைவர்கள் வருகிறபோதெல்லாம் கட்சி அலுவலகங்களிலோ, அவர்கள் தங்கியிருந்த விடுதிகளிலோ சந்தித்து கட்சி வளர்ச்சிக்கான கருத்துக்களை முன்வைத்துக் கலந்துரையாடுவார். அவர்களது உடலை அங்கேயே பரிசோதித்து அவர்களுக்கான மாத்திரைகளை, மருந்துகளை பரிவோடு வழங்குவார். பொதுவாழ்வில் தியாக உணர்வோடும் உண்மையாகவும் தொடர்ந்தும் உழைக்கும் எவராகினும் அவர்களைக் காப்பாற்றுவதும் கவனிப்பதும் சமூகத்தின் கடமை என்று கருதுபவர் டாக்டர். அத்தகையவர்களின் தனித்திறமைகளை சமூகம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், அதற்கு தம்மைப் போன்றவர்கள் பாலமாக இருக்க வேண்டுமென்றும் கருதிச் செயல்பட்டவர்.

காந்தியச் சிந்தனையாளர்களோடும், தன்னார்வ அறக்கட்டளைகளோடும், எழுத்தாளர்களோடும், கலைஞர்களோடும், கல்வியாளர்களோடும், ஆய்வாளர்களோடும், பத்திரிகையாளர்களோடும், களப்பணியாளர்களோடும் கடைசி மூச்சுவரை நெருக்கமான தொடர்புடனும் தோழமையுடனும் விளங்கியவர் டாக்டர். நம்மாழ்வாருக்கும் டாக்டருக்குமான தொடர்பு ஆழமும் அர்த்தமும் மிக்கது. பழங்குடி மக்கள் சங்கத்திலிருந்து காந்தி கிராமப் பல்கலைக்கழகம் வரை உயிரோட்டம்மிக்க, செயல்பூர்வமான இடையறாத தொடர்பிலிருந்தவர் டாக்டர்.

எத்தனையோ பேரை எத்தனையோ விதங்களில் பார்த்துக்கொண்ட டாக்டரை அவரது மனைவி இந்திராவும் மகன்களும் மகளும் கனிவுடன் கவனித்துக்கொண்டனர். அவர்களது அக்கறை நினைவில் கொள்ளத்தக்கதாகும்.


சமீபத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான வீ. ராஜமோகன் மறைவையொட்டி உங்கள் நூலகத்தில் வெளியான எமது கட்டுரையை வாசித்துவிட்டு எம்மிடம் தொடர்பு கொண்டு நெகிழ்ச்சியுடன் பேசினார் ஜீவா. அதன்பிறகு தோழர் தா.பா.வின் மறைவையொட்டி ஈரோட்டில் நடைபெற்ற இரங்கல் ஊர்வலத்திற்கு தான் வர இயலவில்லையென்றும், அப்போது ஒரு முக்கியப்பணி நிமித்தமாக பாண்டிச்சேரியில் இருப்பதாகவும் தொலைபேசியில் தெரிவித்தார்.

அத்தகைய உணர்வாளராக விளங்கிய டாக்டரைப் பற்றியான கட்டுரையை அதே உங்கள் நூலகத்தில் இவ்வளவு விரைவில் எழுத வேண்டியது வரும் என்று கனவிலும் நினைக்கவில்லை. அவரது இரங்கல் நிகழ்வில் பங்கேற்க வேண்டிய நிலை அவர் கடைசியாக எம்முடன் பேசியதிலிருந்து மூன்றாவது நாளே ஏற்படுமென்று எவரால் நினைத்துப் பார்க்க முடியும்?

டாக்டர் ஜீவா... இயங்கிக் கொண்டே இருந்தவர்... இயக்கமாகவே திகழ்ந்தவர்.

●

அஞ்சலி



# புன்னகை மன்னன் மருத்துவர் ஜீவா

**வி.பி.குணசேகரன்**

மருத்துவர் ஜீவாவுடன் எனக்கு அறிமுகம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் அவரது தந்தை எஸ்.பி. வெங்கடாசலம் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்ததன் மூலம் ஏற்பட்டது. அதன்பிறகு மருத்துவர் ஜீவா பவானி ஆற்றைப் பாதுகாத்திட பள்ளிக் குழந்தைகளுடன் எங்களது ஊர் பெரியபுலியூர் வழியாக மிதிவண்டி விழிப்புணர்வுப் பயணம் சென்ற போது எங்களது பகுதியில் பயணக் குழுவை நிறுத்தி குழந்தைகளுக்கு குடிக்க மோரும், தண்ணீரும் கொடுத்த போது நெருக்கம் அதிகரித்தது. அதன்பிறகு அவர் தொடர்ந்து செய்யும் பணிகளில் நாங்களும் பழங்குடியின மக்களுக்காக நாங்கள் செய்யும் பணியில் மருத்துவரும் ஈடுபடுத்திக் கொள்ளும் அரிய வாய்ப்பு ஏற்பட்டது. பவானி நதி நீரைக் காக்க அவர் போராடிய போராட்டங்களிலும் எங்களது பங்களிப்பும் சிறிதளவில் இருந்ததை இப்போது நினைத்தாலும் அது பெருமையளிக்கக் கூடியதாகவே உள்ளது. அவரது தொடர்

போராட்டம் காரணமாக பவானி ஆற்றின் மாசுக்கு பெரிதும் காரணமாக இருந்த விஸ்கோஸ் ஆலை மூடப்பட்டது. அதன்பிறகு பவானி சுத்தமான மாசில்லாத ஆறாக ஓடி அனைவருக்கும் நதியின் முழுப் பலனை வழங்கி வருவதைக் காணும் போது மருத்துவருடன் இணைந்து போராட்டத்தின் பங்களிப்பை நினைத்து மகிழ்வாகவே இருக்கிறது.

அதற்குப் பிறகு மலைவாழ் மக்களுக்காக மலைக் கிராமங்களுக்கு மருத்துவர்களை அழைத்து வந்து அவர்களுக்காக மருத்துவ முகாம்களைத் தொடங்கி வைத்த முதல் முனைப்பு மருத்துவர் ஜீவாவையே சேரும். மலைக்கிராமங்களில் நடத்தப்பட்ட முகாம்களில் மருத்துவராக முக்கியமாக தன்னை மனிதராக அடையாளப் படுத்திக் கொண்டு பழங்குடியினர் மீது உண்மையான கரிசனத்தைக் காட்டும் மருத்துவராக தனது சொரூபத்தை வெளிப்படுத்தியவர். முகாமில் மலைக்கிராம மக்களுக்கு அதிக அளவில் ரத்தச்சோகை இருப்பது கண்டறியப்பட்டதற்குப் பிறகு தொடர்ந்து அம்மக்களின் ரத்த விருத்திக்கான மருந்து மாத்திரைகளைக் கொடுத்து அனுப்பிக் கொண்டே இருந்தார்.

எங்களது முயற்சியின் பேரில் பழங்குடியின மக்களின் குழந்தைகள் தங்கிப் படிப்பதற்கான வசிப்பிடத்தை அமைக்க முற்பட்ட போது அதற்கான பெரும் உதவியை தானாக முன்வந்து வழங்கி அத்திட்டம் வெற்றியடைந்திட காரணமாக இருந்தவர் டாக்டர். தொடக்கக் காலத்தில் பழங்குடி மக்களுக்கான மருத்துவ முகாமென்றால் மருத்துவர் ஜீவா இல்லாமல் அந்த முகாம் நடந்ததில்லை. அவர் ஆரம்பித்து வைத்த மருத்துவ முகாம்கள்தான் இன்றளவிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன எனலாம்.

அப்படி தொடர்ந்து மலைக்கிராம மக்கள் நலனின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர், அதற்கு அவர் கூறிய காரணம்தான் எங்களையும் அதிசயத்தில் ஆழ்த்தியது. மலைக்கிராம மக்கள் பூர்வக்குடி மக்கள், தொன்மையும், கலாச்சாரத்தையும் கொண்ட மக்கள் அவர்கள் நலமாக இருந்தால்தான் காடு நன்றாக இருக்கும், காடு நன்றாக இருந்தால்தான் காட்டை நம்பி வாழும் வனவிலங்குகள் நன்றாக இருக்குமென்று கூறினார். அவரது அக்கறையும், ஆர்வமும் எங்களுக்கு மேலும் வேலைகளைச் செய்வதற்கு உத்வேகமாக அமைந்தது. அதிலும் குறிப்பாக மலைக்கிராம மக்களின் குழந்தைகளின் கல்வியில் அதிக அக்கறை கொண்டவர். அக்குழந்தைகளை நன்றாகப் படிக்க வைத்திட வேண்டுமென்கிற கனவு அவருக்கு அளவுக்கதிகமாகவே இருந்தது.

வீரப்பன் தேடுதல் வேட்டையின் போது அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்ட மலைக்கிராம மக்களுக்காக நடத்தப்பட்ட சதாசிவா கமிஷன் விசாரணையின் போது தொடர்ந்து தன்னளவில் எங்களது சங்கத்திற்கு உதவிக் கொண்டே இருந்தார். கோபிச்செட்டிப்பாளையம், மாதேஸ்வரன் மலை மற்றும் பெங்களூரில் நடைபெற்ற சதாசிவா கமிஷன் விசாரணைகளுக்கு நேரில் வந்தோ அல்லது மானசீகமாகவோ எதையாவது செய்து கொண்டே இருந்தார். யார் மூலமாகவோ பொருள் உதவியோ, நிதி உதவியோ மருத்துவர் ஜீவா சார்பில் எங்களுக்குக் கிடைத்துக் கொண்டே இருந்ததை எங்களால் இன்றும் மறக்க முடியவில்லை.

மாதேஸ்வரன் மலையில் நடைபெற்ற விசாரணையின் கடைசி நாளில் நேரில் வந்த அவர், என்ன நடக்கிறது? பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்குமா? என்று விசாரித்து விசாரணை முடியும் வரை எங்களுடனிருந்து எங்களில் சிலரை அவரது வாகனத்தில் பொறியாளர் மனோகருடன் பவானிக்கு அழைத்து வந்தது இன்றும் நினைவில் இருக்கிறது. அவரது தொடர்பு மூலமாகவே தொண்டு நிறுவனத்தினர் பலரின் அறிமுகமும், தொடர்பும் கிடைத்து எங்களது வேலைகளுக்கு அது பெரும் உதவியாக அமைந்தது. இந்தத் தொடர்பால் நாங்கள் அடைந்த பயனும், பலனும் மிகவும் அதிகமே. இது அத்தனையும் அவராலேயே சாத்தியப்பட்டது என்பதை அவர் எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை. பணக்காரனிடம் இருக்கும் பணம் யார் யாருக்கோ போகுது நல்ல வேலைக்கு வந்தா அவருக்கு ரொம்ப நல்லது. 'இத பெரிசா பேசாதிங்க' என்று எங்களைத் திட்டுவார்.

அவரிடம் நாங்கள் வாங்கிக் கட்டிக் கொண்ட வசவுகளும், செல்லத் திட்டுக்களுமே எங்களுக்கு பலராலும் ஏற்பட்ட அவமானத்தையும், அவமரியாதையும் தாண்டி வெற்றி பெறுவதற்கு பலத்தை வழங்கின. அவர் செய்ததையோ அல்லது செய்வதற்கு காரணமாகவோ இருந்ததையோ எப்போதும் சொல்லிக் காட்டியதில்லை, அதைப் பெரிதாகவும் கருதியதில்லை. எங்களிடம் அவர் கடைசிவரை எடுத்துக் கொண்ட உரிமை எங்களுக்கு மிகவும் விருப்பமானதாகவே இருந்தது. எங்களது சங்கத்தின் சாதாரண ஆட்களைக் கூட மிகவும்

பிரியத்துடனும், அன்புடனும் அணுகும் விதம் தொடக்கத்தில் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனது.

பின்னர் மருத்துவரின் பிரியமும், அன்பும் மிகவும் நேர்த்தியானது என்பதை உணர்ந்து கொண்டு அதனை விரும்பி ஏற்றுக் கொள்பவர்களாகவே மாறி நின்றனர். அந்த மாற்றத்திற்குப் பிறகு மருத்துவரைப் பார்த்திடவும், அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பவராகவே அவர்கள் காத்திருப்பதைக் கண்டு அதிசயித்திருக்கிறோம்.

மலைக்கிராமங்களுக்கு மருத்துவர்களை மட்டுமல்லாது எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் என பலரையும் கூட்டி வந்து மலைக்கிராமங்களை புத்தம் புதிதாக அறிமுகப் படுத்தினார் மருத்துவர் ஜீவா. அதன் மூலம் மலைக்கிராம மக்களின் பிரச்னைகளை தமிழகம் முழுவதும் கொண்டு சென்றதும் மருத்துவர் ஜீவாதான். தினமணியில் ஈரோடு மாவட்டச் செய்தியாளராக இருந்த எம். பாண்டியராஜனை மருத்துவ முகாம்களுக்குக் கூட்டி வந்து அவரது அவதானிப்பின் மூலம் பழங்குடியின மக்களின் பார்வையிழப்பு, ரத்தச் சோகை அதிகரிப்பு போன்றவை தினமணியில் செய்தியாக வந்ததன் மூலம் தமிழகம் முழுவதும் மலைக்கிராமங்களின் மீதான கூடுதல் முக்கியத்துவமும், மலைக்கிராம மக்களின் வாழ்க்கை மீது பார்வையும், கவனமும் அதிகரித்தது.

சுற்றுச்சூழல் மீதான அக்கறையை எங்களுக்கு அறிமுகப் படுத்தியதோடு நதிநீர்ப் பாதுகாப்பு, வாசிப்பு, பயண அனுபவம், இலக்கியக் கூட்டம், மத நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை, காந்தியம், மார்க்சியம், சோசலிஸம், எளிமை வாழ்வு என அனைத்தையும் போதித்த வாத்தியார் மருத்துவர் ஜீவாதான். எங்களுக்கு அவர் வாத்தியார் மட்டுமல்ல சகோதரனாகவும் இருந்தவர். எங்கள் மீது உரிமை கொண்டாடுவதில் அவருக்கு நிகர் அவர்தான். திடீரென்று ஒரு நாள் அவரிடமிருந்து அழைப்பு வரும். விசாரிப்புடன் ஆரம்பித்து அந்த வேலையைச் செய்யச் சொன்னேன் என்னாச்சு, அவர் பேசினாரா, அவர் வந்தாரா என 1 மணி நேரம் அவர் பேச்சு தொடர்ந்து கொண்டேயிருக்கும். அவரது பேச்சுக்குப் பிறகு செய்ய வேண்டிய வேலை எங்களுக்கு நிறைய இருக்கு என்பதை உணர்த்தும் விதமான தூண்டுதலாகவே அந்த உரையாடல் நீண்ட நாளுக்கு அமைந்திருக்கும்.

எங்களிடம் அவர் காட்டிய அன்புக்கு அவரது புன்னகையே சாட்சியாக அமைந்திருந்தது. எங்களது புன்னகை மன்னன் மருத்துவர் ஜீவா. பல சமயங்களில் அவரை அதிகம் பயன்படுத்திக் கொள்வதாக குற்ற உணர்ச்சி ஏற்பட்டு இந்த முறை அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று முடிவெடுத்து அவரிடம் அந்த வேலை குறித்து எதுவும் சொல்ல மாட்டோம். ஆனால் நாங்கள் அவரைத் தவிர்ப்பதை அவர் எப்படி தெரிந்து கொள்கிறார் என்றே புரியாமல் அவரே எங்களை அழைப்பார். கடுமையான திட்டலுடன் எங்களை மருத்துவமனைக்கு வரச்சொல்லியோ அல்லது பொறியாளர் மனோகரனுடன் நாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்தோ உதவிச் செல்வார். இந்த ஆச்சர்யங்கள்தான் எங்களுக்கு இதுவரை புரியாத அற்புதங்களாகவே இருந்து வருகிறது. பொறியாளர் மனோகரன் இறப்புக்குப் பிறகு அவரது பயணம் வெகுவாகக் குறைந்தது. அவரது பாதியாகவே திகழ்ந்த பொறியாளர் மனோகரன் எங்களிடமும் நெருக்கமானவராகவே கடைசி வரை இருந்தார். இந்தக் கடைசி 8 மாதம் எங்களுடனான தொடர்பு வெகுவாகக் குறைந்திருந்தது. எப்போதாவது அவர் அழைத்தால்தான் அவரிடம் பேச முடியும், நாங்களும் அவர் முழுமையாக குணமடைந்து வர வேண்டுமென்பதற்காக அவரைத் தொந்தரவு செய்திடவில்லை. ஆனால் ஒரு ஓய்வுப் பயணம் சட்டென நிறைவடைந்திருக்கிறது.

மருத்துவர் ஜீவா இறந்து விட்டார் என்று கேள்விப்பட்டதற்குப் பிறகு அதனை நம்ப முடியாமல் பலரிடமும் அவரது மரணத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதாகவே இருந்தது. மருத்துவர் ஜீவாவின் மரணம் ஒரு நெருங்கிய உறவினரின், உற்ற நண்பரின், ஒன்றுவிட்ட சகோதரனின் மரணமாகவே இருந்தது. அவரது அருகாமையால் பாதிக்கப்பட்ட, அவரது இழப்பை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களின் பட்டியல் அதிகமாகவே இருக்கிறது. என்ன செய்வது, ஒருவரின் இழப்புதான் அவரது முக்கியத்துவத்தை உணர்த்தக் கூடிய தருணமாக இருக்கிறது. மருத்துவர் ஜீவா எங்களின் வாத்தியாராக, சகோதரராக, நண்பராக, தோழராக, சில சமயங்களில் தந்தையாகவும் இருந்து கிருஷ்ணனைப் போல, கர்ணனைப் போல எங்களுக்குப் பாதுகாவலனாக, ஆத்மார்த்தமானவராக இருந்தவர். நாள்தோறும் அவரது பேராசையைக் கேட்டு ரசித்தவர் நாங்கள்... அதில் சிலவற்றையாவது நிறைவேற்றி அவருக்குச் சமர்ப்பிப்போம்.

போய்ட்டு வாங்க டாக்டர்! ரெட் சல்யூட்...

●

# டாக்டர் இல்லாத வீடும்... இல்லாத நண்பர்களும்...

ம. ராஜேந்திரன்



சிரிப்புச் சப்தங்களும்,
பேச்சொலியும், அலைபேசி அழைப்பொலியும்,
காடு சுற்றலும், அன்பு விசாரிப்புகளும் நிரம்பித் தளும்பும்
மருத்துவரைக் காணவில்லை...

அனைவரையும் சமமாக பாவித்த,
எழுதிக் கொண்டே இருக்கும்
பேனாக் கை விரல்களும், பாதி எழுதிய தாள்களும்,
விளக்கு எரிந்து கொண்டிருக்கும் அறையும்,
கண் கண்ணாடிகளும்,
கட்டுக் கட்டாக புத்தகங்களும்,
எழுதி முடிக்கப்பட்ட தாள்களும்,
அவர் தலையும், முதுகும், பாதங்களும்
படிந்த படுக்கையும்...
மருத்துவர் வீட்டிலும் இல்லை...

எப்போதும் குரல்களால் நிறைந்திருக்கும்
மருத்துவமனை அறையும்,
மைசூர் காபியும், மெதுவடைகளும்,
பாதி திறக்கப்பட்ட கதவுகளும்,
அவர் தலை நேர் எரியும் விளக்கும்,
ஆசிர்வதிக்கும் கைகளில் பூக்களும்
அந்த அறையிலும் மருத்துவர் இல்லை...

எங்களுடன் மட்டுமில்லை எங்கும் இல்லை மருத்துவர்...
ஆனால் அவரது வீட்டு வரவேற்பறையில்
குளிர்சாதன கண்ணாடி அறையில் கண்மூடி
படுத்திருக்கிறார் மருத்துவர்,

மருத்துவரைப் பார்த்து வணங்கியபடி
அனைவரும் அவர் நினைவுகளில் கைக்குலுக்கியபடி
கண்ணோரங்களில் கசியும் கண்ணீரைத் துடைத்தபடி...
காத்திருக்கிருக்கிறார்கள்...
இயேசுவைப் போல் அவரும் வருவாரா...
காத்திருக்கிறோம்....

இப்படித்தான் அவரது நினைவுகளால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினரும் சட்டென்ற முடிவால் என்ன செய்வதென்றே தெரியாமல் அவரது வீட்டிற்கு வந்து அவரது வீட்டில் உயிரின்றி கண்ணாடிக்குள் படுக்க வைக்கப்பட்டுள்ள அவரது சிரிப்பற்ற,பேச்சற்ற 'வாங்க' என்கிற ஆச்சர்ய அன்பு நிறைந்த வரவேற்பு குரலின்றி மருத்துவர் ஜீவானந்தத்தை வித்தியாசமாக பார்த்து விட்டு அழுகையுடன் அகன்று கடப்பதைக் காண முடிந்தது. வந்தவர்கள் அனைவரும் அசையாத மருத்துவரை அப்படிப் பார்த்துவிட்டு யாரிடமும் பேசப் பிடிக்காமல் அவசரக் கூரை வேய்ந்த வீட்டு வாசலில் கிடத்தப்பட்டிருக்கும் நாற்காலிகளில் அமர்ந்தபடி அவரது நினைவுகளில் ஆழ்ந்து கிடந்தனர். இதுபோன்றவர்களைத் தொடர்ந்து அங்கு இயல்பாக காண முடிந்தது. அவரது திடீர் இழப்பை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு மருத்துவராக இருந்தும் தன்னை யாரிடமும் மருத்துவராகவே அணுகியதில்லை அவர். அவர் தன்னை காந்தியவாதியாக, இடதுசாரி சிந்தனையாளராக, மார்க்ஸியவாதியாக, சோசலிசவாதியாக, சுற்றுச்சூழல் ஆர்வலராக, பெண்ணியலாளராக, கல்வியாளராக, இலக்கியவாதியாக, மொழி பெயர்ப்பாளராக, எழுத்தாள படைப்பாளிகளின் நண்பராக, அவர்களது வாசகராக தன்னை எப்போதும் வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தவர். அதை அவர் தன்னிச்சையாகவோ விருப்பமாகவோ பழக்கப்படுத்தியிருந்தார். டாக்டர் இல்லாத வீட்டையும், அவரில்லாத அவரது மருத்துவமனையையும், அவரில்லாத இருப்பை கற்பனை கூட செய்ய முடியாதவர்கள்தான் வந்து அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார்கள். மருத்துவரது அடக்கத்திற்குப் பிறகு நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் அவரது மகன் தனது தந்தைக்கு அஞ்சலி செலுத்தியவர்களில் உறவினர்களை விடவும் பலரும் அவரது நண்பர்களாகவே இருந்தனர் என்றும், வந்தவர்களில் பலரையும் தங்களுக்கு அடையாளம் தெரியவில்லையென்றும், அவருக்கு இத்தனை நண்பர்களா என்கிற ஆச்சர்யமே தங்களுக்கு ஏற்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். அதுதான் அவர் இறந்ததற்கு ஒரு வாரமாக நிகழ்ந்து கொண்டிருந்தது. மருத்துவரின் வீட்டிற்கு வரும் நண்பர்களை அவரது குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்திட மருத்துவரின் நண்பர்கள் அவரது வீட்டில் தொடர்ந்து இருக்கும் நிலையே ஏற்பட்டது.

பொதுவாகவே தன்னை ஜீவா என்றழைப்பதை அதிகம் விரும்பும் டாக்டர் தன்னை பொதுவெளியில் எப்போதும் மருத்துவராக அறிமுகப்படுத்திக் கொள்ள விருப்பம் கொண்டவராக இருந்ததே இல்லை. அப்படி அறிமுகப்படுத்திக் கொள்வதை அவர் ஏற்றுக் கொள்ளாதவராகவே இருந்தார். இலக்கியப் பரப்பில் ஜெயகாந்தன் காலத்தைய எழுத்தாளர்கள் முதல் இந்தத் தலைமுறை சமகால எழுத்தாளர்கள் வரை மதித்துப் போற்றினார். ஜெயகாந்தனை தனது மருத்துவக் கல்லூரி காலத்தில் கல்லூரி விழாக்களுக்கு அழைத்து இலக்கியக் கூட்டங்களை நடத்தியவர், ஜெயகாந்தன் அருகாமை மாவட்டங்களுக்கு எங்கு வருகை தந்தாலும் நண்பர்கள் பட்டாளத்துடன் சென்று பார்த்து விசாரிப்பதும், பேசிக் களித்து, பொதுக்கூட்டப் பேச்சை கேட்டு வருவதும் அவரது வழக்கமாகவே இருந்தது. ஈரோட்டில் விமலாதித்த மாமல்லன் இருந்த போது அவர் மருத்துவருக்கு மிகவும் விருப்பமானவராகவே இருந்தார். தமிழக அளவில் முதன்முறையாக நண்பர்கள் ஒன்று சேர்ந்து விடியல் திரைப்பட சங்கம் நடத்தியுள்ளனர். ஈரோட்டிற்கு வந்த பிரமிள் கலந்து கொண்ட இலக்கியக் கூட்டத்தில் கலந்து கொண்டதையும் அந்தக் கூட்டத்தில் வழக்கமான பிரமிளைப் பார்த்து வியந்து இலக்கியம் வாசிக்காதவர்களை, நவீனக் கவிதைகளில் பரிச்சயமில்லாதவர்களை வெளியேற்றினார் பிரமிள் என்று மருத்துவர் ஜீவா சொல்லக் கேட்டதுண்டு.

உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த பிரபஞ்சனுக்கு மாத்திரைகளை வழங்குவதற்காக புதுச்சேரி சென்று வந்து கடைசிவரை அவர் உயிர் பிழைத்திட தனது புதுச்சேரி மருத்துவ நண்பர்களிடம் பிரபஞ்சனை அனுப்பி சிகிச்சை பெற வைத்தவர். இத்தனை முயற்சிக்கும் பிறகும் பிரபஞ்சன் இழப்பை ஏற்றுக் கொள்ள முடியாமல் திணறிப் போனதை நாங்கள் அறிவோம். அதே நிலைதான் நேற்று வரை கி.ராஜநாராயணனுக்கும் நடைபெற்றது. ஒரு நண்பர் எங்களை அழைத்து கி.ராஜாநாராயணன் யாரின் அழைப்பையும் எடுப்பதில்லை. மருத்துவர் ஜீவாவின் அலைபேசி அழைப்பை மட்டுமே விருப்பமாக எடுப்பதாகவும், அவரது அலைபேசி அழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தனர். அதனால் ஜீவாவை பேசச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டனர். அதன்பேரில் மருத்துவரிடம் கேட்டதற்கு இன்று கூட காலை அவரிடம் பேசியதாகத் தெரிவித்தார். அந்த ஆச்சரியம்தான் மருத்துவர் ஜீவா.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எழுத்தாளர்களுக்கு பரிச்சயம் செய்வதற்காக ஊட்டியில் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னரே சோலைச்சந்திப்பை நடத்தியவர். அதில் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார், கோவை ஞானி, எஸ்.என். நாகராஜன், தேவதேவன் உள்ளிட்ட சமகால படைப்பாளிகள் கலந்து கொண்டனர். எழுத்தாளர்களையும் சுற்றுச்சூழல் குறித்து பேச வைத்தவர் மருத்துவர் ஜீவானந்தம். காந்திய சிந்தனைகள் பேசுவதற்காக ஈரோட்டிற்கு ஜெயமோகனை வரவழைத்தவர் மருத்துவர் ஜீவானந்தம். தொடர்ந்து பல வாரங்கள் விவசாய சங்கக் கூட்டரங்கில் குறைந்த காந்திய சிந்தனையுள்ள குறைவானவர்கள் கூட்டத்தில் பல வாரங்கள் ஈரோட்டிற்கு வந்து பேசிப் போனார் ஜெயமோகன். அதற்குப் பிரதிபலனாகத்தான் இன்றைய காந்தி புத்தகத்தினை மருத்துவர் ஜீவானந்தத்திற்கு சமர்ப்பணம் செய்தார் ஜெயமோகன். யானை டாக்டர்

எழுதிய ஜெயமோகனை கொண்டாடித் தீர்த்தார் டாக்டர் ஜீவா. அதேபோல்தான் கோபிச்செட்டிப்பாளையத்தின் காந்தி லட்சுமண அய்யரை தமிழகம் அளவிற்கு அடையாளப்படுத்திய மருத்துவர் ஜீவா அவரது மறைவின் போது 'தினமணி'யில் முதல் பக்கத்தில் அவரது மறைவு குறித்த கட்டுரை வந்தபோதும் கலங்கித் தீர்த்தார்.

கவிதைகளை எழுதுவோரை ஊக்கப்படுத்து வதற்காக தமிழகம் முழுவதுமுள்ள கவிஞர்களுக்கான கவிதைப் பட்டறையை போதிமேடை அமைப்பின் மூலம் நடத்தியவர். சமகால எழுத்தாளர்கள், கவிஞர்களை ஈரோட்டிற்கு வரவழைத்து பேசவைத்து அவர்களை ஊக்கப்படுத்தியவர். ஓவியத்திலும் ஆர்வமுள்ளதால் சந்துரு, பாஸ்கரன் உள்ளிட்ட ஓவியர்களை ஈரோட்டிற்கு அழைத்து வந்து மாணவ,மாணவியர்கள் முன்னிலையில் ஓவியப்ப-யிற்சி போல் ஓவியர்களை வீதிகளில் மக்களையும், அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவரையும் அமர வைத்து ஓவிய உணர்வை மழலை ஓவியர்களுக்கு ஊட்டியவர். பிரெயின் பேங் என்கிற அமைப்பைத் தொடங்கி படித்த புத்தகங்களின் அனுபவங்களை பகிரச் சொன்னவர். அருந்ததிராயின் 'காட் ஆப் ஸ்மால் திங்க்ஸ்' புத்தகத்தைப் படித்தவர்கள் அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் விமர்சனப்படுத்திடவும் ஆங்கிலப் பேராசிரியர்களுக்குப் பதில் தபால் அட்டையுடன் அனுப்பச் செய்தவர்.

பாரதியின் மீது பற்றுக் கொண்ட மருத்துவர் ஜீவானந்தம் தமிழகத்தில் தடை செய்யப்பட்டிருந்த அவரது ஆங்கில குறுநாவலை 'பொன்வால் நரி' என்கிற பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டவர். தமிழகம் அறியாத ஜே.சி.குமரப்பாவையும், தில்லையாடி வள்ளியம்மையையும் நூல்கள் மூலம் அறிமுகம் கொடுத்தவர். அதேபோல் திப்புசுல்தான் குறித்த ஆங்கில நூலை தமிழில் முதலில் மொழிபெயர்த்து மதநல்லிணக்கத்திற்கு அச்சாரம் போட்டவர்.

அவரது மொழிபெயர்ப்புக்கள், துண்டுப் பிரசுரங்களுக்கான தயாரிப்புகள் அனைத்துமே பயன்படுத்தப்பட்ட வெள்ளைத்தாளின் மறுபக்கமே எழுதப்பட்டன. அதனை வழக்கமாகவே வைத்திருந்தார். திருமண அழைப்பிதழ்கள்,விளம்பர அறிக்கைகள் என ஒருபக்கம் காலி வெள்ளைத் தாளின் மறுபகுதியில்தான் அவரது எழுத்துப் பயன்பாடு பெரும்பாலும் அமைந்திருந்தது. அவரைப் பின்பற்றி அவரது பல நண்பர்களும் பயன்படுத்தப்பட்ட தாளின் பயன்படுத்தப்படாத மறுபக்கங்களையே இன்றும் எழுதப் பயன்படுத்தி வருகின்றனர். அவரிடம் 24 மணி நேரமும் எது குறித்தாவது திட்டமிருந்து கொண்டேயிருக்கும்.. எதையாவது எழுதிக் கொண்டும் மொழிபெயர்த்துக் கொண்டுமிருப்பதும் அவரது வாடிக்கையான பழக்கமானது. கடந்த 10 ஆண்டுகளாக அவரால் எழுதப்பட்ட நூல்கள் 100க்கும் மேலிருக்கும். எப்படி இவ்வளவு வேகமாக மொழிபெயர்க்க முடிகிறது என்பது ஆச்சர்யமாகவே இருக்கும். வாசிப்பும் அப்படித்தான். ஆங்கில ஹிந்து நாளிதழின் முக்கியக் கட்டுரைகள் அன்றைய மதியத்திற்குள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும். பலருக்கும் தெரியாத, அதுவரை அறிமுகமில்லாத புதிய விசயங்களை எழுதுபவர்களைக் கொண்டாடித் தீர்த்து விடுவார். அதனைப் பிறருக்கும் தெரியப்படுத்திட மிகவும் அக்கறை கொண்டவர். அதனாலேயே இன்றும் அவர் போற்றப்படுகிறார். கையால் எழுதுவதை விடவும் கணினியில் வேகமாகவும் விரைவாகவும் எழுதலாம் எனக்கூறி அவருக்கு கணினியை வழங்கியும் அவர் அதை ஏற்றுக் கொள்ளாமல் அது சரியாக வராது என்று கடைசி வரை எழுதிக் கொண்டேயிருந்தார்.

அவரால் எல்லாச் சிந்தனைகளையும் ஒன்றாகவே பாவிக்க முடிந்திருக்கிறது. அனைத்தையும் சமமாகவே யோசித்து எழுதினார். அதனாலேயே அனைத்துத் தரப்பு சிந்தனையாளர்களும் அவருக்கு நண்பராக இதுவரை நட்பாக உள்ளனர். சோசலிச சிந்தனைக்கும், காந்தியச் சிந்தனைக்கும், இடதுசாரி சிந்தனைக்கும் இணைப்புப் பாலமாகவே இருந்தார். மாற்றுக்கருத்து இருக்கும் நண்பர்களையும் நண்பராகவே கைக்குலுக்கும் தன்மை கொண்டவர் அவர். தமிழகத்தில் இதுவரை அறியாத பலவற்றையும் அனைவருக்கும் தெரியப்படுத்திட வேண்டுமென்று அக்கறை கொண்டவர். குறிப்பாக, லாரிபெக்கர் வீடு கட்டும் முறை, ஜே.சி.குமரப்பாவின் காந்தியப் பொருளாதாரம், திப்புசுல்தான், தில்லையாடி வள்ளியம்மை உள்ளிட்டவர்களை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை கொண்டவர். கண்பார்வை குறைந்த கிரெட்டா துன்பெர்கா மற்றும் லிசிப்பிரியா போன்ற சிறுமிகளால் எப்படி இப்படி யோசிக்க முடிகிறது, செயல்பட முடிகிறது. அவர்களைப் போன்றவர்களால்தான் இந்த முதிய வயதிலும் தன்னை இன்னும் உற்சாகமாக இயக்கி வைத்துக் கொள்ள முடிகிறது என்று கூறுவார். துன்பெர்க்காவின் படத்துடன் கூடிய வாசகத்துடன் சுவரொட்டிகளை அடித்து தமிழகம் முழுவதும் தனக்குத் தொடர்புள்ள பள்ளி,கல்லூரிகளுக்கு அனுப்பி வைத்தார். கிரெட்டா துன்பெர்க்காவின் பேச்சடங்கிய மொழிபெயர்ப்புப் பிரதிகளை அச்சடித்து தமிழகம் முழுவதும் விநியோகித்தார். காந்தியின் 150-ஆண்டை மிகவும் அவசியத்துடன், அக்கறையுடன் கொண்டாடித் தீர்த்தவர். பள்ளி, கல்லூரிகளுக்கு காந்தியின் கருப்பு வெள்ளைப் படத்துடன் அவரது முக்கிய வாசகங்கள் அடங்கியவைகளை அனுப்பி வைத்தவர். அதனை பள்ளி, கல்லூரிகள் ஒட்டியதா இல்லையா அவரிடம் பதிலில்லை. என் வேலை அனுப்பி வைப்பது மட்டுமே என்பார். தன்னந்தனி மனிதராகவே அவருக்குத் தோன்றியதை சலிக்காமல் செய்து வந்தது இன்று நினைத்தாலும் வியப்பையே தருகிறது.


அவரால் எழுத முடிகிற வரை எழுதிக் கொண்டுதான் இருந்தார். தன்னால் எழுத முடியவில்லை

என்பதை அவரால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. குடும்பத்தார், மருத்துவர்கள், நண்பர்கள் எதிர்ப்பை மீறியும் ஓய்வின்றி எழுதிக் கொண்டே நண்பர்களின் உதவியுடன் துண்டுப்பிரதிகளாக அடித்து அதனை கடைசிவரை அனுப்பிக் கொண்டே இருந்தார். இல்லையென்றால் வாட்ஸ் அப்கள் மூலம் தனது நண்பர்களின் பார்வைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அதற்கான விமர்சனங்களையும், எதிர்வினைகளையும் தனக்கானது என்று கருதி எதையும், எப்போதும் ஏற்றுக்கொள்ளத் தயாராகக் காத்திருந்தவர்.

அவரது அணுக்கமான நண்பர்கள், பிரியமான தலைவர்கள் இறப்பும், இதயநோய் பாதிப்பும் மரணத்தை எதிர்கொள்ள முடியாத தன்மையை அவருக்குள் ஏற்படுத்தியது. கடந்த சில ஆண்டுகளாக தனது நண்பர்களின், உறவினர்களின் மரணத்தை அவர் தாங்கிக் கொள்ள முடியாத நிலையை உணர முடிந்தது. அதேபோல் உறவினர்கள், நண்பர்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டால் வீட்டாருக்கும் தெரியாமல் நண்பர்கள் உதவியுடன் சென்று பார்த்து ஆறுதல் கூறி வந்தார். இதயப்பாதிப்புக்குப் பிறகு உயிர்பிழைத்த அவர் கடந்த சில ஆண்டுகளாகவே மரணம் குறித்து தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். மரணம் குறித்த அவரது பேச்சுக்கள் நண்பர்களால் ஏற்க முடியாததாகவே இருந்தது. கொரோனாவிற்குப் பிறகு அவருக்கு மீண்டும் உடல்நிலையில் தொய்வு ஏற்பட்டு ஓய்வாக இருந்த போதும் நண்பர்களிடம் உரையாடுவது, மொழிபெயர்ப்புகளைத் தேடித்தேடி செய்வது நண்பர்களுக்கு விநியோகிப்பது, நண்பர்களை விசாரிப்பதன் மூலம் உரையாடுவது என்பது நிற்காமல் தொடர்ந்த வண்ணம் இருந்தது. அவருக்கு ஓய்வு என்பது தற்போது அவருக்குக் கிடைத்துள்ள மரணம் மட்டுமே. எப்போதோ அவர் தனது குடும்பத்தினருடன் பேசிக்கொண்டிருந்த போது தனது மரணத்திற்குப் பிறகு தனது அஸ்தியைக் காட்டிற்குள்ளும், நேருவின் அலகாபாத் வீட்டினருகிலும் கரைக்கப் பட வேண்டுமென்பதே அவர் விருப்பமானதாக இருந்திருக்கிறது.

எழுத்தையும் வாசிப்பையும், அன்பைப் பகிர்வதுமாக இருந்த மருத்துவர் ஜீவானந்தத்தின் திடீர் மரணத்தை ஏற்க முடியாதவர்கள் அவரது திடீர் மரணத்தை ஏற்றுக் கொள்ளாமல் திண்டாடிப் போயினர். அவருக்கு வைத்தியம் பார்த்த மருத்துவர்கள், அவரது மருத்துவ நண்பர்கள், இலக்கியவாதிகள், காந்தியவாதிகள், இடதுசாரி நண்பர்கள், சுற்றுச்சூழல் நண்பர்கள் எனப் பலரும் அதையே திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருந்தனர். அவரது உடலும், உயிரும் மறைந்திருக்கலாம், அவரது உணர்வுபூர்வமான உண்மை இன்றும் அவரது எழுத்துக்கள் மூலமும், நட்பு மூலமும், கைக்குலுக்கல்கள் மூலமும், அன்பு விசாரிப்பு மூலமும் அனைவரிடத்திலும் வாழ்கிறது... வாழ்ந்து கொண்டிருக்கும்...


●



## அஞ்சலி

தமிழ் மொழி குறித்தும் சைவ சமயம் குறித்தும் அபாரமான புலமையும் ஈடுபாடும் கொண்டு தமிழிலும், ஆங்கிலத்திலும் ஏராளமான நூல்களை எழுதியுள்ளதோடு மிகச்சிறந்த சைவசமயச் சொற்பொழிவாளராகவும் திகழ்ந்த தி.ந.இராமச்சந்திரன் அவர்கள் 6-4-2021 அன்று இயற்கை எய்தினார்.

'சேக்கிழார் அடிப்பொடி' என்ற சிறப்பு பெற்ற சைவ சித்தாந்தப் பேரறிஞர் முனைவர் தி.ந.இராமச்சந்திரன் அவர்களின் மறைவுக்கு 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.




# புரட்சிக்காரரான டாக்டர்

எம். பாண்டியராஜன்

டாக்டர் ஜீவா என்று பரவலாக அறியப்பட்டவர் ஈரோடு டாக்டர் வெ. ஜீவானந்தம். ஒப்பாரும் மிக்காருமில்லா கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர் ஜீவாவைப் போலவே, ஈரோட்டில் மாதக்கணக்கில் தங்கள் வீட்டில் தங்கியிருக்கப் பெற்ற ஜீவாவின் பெயரையே தன் மகனுக்கும் சூட்டினார் தந்தை தோழர் வெங்கடாசலம்.

பிறப்பில் தொடங்கி ஒட்டுமொத்த வாழ்வையுமே ஆக்கபூர்வமான ஒரு பெரும் புரட்சிக்காரராக வாழ்ந்து சென்றுவிட்டார் டாக்டர் ஜீவா -*Constructive Rebel.*

டாக்டரின் தந்தை எஸ்.பி. வெங்கடாசலம், சராசரி குடும்பத்திலிருந்து வந்தவர் என்றாலும் ஈரோட்டில் வலுவான சமூக - பொருளாதார பின்புலம்கொண்ட சாதியைச் சேர்ந்தவர். இளமையிலேயே நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கத் தொடங்கி, தலைமறைவு

நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றவர். கம்யூனிஸ்ட்டாக அறியப்பட்டு அவ்வாறே கடைசி வரை வாழ்ந்தவர்.

கம்யூனிஸ்டாக செயல்பட்டுக்கொண்டே பல்வேறு வணிக முயற்சிகளிலும் ஈடுபட்டுத் தோற்றும் வென்றும் வந்த வெங்கடாசலம், கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் பலரையும் தன் வீட்டில் தங்கவைத்துப் பார்த்துக்கொண்டவர். இவர்கள் குடும்பத்தின் வாழ்க்கைச் சூழல் ஒருபோதும் இவற்றுக்குத் தடையாக இருக்கவில்லை.

தோழர் வெங்கடாசலம் அந்தக் காலத்திலேயே குடும்பத்தை எதிர்த்து, டாக்டரின் அம்மா - லூர்து மேரியைக் காதல் திருமணம் செய்துகொண்டார். ஒட்டுமொத்த உறவுகளும் இவர்கள் குடும்பத்தை ஒதுக்கிவைத்துவிட்டனர். டாக்டர் பிறந்தபோது தந்தையின் குடும்ப உறவுகள் ஒருவரும் பார்க்கக்கூட வரவில்லை, புறக்கணிக்கப்பட்டவராகப் பிறந்தார்.

இந்தப் புறக்கணிப்பு சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்திருக்கிறது. கடைசி வரையிலும்கூட இதுதொடர்பான சிக்கல்களும் சங்கடங்களும் டாக்டரை விடவில்லை.

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து எம்பி-பிஎஸ் படிக்கும்போதுதான் லேசான அரசியல் ஈடுபாடுகள் ஏற்படுகின்றன. ஜெயகாந்தன் போன்ற எழுத்தாளர்கள், அரசியல் உணர்வுள்ள நண்பர்கள் நிறைய.

எம்பிபிஎஸ்ஸுக்குப் பிறகு, சென்னையில் மயக்கவியல் படித்துவிட்டு ஈரோடு வரும்போது டாக்டர்தான் மாவட்டத்தின் முதல் மயக்கவியல் படித்த மருத்துவர். ஆனால், அந்தப் படிப்பைப் பணமாக மாற்றும் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை அவர்.

டாக்டரின் திருமணமும் அந்தக் காலத்தில் அவர் சார்ந்த சமூகத்தில் நினைத்தும் பார்க்க முடியாதது. சாதிவிட்டு, மதம் விட்டுத் தந்தை மணம்புரிந்துகொண்டதால் இவர்கள் குடும்பத்துக்கு எதிரான புறக்கணிப்பு தொடர்ந்துகொண்டிருக்க, டாக்டர் ஏற்கெனவே மணமாகித் தோல்வியில் முடிந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறார். டாக்டரின் வாழ்நாள் முழுவதும் அவருடைய பணிகளுக்கு எவ்விதத் தொய்வும் நேரிடாமல், குடும்ப விஷயங்கள் பற்றியெல்லாம் டாக்டர் அக்கறை கொள்ளக்கூடிய அவசியமில்லாமல் தாங்கிக் கொண்டிருந்தவர் டாக்டரின் மனைவி இந்திரா.

முதன்முதலில் பிறந்த மகனை - சசிதரன் - அவன் பிறப்பதற்கு முன்னரே, குழந்தையில்லாத அவருடைய சகலைக்குத் தருவதாக வாக்குறுதி தந்துவிட்டு, பிறந்தவுடன் தத்துப்பிள்ளையாகத் தூக்கிக் கொடுத்தவர் டாக்டர். அன்றைக்கு டாக்டரின் அந்த முடிவை மனைவி இந்திரா, தாய், தந்தை உள்பட அனைவரும் ஏற்று ஆதரித்தனர். நினைத்தும் பார்க்க முடியாதது.

இரண்டாவதாகப் பிறந்த மகன் சத்யாவும் பின்னர் பிறந்த திவ்யாவும்தான் டாக்டரின் பிள்ளைகளாக வளர்ந்தவர்கள். இருவரையுமே டாக்டர் வீட்டுக் குழந்தைகளாக வளர்க்கவில்லை அவர். இருவரும் அவர்கள் விரும்பியதைப் படிக்க விட்டார். நாம் அறிந்த பெரும்பாலான டாக்டர்களின் வழக்கப்படி, தன்னுடைய மக்களையும் டாக்டராக்கிப் பார்க்க எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை நம்முடைய டாக்டர்.

டாக்டரின் மகன் சத்யா காதலித்தபோது, எல்லா எதிர்ப்புகளையும் பேசி சமாளித்து, டாக்டர் ஆதரவுடன் திருமணத்தை நடத்திவைத்தவர் டாக்டரின் தந்தை வெங்கடாசலம். டாக்டரின் குடும்பத்தில் நிறைய காதல் திருமணங்கள். டாக்டர் எப்போதும் ஊருக்கு மட்டும் உபதேசிப்பவர் அல்லர், தன்னளவிலும் மிகப் பெரிய விஷயங்களைக்கூட சாதாரணமாகச் செய்து முடிப்பவர்.

டாக்டரின் பேருதவிகள் என்பவை பெரும்பாலும் வலது கை கொடுப்பதை இடது கை அறியாது என்ற வகைப்பட்டவைதான்.

பெரும்பாலும் டாக்டர்கள் எப்போதும் வாங்கித்தான் பார்த்திருக்கிறோம், கொடுத்துப் பார்த்திருக்கிறோமா? 1995-97-ல் ஏதோ ஒரு நாள் (நான் ஈரோட்டில் தினமணி செய்தியாளர்).அப்போதுதான் டாக்டருடைய கிளினிக்கிற்குள் சென்றேன். மனைவியுடன் ஒரு நோயாளி வந்திருந்தார், கொடுமுடி பக்கமிருந்து யாரோ ஒரு கட்சித் தோழர் பரிந்துரைத்து டாக்டரைப் பார்க்க அனுப்பியிருக்கிறார். டாக்டரும் பரிசோதித்துவிட்டு நிறைய மருந்து, மாத்திரைகள், ஒரு மாத காலத்துக்காக இருக்கும் என நினைக்கிறேன், எழுதிக்கொடுக்கிறார். அவர்கள் தயங்கியபடியே நிற்கிறார்கள். இவ்வளவெல்லாம் எங்களால் வாங்க முடியாது டாக்டர், காசு கிடைக்கும்போதுதான் வாங்கிக்கொள்ள முடியும். கொடுமுடியில் இவை கிடைக்குமா? இதற்காக இங்கே வர முடியுமா, அங்கே கிடைக்கிற மாதிரி எழுதிக்கொடுங்கள் என்கின்றனர். மருந்துச் சீட்டை மீண்டும் வாங்கிய டாக்டர், ஏதோ குறித்துக்கொடுத்து, அருகேயிருக்கும் ஒரு மருந்துக் கடையின் பெயரைச் சொல்லி, அங்கே போய் நான் சொன்னதாகச் சொல்லுங்கள், பணம்

எதுவும் கேட்க மாட்டார்கள், வாங்கிச் செல்லுங்கள். மருந்து முடிந்ததும் அவசியம் வர வேண்டும் என்றார். நம்ப முடியாத விதத்தில் நகர்ந்து சென்றார்கள் அவர்கள். மருந்துக் கடையில் டாக்டர்களுக்கு கமிஷன் தருவார்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். கணக்கு வைத்துக் கடன் தந்தார்கள். எத்தனை பேருக்கு இப்படி, எவ்வளவு காலமாக இப்படி, தெரியவில்லை. ஆனால், கடைசி வரை இந்த பாணி ஏதோ ஒரு வகையில் தொடர்ந்துகொண்டுதானிருந்தது.

வீரப்பன் காலத்தில் ஒரு முறை அந்தியூருக்கு மேலே தேவர்மலையில் மலைவாழ் மக்களுக்கான மருத்துவ முகாம். ஒரு நடுத்தர வயதுப் பெண் வந்து தனக்கு இரு கால்களின் பாதங்களும் எரிவதாகச் சொன்னார். டாக்டர் சில மருந்து மாத்திரைகளைத் தந்துவிட்டு, சில உணவு முறைகளை மாற்றச் சொன்னார். அந்தப் பெண் சென்ற பிறகு, டாக்டர் அவருக்கு சர்க்கரைப் பிரச்சினையாக இருக்குமோ என்றேன் சந்தேகத்துடன். இருக்கலாம், வாய்ப்பிருக்கிறது. ஆனால், பொதுவாக மலைவாழ் மக்களுக்கு சர்க்கரைப் பிரச்சினை வருவதில்லை(ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முந்தைய உணவுப் பழக்கவழக்கத்தில்). இந்தச் சூழ்நிலையில் ஒரு சர்க்கரை நோயாளியாக அவர் வாழ்வதில் நிறைய சிரமமிருக்கிறது. நிதானமாகத்தான் கையாள வேண்டும், அடுத்த முகாமிற்கு வரும்போது பார்க்கலாம் என்றார் டாக்டர். நோயாளர்களை வெறும் டாக்டராக மட்டும் அணுகுவதில்லை அவர்.

விழுப்புரம் பக்கம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்குச் சிகிச்சையளிப்பது தொடர்பாக, முன் அறிமுகம் இல்லாத நிலையிலும் என்.சி.பி.எச்.சில் பணிபுரியும் தோழர் என்று அறிமுகம் செய்துகொண்டு தொலைபேசியில் கேட்கிறார் நண்பர் சேகர். வேறெங்கும் அலைய வேண்டாம், அருகில் புதுச்சேரி புற்றுநோய் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு சொல்லுங்கள், பார்த்துக்கொள்வார்கள் என்று சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி ஏற்பாடு செய்துவிட்டார்.

மக்களுக்காக மருத்துவம் என்ற இலக்குடன் டாக்டர் தொடங்கிவைத்த மருத்துவமனைகள், நிறுவனங்களை எல்லாம் கார்ப்பரேட் பாணியில் பெரு நிறுவனங்களாக, லாபத்தை நோக்கமாகக் கொண்டுநடத்தியிருந்தால் இன்று தமிழகம் முழுவதும் சங்கிலித் தொடர் மருத்துவமனைகளை உருவாக்கிப் பெரு வணிக மருத்துவராகியிருக்கலாம்.

ஆனால் டாக்டரின் திட்டங்கள், யோசனைகள் யாவும் ஜனநாயகப்படியானவை. கூட்டுறவு முறையில்தான், எண்ணற்றோர் பங்கேற்கும் வகையில்தான் எல்லாவற்றையும் திட்டமிட்டார், தொடங்கினார், நடத்தினார். தமக்கு இணக்கமில்லாத தருணங்களில் சிலவற்றைவிட்டு வெளியேறவும் செய்தார்.

முதன்முதலில் நண்பர்களுடன் இணைந்து கியூரி மருத்துவமனை, சித்தார்த்தா பள்ளி, இயற்கை உரத் தயாரிப்பு, இயற்கை அங்காடி, பாரதிதாசன் கலை - அறிவியல் கல்லூரி, ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனை, புற்றுநோயாளிகளுக்கான காப்பகமான இமயம், ஈரோடு புற்றுநோய் மருத்துவமனை, ஊத்துக்குளியில் மக்கள் மருத்துவமனை, தஞ்சையில் ஜீவா நூற்றாண்டு அறக்கட்டளை புற்றுநோய் மருத்துவமனை, பெங்களூருவில் கேன்சர் சென்டர், புதுச்சேரி புற்றுநோய் மருத்துவ மையம், கடலூரில் நியூ மில்லேனியம் பள்ளி, நியூ மில்லேனியம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஈரோடு பல்நோக்கு மருத்துவமனை, முதியோர் இல்லங்கள்... என சொல்லிக்கொண்டே செல்லலாம். எளிய மனிதரான டாக்டர் முன்னின்று எடுத்த முயற்சிகளும் சாதனைகளும் எத்தனையெத்தனை?

ஈரோட்டில் குடிநோயிலிருந்து குடிநோயாளிகளை மீட்பதற்காக டாக்டர் தொடங்கிய ‘நலந்தா’ குடிநோயாளிகள் மீட்பு மையத்தால் குடியிலிருந்து மீண்டவர்கள் பல்லாயிரம். குடியிலிருந்து தங்கள் குடும்பத்து ஆண்களை மீட்டதற்காக இன்றும் இந்தப் பல்லாயிரம் குடும்பங்களின் பெண்கள் டாக்டரின் பெயரை நினைக்கிறார்கள்.

டாக்டர் ஒரு கம்யூனிஸ்டாக அறியப்பட்டாலும் அடையாளங் காணப்பட்டாலும் அவரை அவ்வாறு ஒற்றைப்புள்ளியில் ஒருக்காலும் சுருக்கிவிட முடியாது என்பதை அவரை ஓரளவு அறிந்தவர்களாலும் உணர்ந்துகொள்ள முடியும்.

உள்ளபடியே, காந்தியமும் கம்யூனிசமும் சரியான விகிதத்தில் கலக்கப்பட்ட கலவையான மனிதராகத்தான் தோன்றும் டாக்டரைப் பார்க்க. கம்யூனிசத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையில் எள்ளளவும் குறையாமல் காந்திய சிந்தனையிலும் கிராமப் பொருளாதாரத்திலும் நம்பிக்கை வைத்திருந்தார். கரோனா காலத்தில் உலகின், குறிப்பாக இந்தியாவின் சமூக - பொருளாதாரச் சூழலை முன்வைத்து, கம்யூனிசமும் காந்தியமும் கலந்த அணுகுமுறையில் அவர் எழுதிய கட்டுரைகள் யாவும் பொருள் பொதிந்தவை, காலத்துக்குப் பொருத்தமானவை.

மகாத்மா காந்திக்கே கிராமப் பொருளாதாரத்தின் நுட்பங்களை அறியத் தந்தவரென அறியப்படும் தமிழரான கிராமப் பொருளியல் வல்லுநர்

ஜே.சி. குமரப்பாவைப் பேசிப் பேசி, எழுதி எழுதி மக்களுக்குக் கொண்டுசென்றவர் டாக்டர். காந்தியையும் குமரப்பாவையும் காங்கிரஸ்காரர்களே கைவிட்டுவிட்டதுதான் பெரும் சோகம் என்பார் அவர். காந்தி, குமரப்பா தொடர்பாக எண்ணற்ற நூல்களை எழுதியிருக்கிறார் டாக்டர்.

நூறுக்கும் அதிகமான நூல்களை, இவற்றில் ஏறத்தாழ பாதி குறுநூல்கள், எழுதியுள்ள டாக்டர், மொழிபெயர்ப்பில் அதிக அக்கறை கொண்டிருந்தார். சுற்றுச்சூழல் தொடங்கி, உலகில் தனக்குப் பிடித்த ஒவ்வொன்றையும் தான் நம்புகிற ஒவ்வொன்றையும் எழுதினார், மொழிபெயர்த்தார். ஒரு முறை கடோபநிஷத் பற்றியும் நசிகேதனின் கேள்விகள் பற்றியும் டாக்டர் விலாவாரியாகப் பேசியபோது என்னால் நம்பவே முடியவில்லை.

சுற்றுச்சூழல் விஷயங்களில், பிரச்சினைகளில் பெரும் அக்கறை கொண்டு செயலாற்றிய டாக்டர் மற்றும் தமிழக பசுமை இயக்கத்தின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று, பவானி நதி நீர் காக்கப்பட்டது. பவானி ஆற்றில் ஆபத்தான ரசாயனக் கழிவுகளை வெளியேற்றிய விஸ்கோஸ் ஆலைக்கு எதிரான போராட்டங்களை மக்கள்மயப்படுத்தியதிலும் வெற்றி பெறச் செய்ததிலும் டாக்டருக்குப் பெரும் பங்கிருக்கிறது.

திருப்பூர் ஆலைகளிலிருந்து நொய்யலில் வெளியேற்றப்பட்ட சாய, சலவைக் கழிவு நீரும் ஒரத்துப்பாளையம் அணைப் பிரச்சினையும் தொடர்பான போராட்ட முன்னெடுப்புகளில் பெரும் பங்காற்றினார் அவர்.

கோரிக்கையற்றுக் கிடக்கிறது ஒரு டிஎம்சி தண்ணீர் என்ற தலைப்பில் 'தினமணி'யில் முதன்முதலில் ஒரத்துப்பாளையம் அணையின் சிக்கலையும் திருப்பூர் கழிவு நீரின் ஆபத்தையும் அம்பலப்படுத்துவதில் எனக்கு உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்தவர்கள் இருவர் - கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கச் செயலராக இருந்த செ. நல்லசாமி, டாக்டர் ஜீவா.

பின்னால், திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்கு முடிவு கட்ட சென்னை உயர் நீதிமன்றம் அமைத்த வல்லுநர் குழுவில் இடம்பெற்று கள ஆய்வுகளை மேற்கொண்ட பாசனப் பொறியியல் வல்லுநர் முனைவர் பழ. கோமதிநாயகத்துடன் இணைந்து விவசாயிகளின் தரப்புக்கான நியாயத்தை முன்னெடுத்ததில் டாக்டருக்குப் பெரும் பங்கிருந்தது(திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்கு முடிவு காண்பதில் உயர் நீதிமன்றத்தில் இந்தக் குழுவினர் சமர்ப்பித்த அறிக்கை மிகப் பெரிய பங்காற்றியது).

மத நல்லிணக்கத்தில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த டாக்டர், ஒரு காலகட்டத்தில் திப்புவைப் பற்றியும் அவருடைய மத நல்லிணக்க அணுகுமுறை பற்றியும் பேசியும் எழுதியும் பிரசாரமே செய்துகொண்டிருந்தார். திப்புவின் வாள் நூலையும் மொழிபெயர்த்தார் (என்சிபிஎச் வெளியீடு). தன் வாழ்வின் இறுதிக் காலத்தில்கூட ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து மத நல்லிணக்கம் பேண மாநிலந்தழுவிய அளவில் சில முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

மருத்துவம் தொடர்பான சில கருத்துகளுக்காக டாக்டர்களிடையே பெரும் எதிர்ப்பைச் சந்தித்தபோதிலும் தன் நிலைப்பாட்டை எப்போதும் மாற்றிக்கொண்டதில்லை அவர்.

டாக்டருக்குப் படித்தவர். தொழில்முறை டாக்டர் என்றாலும்கூட அவர் எப்போதுமே தன்னை டாக்டராக மட்டும் சுருக்கிக்கொண்டதில்லை. தீவிரமான சமூக செயற்பாட்டாளராகத்தான் திகழ்ந்தார்.


எண்ணற்ற முகங் கொண்ட ஆளுமையான டாக்டர், கம்யூனிசத்தின் நிறைகுறைகளையும் பேசுவார், காந்தியத்தையும் கிராமப் பொருளாதாரத்தையும் விவாதிப்பார். சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் அக்கறை கொண்டிருப்பார். மக்களுக்கான மருத்துவத்திலும் ஆர்வம் காட்டிச் செயல்படுத்துவார். மனித உரிமைச் செயற்பாட்டிலும் முன்னிற்பார், மத நல்லிணக்க நடவடிக்கைகளிலும் முனைப்புக் கொள்வார். சாதுவாகக் காட்சியளிக்கும் அவருடைய கோபங்களும் சீற்றங்களும் ஆச்சரியமூட்டுபவை.

2020 ஏப். 10 - டாக்டரின் 75-வது பிறந்த நாள் விழா. அவருக்குத் தெரிவிக்காமல் பவழ விழாவாகக் கொண்டாடத் திட்டமிட்டுத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், தோழர் தா. பாண்டியன் ஆகியோரிடம் உறுதி செய்திருந்தோம். கரோனா தொடங்கிவிட்டதால் முடியாமல் போய்விட்டது. 2021-ல் அதே நாளில் பவழ நிறைவைக் கொண்டாடிவிடலாம் எனத் திட்டம். ஆனால், சொல்லாமல் கொள்ளாமல் திடீரென எல்லாரையும் ஏமாற்றிவிட்டு டாக்டர் புறப்பட்டுப் போய்விட்டார்.

பவழ விழா மலருக்கெனத் திட்டமிடப்பட்டு டாக்டரிடம் எடுக்கப்பட்ட ஒரு நீண்ட நேர்காணல் அச்சேறக் காத்திருக்கிறது - அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்!

●

# நியூ செஞ்சுரியின்
# விற்பனை சாதனை நூல்கள்




**புலம் பெயர்ந்தோர் இலக்கியம்**
**முனைவர் பா.ஆனந்தகுமார்**
விலை ₹ **80/-**




**எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்**
**ராஜ் கௌதமன்**
விலை ₹ **100/-**




**லண்டனில் சிலுவைராஜ்**
**ராஜ் கௌதமன்**
விலை ₹ **145/-**



**குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கக் கதைகள்**
**தமிழில் : எம். பாண்டியராஜன்**
விலை ₹ **99/-**



**சே.ராமானுஜத்தின் நாடக வாழ்க்கை**
**சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்**
விலை ₹ **365/-**




**தமிழால் மருத்துவக் கல்வி முடியும்**
**டாக்டர் சு.நரேந்திரன்**
விலை ₹ **165/-**



**பீகாரிலிருந்து திகார் வரை**
**கன்னையா குமார்**
விலை ₹ **110/-**



**பழந்தமிழில் எழுத்தியல் ஆய்வுகள்**
**முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்**
விலை ₹ **155/-**



**சொல் பண்பாட்டு அடையாளம்**
**இரா.வெங்கடேசன்**
விலை ₹ **200/-**



# ‘அலவாக்கோட்டை’யிலிருந்து ஓர் அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத் தலைமை ‘ஆரெம்மெஸ்’

மு.இராமசுவாமி

உலக உழைக்கும் மகளிர் தினம், இந்தாண்டு இப்படி விடியுமென்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. கூட்டணிக் குழப்பங்கள்-தொகுதி ஒதுக்கீடுகளெனத் தேர்தலை முன்னிட்டுக் கட்சிகள் கடை விரித்திருந்த ஏல வியாபாரங்கள், அல்லது ‘உள்ளே-வெளியே’ யார் யார் என்பதை விறுவிறுப்பாக்குகிற ‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியாக, ஆவலைத் தூண்டிவிட்டு, அதற்குள் ஊடகங்கள் குளிர்காய்ந்து கொண்டிருந்த, தேர்தல் திருவிழாவின் ஒரு பொழுதாக மட்டுமே இருந்திருக்கவேண்டிய அந்தநாள், ரோசா லக்சம்பெர்க், கிளாரா செத்கின் போன்ற சோசலிசப் பெண் போராளிகளை நினைக்கவொட்டாமல், ‘ஆரெம்மெஸ்’ என்கிற அறிவொளி ஒன்று அணைந்துபோனதாய், விடிகாலை 5 மணிக்கு என்னை எழுப்பியிருந்தது. காலக் கணக்கனின் கணக்கு முடிப்புகளும், எதுவொன்றின் புதிய திறப்பிற்காய்க் காத்திருக்காமல், அதன்போக்கில் கணக்கெழுதிக் கொண்டேதான் இருக்கின்றன. ‘நெருநல் உளனொருவன் இன்றில்லை’ என்பதே இவ்வுலகின் பெருமை என்கிறார் அய்யன்! 26-02-2021 இல், ‘தோழர் தா. பா.’ என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பெறும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின்

முக்கியத் தலைவர்களில் ஒருவரான தா. பாண்டியன் சென்னையில் தன் சிந்தனையை நிறுத்தியிருந்தார். கனத்த அறிவாளி; வாதங்களை எடுத்து வைப்பதில் மிகச் சிறந்த கருத்தாளி! அவர், பத்தாண்டுகளுக்கு முன், மன்னார்குடிக் கலை இலக்கியப் பெருமன்றக் கூட்டத்தில், நான் பேசிவிட்டு மேடையிலிருந்து கீழிறங்குகையில், நெஞ்சார என்னை அணைத்துத் தழுவியதை, என் மனசின் திசுக்கள் எனக்குள் இன்னமும் அழுந்தப் பேசிக்கொண்டேயிருக் கின்றன. அவர் மறைந்து சரியாகப் பத்தாவது நாளில், சிவகங்கை மாவட்டம் அலவாக்கோட்டையில் 1938 ஏப்ரல் 1 'முட்டாள்தின'த்தில் பிறந்த' அறிவியல் தமிழறிஞர்' தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர் முனைவர் இராம. சுந்தரம், 08-03-2021இல், உலக உழைக்கும் மகளிர் தினம் விடிகிற பொழுதில், தஞ்சையில் காலமாகியிருக்கிறார். இவரின், பணிநிறைவிற்குப்பின், தஞ்சையில் சந்திக்கிறபோதும், மதுரையில் நடைபெறும் எந்தக் கூட்டத்தில் என்னைச் சந்தித்தாலும், என் தோளில் கைத்தடியாய்க் கைவைத்து என்னை ஊன்றி, என்னோடு பலதையும் பகிர்ந்தபடி நடந்துவந்த, அவரின் கையழுத்தத்தின் மனத்தடம் இன்னும் என் நினைவைவிட்டு அகலாதிருக்கிறது. அவர் அன்பு காட்டுகிற எல்லோருக்குமே, இந்த அனுபவம் இருந்திருக்கக்கூடும்! தஞ்சையில் செல்லையா நகர், மதுரையில் தவிட்டுச்சந்தையென்று அவருக்கு இரண்டு பக்கமும் வீடுகள்! அலவாக்கோட்டை வீட்டிற்கும் சென்றிருக்கிறேன்; அது அவரின் மனசைப்போல விசாலமானது!

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், அவர் பி.ஏ. ஹானர்ஸ் (எம்.ஏ.க்கு நிகரானது) படிக்கையில், என் செண்பகத்தின் வகுப்புத் தோழர்; தமிழ்த் தேசிய முன்னணித் தலைவர் அய்யா நெடுமாறன் அவர்களின் வகுப்புத் தோழரும்கூட! மூவருமே, அப்பொழுது, தமிழாய்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் புடைப்புக்களாயிருந்தனர். பிற்பாடு, காலம் அவர்கள் மூவரையுமே வெவ்வேறு திசைகளில் பயணப்பட வைத்திருந்தது. நெடுமாறன் அய்யா, இந்தியத் தேசியத்தில் நம்பிக்கை கொண்டிருந்த பெருந்தலைவர் காமராசரின் நம்பிக்கைக்குரிய அரசியல் தொண்டரானார்; பின், தமிழர் தலைவர், தம்பி-பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய தமிழ்த் தேசியத் தலைவராய்த் தன்னைத் தகவமைத்துக் கொண்டிருந்தவர்; என் செண்பகம் பெரியாரை வழிமொழிந்து கொண்டிருந்த, ஒரு பெண்ணுரிமை பேசுகின்ற ஆசிரியரானார்; ஆரெம்மெஸ் ஜீவாவின் திசை நோக்கிப் பயணப்பட்டு, முழுமையான ஆசிரியர் சங்கப் பாதுகாவலராய் விளங்கிய ஒரு இடதுசாரி மொழியியல் அறிஞர் அறிவியல் தமிழ்த் துறைப் பேராசிரியர்! என் செண்பகத்தின் முகவரி சொல்லித்தான் அவர்கள் இருவருமே எனக்கு அறிமுகம்! குலுக்கிப் போட்ட சீட்டுக்கட்டின் இந்த மூன்று சீட்டுகளும், வெவ்வேறு கைகளுக்குள் மாறிமாறி உலா வந்தபோதும், மூவரும் ஒருவர் மற்றவரை மதித்ததென்பது, நெருங்கியவர்கள் மட்டுமே உணர்ந்திருக்கக்கூடிய செய்தி! என் மதிப்பிலுமே, இவர்கள் மூவருமே சமூக அர்ப்பணிப்பிலும் என் மீதுள்ள நேசத்திலும் உயர்ந்துதானிருந்தனர்.

1980 இல் துணைவேந்தர் முனைவர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் நிருவாக நடைமுறையை எதிர்த்து, மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை (MUFA) நடத்திய ஒரு போராட்டத்தில், நிருவாகக் கட்டிட வாயில் கூட்டத்தில், எங்கள் போராட்டத்தை ஊக்கப்படுத்த, எங்களிடம் பேசுவ தற்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திலிருந்து- அங்கும் அப்பொழுது தங்களுக் காய்ப் போராடிக் கொண்டிருந்த 'ஆரெம்மெஸ்' வந்திருந்தது நினைவிருக்கிறது. இந்தப் பெயர், அவர் ஓர் ஆசிரியர் சங்கப் போராளி என்பதாக மட்டுமே அப்பொழுது எனக்குள் பதிந்திருந்தது. மதுரை தியாகராசர் கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றியவர் அவர் என்பது, போராட்டக் களத்தில் சில பேராசிரியர்கள் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து அப்பொழுது எனக்குத் தெரியவந்தது. பழகுவதற்கு எளியவராய்த் தெரிந்தார். உருவேறாத ஒல்லியான உடற்தேகம்; அதற்கேற்ற உயரம்; வசீகர முகவாகு- இதுதான் அவராக எனக்குள் பதிந்திருந்தார். ஆயினும், அவருடன் எனக்குப் பெரிய பழக்கமில்லை. ஆயின் அந்தப் பெயர், எனக்குள் உருவாக்கியிருந்த 'உரி மைக்குரல்' படிமம், அவரின் இறுதிவரையிலும் எனக்குள் குறைந்ததாய்த் தெரியவில்லை. 1982 ஜூனில், மதுரை காமராசர் பல்கலையிலிருந்து நான் தஞ்சைக்குப் பணியிடம் மாறுகிற பொழு தில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வைத்துத்தான், 'ஆரெம்மெஸ்'ஸைச் சக ஊழியராய்ச் சந்திக்கிறேன். எனக்கு ஆறேழு மாதங்களுக்கு முன்தான், அவரும் அங்குவந்து சேர்ந்திருந்தார்-தமிழ் வளர்ச்சித் திட்ட இயக்குநர்கள் இருவரில் ஒருவராக! இன்னொருவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் திருக்குறள் இருக்கைப் பேராசிரியர் முனைவர் முருகரத்தினம்! 'ஆரெம்மெஸ்' உடனான பழக்கத்தின் போக்கில், அவரிடமிருந்தும், பணிபுரிவோரிடமிருந்தும், இருவரின் பகிர்வுகளிலிருந்தும் பல தகவல்கள் எங்களுக்குள் பரிமாறிக் கொள்ளப்பட்டிருந்தன. பூனாவிலுள்ள டெக்கான் கல்லூரியின் மொழியியல் துறையில் ஆய்வாளராகக் கொஞ்சகாலம் பணிபுரிந்திருந்ததும், அங்கிருந்து தியாகராசர் கல்லூரிக்கு வந்ததும், அதன்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இடம் மாறியதென்பதும், அங்கிருந்து வார்ஸா பல்கலைக்கழகத்திற்குத் தமிழும் மலையாளமும் பயிற்றுவிக்க, ஏழு ஆண்டுகள் (1972-1979) போலந்து சென்று, போலிஷ் மொழியிலும்

தோய்ந்த அறிஞராகத் திரும்பியிருந்தார் என்பதும், போலிஷ் மொழியில் திருக்குறள், திருவெம்பாவை, திருப்பாவை, திருமுருகாற்றுப்படை ஆகியவற்றை மொழிபெயர்க்க, அம்மொழியறிஞர்களுடன் இவர் இணைந்து பணியாற்றியுள்ளதும் எனக்குத் தெரியவந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியிலிருந்தபோது, *1980* இல்-முதலில் நான் குறிப்பிட்டிருக்கிறதைப்போல-அண்ணாமலைப் பல்கலைக்கழக நிருவாகத்திற்கு எதிரான ஆசிரியர் போராட்டத்தில்-மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர் போராட்டத்தில் கலந்துகொண்டு எங்களை ஊக்குவித்துச் சென்றதன்பின்-இவர் அன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழக நிருவாகத்தால் முரண்பாடுகள் முற்றிப் பழிவாங்கப்பட்டிருந்தார் என்பது தஞ்சையில் அவருடன் பேசிக்கொண்டிருக்கையில்தான் உணர்வுபூர்வமாகத் தெரியவந்தது. பின், முனைவர் வ.அய். சுப்பிரமணியன் அவர்கள் *1981* செப்டம்பரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணியேற்றபோது-அவரின்கீழ் *1964-1966* களில், கேரளப் பல்கலைக்கழகத்தில் 'பத்துப்பாட்டு வண்ணனை இலக்கணம்' *(A Descriptive Grammer of Pattuppaattu)* எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டிருந்த இவரை-தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மூலம் அறிவியல், மருத்துவம், பொறியியல் துறைகளில் தமிழைப் பாடமொழியாகப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான மூலநூல்களைத் தமிழிலேயே கொண்டுவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக-நியமித்து, அவரைத் தனதாட்கொண்டிருந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழக அன்றைய நிருவாகம், துணைவேந்தர் முனைவர் வ.அய். சுப்பிரமணியத்தைச் சந்தித்து, 'ஆரெம்மெஸ்' பற்றி, 'அவர் தொழிற்சங்கவாதி... ஆபத்தானவர்' என்று அறிவுரை கூறியபொழுது, 'அவன் என் மாணவன்... அவனைப் பற்றி எனக்குத் தெரியும்' என்றுகூறி, எம்.ஏ.எம். ராமசாமியின் குரலைப் புறந்தள்ளித் தமிழ்ப் பல்கலையில் அவரைப் பணியிலமர்த்தி, பெரும் பொறுப்பைக் கொடுத்து அழகுபார்த்தவர் முனைவர் வ.அய்.சு.! இப்படியான ஆசிரியர்கள் இப்பொழுது அருகிப் போய்விட்டனர் என்பதையும் இங்குச் சொல்ல வேண்டும். அதிகாரத்தின் தொண்டரடிப்பொடிகளாய்க் கூனிக்குறுகிப் போயிருக்கிற இற்றைத் துணைவேந்தர்கள் மத்தியில், வ.அய்.சு.வைச் சுட்டுவது என்பது, சுயமரியாதையின் பிம்பமாய், அறிவின் துலக்கமாய் அவரிருந்தார் என்பதைக் கோடிட்டுக்காட்டுவதற்குத்தான்! அவரின் மாணவர் 'ஆரெம்மெஸ்' என்பதும், அந்த வ.அய்.சு.வின் கீழ் நானும் பணியாற்றியிருக்கிறேன் என்பதும்தான், எப்பொழுதைக்குமான என் வாழ்க்கை எனக்குரைத்த நேர்மையின் உரைகல்லாக இப்பொழுதும் கருதுகிறேன். சொல்லுவதற்கு இது இப்பொழுது எளிதானதாயிருக்கலாம்-சாதாரணச் செய்தியாய்க்கூட கடந்து போய்விடக்கூடும். ஆனால் எண்பதின் தொடக்கத்தில், அன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தராயிருந்த எம்.ஏ.எம் மிற்குக் கேளாச் செவியராய் இருப்பதென்பது அத்தனைச் சாதாரணச் செய்தி இல்லை என்பது அந்தக் காலத்து ஆட்களைக் கேட்டால் மட்டுமே புரிந்துகொள்ள முடியக்கூடியது. ஆசிரியர் சங்கங்களும், அதன் பிரதிநிதிகளும்கூட, அத்தனை வீச்சாகத் துடிப்புடன், சங்க அறத்துடன் அப்பொழுது செயல்பட்டிருந்த நேரமும்கூட அது! பிற்பாடு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தன்னை அழைத்து, பெரும் தமிழ்ப் பொறுப்பு வழங்கி, தனக்கு முகவரி வழங்கியிருந்த, தன் பேராசிரியத் துணைவேந்தரையே எதிர்த்து, அகராதித்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் து. மூர்த்தியைப் பணியிலிருந்து வெளியேற்றியதற்கான போராட்டத்தில், உறுதியாக, முனைவர் து. மூர்த்தியின் பின் நின்றவர் 'ஆரெம்மெஸ்'! முனைவர் வ.அய்.சு.வும் கேரளத்திலிருந்து வந்தவர் என்பதால் மற்றவர் உரிமைகளை மதிக்கிற தன்மையும் அவரிடமுண்டு என்பதை நெருங்கிப் பழகியவர்கள் மட்டுமே நன்கு அறியமுடியும். என்னைப் பற்றியும் வ.அய்.சு.விடம், 'நான் ஒரு கம்யூனிஸ்ட்' என்று போட்டுக் கொடுத்த பேராசிரியரிடம், அவர் சொன்னது, 'நீங்க ஒங்க வேலையெப் பாருங்க... அவனுக்குக் கொஞ்சம் திமிர் உண்டு... ஆனா கம்யூனிஸ்ட்காரன்தான் ஏமாத்தாம ஒழுங்கா வேலையெச் செய்வான்' என்பது!

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்-அலுவலர்கள் நடத்திய இரண்டு மிகப் பெரிய போராட்டங்களில்-ஒன்று *(20* ஜூலை*1990* முதல் *5* ஆகஸ்ட் *1990* வரை) நாற்பத்தி ஏழு நாட்கள் [முனைவர் சி.பாலசுப்பிரமணியன் *(1989-1992)* அப்போது துணைவேந்தர்], இன்னொன்று, எழுபத்தி ஏழு நாட்கள் [முனைவர் கதிர். மகாதேவன் *(1999-2001)* அப்பொழுது துணைவேந்தர்] நடந்தன!-இரண்டாவது போராட்டத்தில், அவர் பல்கலைக்கழகத்திலிருந்து பணிநிறைவு பெற்றிருந்த நிலையிலும் கூட, இரண்டு போராட்டங்களிலும் போராட்டக்காரர்களுக்கு வழிகாட்டியாயிருந்து, மற்றைய ஆசிரியர் சங்கப் போராளிகளை எங்களுக்கு அறிமுகப்படுத்தி, எங்களையெல்லாம் (த.ப.க. ஆசிரியர் சங்கம்-*TUTA*) வழிநடத்தியவர். ஆசிரியர் சங்கப் போராட்டக் காலத்தின் அனுபவங்களைக் கொண்டு, தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க இதழான 'செய்திக் கதி'ரில் நான் தொடராக எழுதிவந்த 'கூத்தாடிக் கொம்பன்' கட்டுரைகளைச் 'சங்க'த் தமிழ் இலக்கியம் என்று நூலாக வெளியிடுகையில், *2005-06* காலத்தில், அதற்கு, அணிந்துரை எழுதித் தந்தவர் 'ஆரெம்மெஸ்'. அதில், தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க முதற்போராட்ட வரலாற்றின் பதிவுகள் பலதும் பேசப்பட்டிருப்பதால், இங்கு அது கூடுதல் இடத்தை நிரப்பிக் கொள்கிற வேலையாக மட்டுமே நின்றுவிடக்கூடும்!

யாரிடமும் நேரிடையாக அவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கிற இயல்பு அவருக்கிருந்ததில்லை; அமைதியாகக் கடந்து சென்றுவிடுகிற இயல்பும், உரிமைக்குக் குரல் கொடுக்கின்ற குணமும், அவருக்கு நியதியாயிருந்தவை. குரலற்றவர்களின் குரலுக்கு, ஒரு இனிமையான, போராட்ட இசையைத் தந்துகொண்டேயிருந்தன அவரின் போராட்டக் காலங்களின் களப் பங்களிப்புகள். அத்தகையக் குணம் அவருக்கு இயல்பாயிருந்தது என்பதை அவருடன் ஒரு சாலை ஆசிரியராய், அவர் பணி நிறைவு பெறும் 1998 வரையும், நான் அவருடன் பணிபுரிந்த காலத்தில், அவரின் அருகிலிருந்து உணர்ந்து கொண்டவன். போராட்டக் காலத்தில் நாங்கள் திட்டமிடும் படைவீடுகளில் ஒன்றாய் அவரின் செல்லையா நகர் வீடும் அமைந்திருந்தது. சொல்லப்போனால், போராட்டக்காரர்களின் தொழுகைக் கூடமாயிருந்தது அது! அந்தப் பகுதியைச் சுற்றிலும் பல்கலைக்கழகப் பணியாளர்களே இருந்ததால், நிருவாகத்திற்குப் போட்டுக் கொடுப்பவர்களுக்கு, அவர் வீட்டைக் கண்காணிப்பதற்கு, அவர்களுக்கு அது அத்தனை எளிதாயுமிருந்தது. அவரும் அதைப்பற்றியெல்லாம் அதிகம் கவலைப்பட்டவராயும் தெரியவில்லை. அவர், நிருவாகத்தின் நேரிடைக் கண்காணிப்பிற்கும், சந்தேகத்திற்கும் பணிக்கால இறுதிவரையும் உள்ளாகியே இருந்தார். அவரின் சுபாவம் அப்படியாயிருந்தது. மூத்த பேராசிரியராயிருந்ததால், தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வந்த துணை வேந்தர்கள் எல்லோருமே, மூத்தோராகவோ-இளையோராகவோ அவருக்குத் தெரிந்தவர்களாகவே இருந்தபோதும், எப்பொழுதும் நியாயத்தின் பக்கமே நிற்பவராயிருந்தார். அதனாலேயே, மூத்த பேராசிரியராய் இருந்தபோதும், நிருவாகம் எப்பொழுதுமே அச்சத்துடன் இவரைப் பார்க்கிற பார்வையை இவர் இயல்பாகவே கொண்டிருந்தார். பேராசிரியர் முனைவர் அகத்தியலிங்கம் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த காலத்தில் (டிசம்பர்1986-நவம்பர்1989), தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் தமிழ்த் துறைத் தலைவரானார். பின் வளர்தமிழ்ப் புலத் தலைவரானார்; ஆட்சிக் குழு உறுப்பினரானார். ஒருமுறை 1996 என்று நினைக்கிறேன், தமிழ்ப் பல்கலைக் கழக துணைவேந்தர் பட்டியலில் இவருடைய பெயரும் இடம்பெற்றிருந்து, சில தனிப்பட்ட காரணத்தால், அரசுக்குப் போட்டுக் கொடுக்கப்பட்டு, இவர் நிராகரிக்கப்பட்டுமிருந்தார்.

இவருடனான பழக்கத்தின் காரணமாகவே, திராவிட முன்னேற்றக் கழக விவசாயப் பிரிவின் அன்றைய துணைத் தலைவராயிருந்த, பிற்காலத்தில் மத்திய இணை நிதியமைச்சராயிருந்த திரு. பழனி மாணிக்கம், அன்றைய தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவரும், இந்நாள் தமிழ்த் தேசப் பேரியக்கத் தலைவரான திரு. மணியரசன், பேராயக் கட்சியைச் சேர்ந்த தஞ்சை இராமமூர்த்தி, கரந்தைக் கல்லூரி முதல்வர் விருத்தாசலம், தமிழறிஞர் பொ. வேலுச்சாமி ஆகியோர் தமிழ்ப் பல்கலைக்கழக ஊழியர்கள் அனைவருக்கும் நெருக்கமாயிருந்தனர் என்று கூறினும் குற்றம் ஏதுமில்லை. இன்னார் இவர், அன்னார் அவர் என்று எந்த விலக்குதலுமின்றி, எல்லோரிடமும் சம உரிமையுடன் பழகுகிற மனங்கொண்டவர். எந்த பந்தாக்களையும் எதிர்பார்க்காத மிகவும் எளிமையானவர். வாசிப்பை இறுதிவரையும் தனக்கு அனுசரணையாகக் கொண்டவர். அவரின், தாமஸ் ஆர். டிராட்மனின் (Thomas R. Trautman) மொழிபெயர்ப்பு நூலான, 'மொழிகளும் தேசியங்களும்- காலனியாதிக்கச் சென்னையின் திராவிடச் சான்று' என்பது 'திராவிடச் சான்று' எனும் பெயரில் வெளிவந்திருப்பது தமிழ் மொழிபெயர்ப்பில் மிக முக்கியமான நூலாகும். இன்றும் இவரின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடியது. இதுபோக, சாகித்ய அகாதமி சார்பில், தமிழ் ஆளுமை வரிசையில், இவரெழுதியிருக்கிற பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பற்றிய நூலும் கலாநிதி க. கைலாசபதி பற்றிய நூலும் குறிப்பிடத்தகுந்தவை. பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தனார் மாணவர் என்பதும், முனைவர் வ.அய்.சு. மாணவர் என்பதும் இவரின் ஆராய்ச்சி அறிவைக் கட்டமைத்திருந்தன என்று கூறினாலும் அது மிகையில்லை.

இவருக்கும், மொழியியல் துறைப் பேராசிரியராயிருந்த முனைவர் அரங்கனுக்கும் இருந்த- இவருக்கு அவருமாய், அவருக்கு இவருமான-நட்புறவு எண்ணிஎண்ணி எவரையும் வியக்க வைப்பது. தமிழ்ப் பல்கலைக்கழகப் பணிக்காலத்தின்போது, இருவரையும் தனித்துக் காண்பதென்பது, அவரவர்களின் வீடுகளில் மட்டுமாகத்தான் இருக்கும். மொழியியல் பேராசிரியராய், பழகுவதற்குக் கூச்சப்படும் பேராசிரியர் அரங்கனின் கூச்ச சுபாவத்தின் கூர்முனையைக் கிள்ளியெறிந்து, சமூக உறுப்பினர்களிடம், அவரைப்போலவே சகஜமாகப் பழகும் வைத்திய மூலிகையாயிருந்தவர் 'ஆரெம் மெஸ்'! ஆரெம்மெஸ், அவரைத் தனக்கான பாதுகாப்பாய் நினைத்திருக்க வேண்டும் அல்லது பேராசிரியர் அரங்கன், அவரைத் தனக்கான பாதுகாப்பாய்க் கருதியிருக்க வேண்டும். ஏனெனில் அந்த உறவின் அசைபோடும் கால நீட்சி 1959 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்தே தொடங்குகிறது. 63 ஆண்டுக்கால அறாத் தொடர் நட்பு! எந்தப் பிரச்சனையின் முடிச்சையும் வலிக் காமல் அவிழ்க்கும் பேராசிரியர் இராம. சுந்தரத்தின் தீர்க்கம், இவருக்கும், இவரின் 'சாம்ஸ்கி'யின் மாற்றிலக்கணமுறை மேதமையின் மேலிருந்த ஈர்ப்பு, இராம. சுந்தரம் அவர்களுக்கும், எழுதப்பட்டிருக்காத ஒரு மரியாதையை ஒவ்வொருவருவருக்குள்ளும் ஏற்றியிருந்திருக்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் பக்கத்துப் பக்கத்துத் துறை அறைகள்; செல்லையா

நகரிலும் பக்கத்துப் பக்கத்து வீடுகள்! 'இரட்டையர்' என்பது, தமிழ்ப் பல்கலைக்கழகத்தவர் அவர்களுக்கு வைத்திருந்த ஒரு செல்லப் பெயர்!

ஆசிரியர் போராட்டங்களில் தன்னைக் கரைத்துக் கொண்டு, தமிழகச் சூழலில், தமிழ்ப் பல்கலைக்கழகப் போராட்ட முகவரிகளில் விலக்கிவிட முடியாத ஒருவராய் அவர் விளங்கியபோதும், இத்தனைப் போராட்டங்களுக்கும் மத்தியில், அவரின் அயரா உழைப்பின் காரணமாக, அறிவியல், மருத்துவம், பொறியியல் துறைகளில் துறையோய வல்லவர்கள் பலரைக் கண்டறிந்து, அவர்களைத் தொடர்புகொண்டு-தொடர்ந்து அணுகி-பொறியியலில் 13 நூற்களும் மருத்துவத்தில் 14 நூற்களும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன. ஆயின் ஆட்சியாளர்களின் அசிரத்தை காரணமாகவும், பின்வந்த துணைவேந்தர்களுக்கு இப் பணியின் முக்கியத்துவம் புரியாத காரணத்தாலும், பல்கலைக்கழகத்தை ஓட்டினால்போதும் என்று கருதியதினாலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதலாமாண்டு மருத்துவம், பொறியியல் வகுப்புக்கள் தமிழில் உருவாக முயற்சிக் காததாலும், துணைவேந்தர் வ.அய்.சு., ஆரெம்மெஸ் ஆகிய இருவரின் திட்டமிடல் உழைப்பால், பல்கலைக்கழகம் முன்னுரிமை கொடுத்து உருவாக்கிய பணி அப்படியே வெறும் நூல்களாக மட்டுமே நின்றுவிட்டது என்பது குறித்துவைக்கப்பட வேண்டிய ஒரு சோகம்! அந்தப் படிப்புகள் உருப் பெற்றிருந்தால் முனைவர் இராம. சுந்தரம் அவர்கள் இன்னுமொரு கூடுதல் உயரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார். தமிழுக்கான அவரின் மிக முக்கியமான பணியாக அது நிலைபெற்றிருக்கும்! இதுபோக ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான, அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த கலைச் சொற்கள் அவர் முயற்சியால் உருவாக்கப்பட்டு, தரப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் பேசுகிற காலம் வரையிலும், இந்த முயற்சிகளும் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கும்!

1987 இல் இரண்டாம் துணைவேந்தர் பேராசிரியர் அகத்தியலிங்கம், அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை என்பதாய்த் துறையை உருவாக்கி, அதன் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் முனைவர் இராம. சுந்தரம் அவர்களை நியமித்து, அத்துடன் அனைத்திந்திய தமிழ் அறிவியல் கழகம் ஒன்றைத் தொடங்கி, அதன் செயலாக்கத்தையும் முனைவர் இராம. சுந்தரத்திடம் ஒப்படைத்திருந்தார். இது பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களின் இயல்பு- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆரம்பித்ததுதான் 'அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்'; தஞ்சையில் முனைவர் து. சக்திவேலிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு, அவரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் 'அனைத்திந்தியத் தமிழ் நாட்டுப்புறவியற் கழகம்'! என்னிடமேகூட, 'அனைத்திந்தியத் தமிழ் நாடகவியற் கழகம்' ஒன்றை உருவாக்கக் கேட்டுக் கொண்டிருந்தார். சில காரணங்களால் அது நிகழாமலேயே போனது. 1989 இல் தமிழ்ப் பல்கலையில் நிகழ்ந்த அனைத்திந்தியத் தமிழ் அறிவியற் கழக மாநாட்டில், நான் நிகழ்த்திய 'ஸ்பார்டகஸ்' நாடகம் எனக்கு அந்த அனுபவத்தைத் தந்திருந்தது. அந்தக் கதை ருசிகரமானது. ஆனால் இங்குத் தேவையில்லாதது. ஆரம்பித்திருந்த 'அனைத்திந்தி யக் கழகங்களின் முகவரிகள் இப்பொழுது மாறியிருந்தபோதும், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம் மட்டுமே, அவர் பணிநிறைவு பெற்றபின்னும், அத்துறையால், 'ஆரெம்மெஸ்' உதவியுடன் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் தலைவர், இதுவரையும் அவர்தான்! இதுவரையும் 24 கருத்தரங்குகளைத் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் நடத்தி, அதில் பெறப்பட்ட கட்டுரைகளைக் கொண்டு, 'வளர்தமிழில் அறிவியல்' எனும் பெயரில் முப்பதற்கும் மேற்பட்ட நூல்களைக் கொணர்ந்திருக்கிறார். இதுவும், அலவாக்கோட்டை 'ஆரெம்மெஸ்'ஐ, அனைத்திந்திய அளவில் தமிழில் அடையாளப்படுத்துகின்ற ஒரு பெரும் பணியாகும். நிஜநாடக இயக்கத்தின் சார்பில், அவரின் அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழக மாநாடுகளில், 'ஸ்பார்டகஸ்' மற்றும் 'இருள் யுகம்' ஆகிய இரு நாடகங்களைத் தஞ்சையில் நிகழ்த்தியிருக்கிறேன். இது, நிஜநாடக இயக்கத்திற்கு 'ஆரெம்மெஸ்' என்கிற அறிவியல் தமிழறிஞர் காட்டியிருக்கிற நம்பிக்கைக்குரிய உதவியாகும்!

இந்த அறிவுத் தேடல்தான் பல்கலைக்கழகத்துப் பேராசிரிய அறிஞர்களைக் கூட்டி, ஓர் 'அறிவாயுதக் குழு' ஒன்றைக் குடியிருப்பு வளாகத்தில் உருவாக்கியதுமாகும். இதற்கும் பல்கலைக்கழகத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. திங்கள்தோறும் இரண்டு நாட்களில் அவரவர் துறை சார்ந்த புதிய நூல்களை மதிப்பீடு செய்வதும், புதிய முயற்சிகளை அடையாளங்கண்டு பேசுவதுமாகும். பல்துறை அறிவைப் பெறுகிற ஓர் சிற்றரங்கமாயிருந்தது அது! பெரும்பாலும் இது அவர் வீட்டின் வெளிப்புறத்தில் மாலையில் நடக்கக்கூடியதாயிருக்கும். இதில் பேராசிரியர்கள், முனைவர் கி. அரங்கன், முனைவர் சுப்பாராயலு, முனைவர் சு. இராசாராம், திரு இராமானுஜம், முனைவர் மாதையன், நான் ஆகியோர் இருந்தது நினைவிலிருக்கிறது. இன்னும் சிலரும் இருந்திருக்கக்கூடும். இதுவும் அவரின் முன்னெடுப்பில் நிகழ்ந்த மிக முக்கியமான பணியாகும். இதற்கான வாய்ப்புகள் இப்பொழுதுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடம் இருக்கின்றனவா என்பதே தெரியவில்லை. இருக்கட்டும்! மதுரையில் அவர் இல்லத்திற்கு எப்போது சென்றாலும், அவரின் விருந்தோம்பலில் நம்மை மகிழ்ச்சிப்படுத்துபவை, செட்டிநாட்டு முறுக்கும் தட்டையும்! இப்பொழுதும் முறுக்கு, தட்டைகள் வாங்கிச் சாப்பிடும்பொழுது, அவருடன் கலந்துபேசிக் கொண்டிருக்கிற நினைவுகள் வந்துவந்து போகின்றன. வாழ்க அவரின் புகழ்!

●



# மார்க்சிய சிந்தனை மிக்க பேராசிரியர்

முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்

**நினைவலைகள்**

பள்ளிக்கூடம், கல்லூரி, பல்கலைக்கழகம் எனக் கல்வி சார்ந்த நிறுவனங்களில் படிக்கும்போதும் பணிபுரியும் போதும் பலரிடம் பழகும் வாய்ப்புகள் கிடைக்கும். விடுதியில் ஒரே அறையில் சில ஆண்டுகள் ஒன்றாகத் தங்கி இருந்தவர்கள்கூட நினைவுக்கு வருவதில்லை. அதிகமாகத் தொடர்பு இல்லாவிட்டாலும் பழகிய முறையால் தொடர்பு விடுபட்டுப் போனாலும் அடிக்கடி மின்னல் பூச்சியைப் போலச் சிலர் மனதிற்குள் பளிச்சிட்டு மறைவர். அப்படிப்பட்டவர்களுள் ஒருவரே பேராசிரியர் முனைவர் இராம. சுந்தரம் அவர்கள்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (1982) தற்காலிகப் பணி ஒன்று கிடைத்தது. நான் இருந்த ஊராய்வுத் திட்டத் துறையும் பேராசிரியர் இராம. சுந்தரம் இயக்குநராக இருந்த தமிழ் வளர்ச்சித் துறையும் ஒரே அறையில் இயங்கின. ஐயம் வந்து கேட்டால் தெளிவாக விளக்குவார். எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் விளக்கமாகச் சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர். அவரின் ஆளுமை பற்றிப் பேராசிரியர் பொன். கோதண்டராமன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“உலகளாவிய அரசியல் பற்றியும் அரசியல் கோட்பாடுகள் பற்றியும் இலக்கியம், இலக்கணம், வரலாறு மொழியியல் ஆகியவற்றில் காணும் சிக்கல்கள் பற்றியும் யார் எப்போது கலந்துரையாட விரும்பினாலும் அவர்களுக்கு வாய்ப்பளித்து, இசையாகவும் இனிமையாகவும் அவர்களோடு கலந்துரையாடி அவர்களுக்கு உதவுகின்ற உயர் பண்பும் பல்துறை அறிவுத்திறமும் ஒருங்கு அமையப் பெற்ற முனைவர் இராம. சுந்தரம் அவர்கள் தமிழகத்திற்குப் பல்வேறு நிலைகளில் இன்னும் தொடர்ந்து பயன்பட வேண்டியவர்.” *(தமிழியல் ஆய்வுகள், ப. 21)*

சுண்டெலி போகும் தடத்தில் சுண்டெலிதான் போக வேண்டும்; பெருச்சாளி போகும் தடத்தில் பெருச்சாளிதான் போக வேண்டும் என்னும் நடைமுறைக்கு எதிரானவர். எல்லோரிடமும் இயல்பாகப் பழகுவார். அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் இளைஞர்களுக்குப் பேராசிரியரை மிகவும் பிடிக்கும். அவர்கள் தோள்மேல் கையைப் போட்டுக் கொண்டு இயல்பாகப் பேசுவார்.

அரண்மனை வளாகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இயங்கியபோது தேநீர் அருந்த இருதுறைகளிலும் இருந்தவர்களை அழைத்துக் கொண்டு போவார். வடை, போண்டா என அவரவர் விரும்பியதை எடுத்துக் கொள்ளலாம். அவர் எடுத்துக் கொள்ள மாட்டார். தேநீர் அருந்திய பேராசிரியர் வேறு ஒரு பொருளை நிறைய வாங்கிக் கொள்வார்.

அலுவலகத்திற்கு வந்த பிறகு ஆளுக்கு இரண்டு கொடுப்பார். காலங்காலமாகத் தின்னக்கூடிய பொருள்தான். பேராசிரியர் இராம. சுந்தரம் ஒரு விளக்கம் கொடுத்தார். அவர் கூறிய விளக்கத்திற்குப் பிறகு பல ஆண்டுகள் சிறுபிள்ளைகளைப் போல அதை வாங்கித் தின்பது ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது.

பள்ளியில் படிக்கும் காலத்தில் வீட்டுக்கு வந்ததும் எதையாவது வாயில் போட்டு மெல்ல வேண்டும். வாய் ஊறும்; எட்டுக் கிலோ மீட்டர் நடந்து போய்விட்டுத் திரும்பி வந்தால் எப்படி இருக்கும்? அவசரத் தேவைக்குப் புழுங்கல் அரிசிதான் கிடைக்கும். புழுங்கல் அரிசியை அதிகம் தின்றால் முகம் வெளுத்து வீங்கியது போலத் தெரியும். இரத்தம் செத்து சோகை வந்து விடும் என்பார்கள். புழுங்கலரிசி தின்ன புட்டங்குளி என்று கிண்டல் செய்வார்கள். மாடு மேய்ப்பவர்களில் குறிப்பாக - பெண் பிள்ளைகளுக்குப் புழுங்கல் அரிசிதான் முக்கியமான தின்பண்டம். அவரவர் வாழும் சூழலுக்கு ஏற்ப வாய் ஊறும்போது கேழ்வரகு, சோளம், புளியங்கொட்டை, புளியங்காய், சுட்ட திருக்கைத் தோல் என மெல்வது வேறுவேறாக இருக்கும்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் வறுத்த கடலையை உடைத்துத் தின்பதுதான் மாலையில் முக்கியமான வேலை. மாலைச் சிற்றுண்டியும் அதுதான். கடலையை நிறையத் தின்றால் ஒத்துக் கொள்ளாது. எவ்வளவு கடலை தின்றாலும் ஒரு அச்சு வெல்லத்தைக் கடித்துக் கொண்டு தின்றால் வயிற்றுக்கு எந்த விதமான கெடுதலும் வராது.

படிபடியாக வறுத்த கடலையையும் வெல்லத்தையும் தின்ற போதெல்லாம் அவற்றின் சுவை தெரியவில்லை. ஆனால் பேராசிரியர் இராம. சுந்தரம் அவர்கள் விளக்கம் அளித்துக் கொடுத்த கடலை மிட்டாயின் அருமை பல ஆண்டுகள் விலகவே இல்லை.

அண்மையில் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டபோது மிகவும் வருத்தமாக இருந்தது. ‘கல்வியிற் சிறந்த தமிழ்நாடு’ என்று எப்போதோ மகாகவி பாடியது இப்போது மிகவும் பொருத்தமாக உள்ளது. இந்தியாவில் கேரள மாநிலத்தில் படித்தவர்கள் அதிகம் என்பார்கள். தமிழ்நாடும் தற்போது கல்வியில் ஆகச் சிறந்த மாநிலமாகத் திகழ்கின்றது. ஆனால் வேலை வாய்ப்பு?

தற்போது கலை, அறிவியல் என எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் முனைவர் (Ph.D.) பட்டம் என்பதே உயர்ந்த ஆராய்ச்சிப் பட்டம். முனைவர் பட்டம் பெற்ற ஆயிரக்கணக்கானோர் வேலை இல்லாமல் திரிகின்றார்கள் அல்லது நிரந்தரமில்லாத பணியில் சொற்பக் கூலிக்குப் பணி செய்கின்றார்கள்.

கொரோனாத் தொற்று பலவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. முனைவர் பட்டம் பெற்றவர்கள் தேநீர் விற்பது, காய்கறி விற்பது எனப் பல தொழில்களைச் செய்தார்கள் என்பதை ஊடகங்கள் வழி அறிய முடிந்தது. விமானம் ஓட்டிய விமானிகள் பலர் அறுவடை எந்திரங்களை ஓட்டத் தயாராக இருந்தாலும் வேலை கிடைக்கவில்லையாம்.

முனைவர் பட்டம் பெற்ற ஒருவர் சில கல்லூரிகளில் பல ஆண்டுகள் தற்காலிகமாக பணியாற்றி உள்ளார். வயதும் ஐம்பத்தெட்டு முடிந்துவிட்டது. நிரந்தரப் பணியாக இருந்தால் மே மாதம் இறுதி வரை பணிபுரியலாம். சூன் இரண்டுக்குப் பிறகு பிறந்த தேதி என்றால் இன்னும் ஓராண்டு பணி நீட்டிப்புக் கிடைக்கும். நிரந்தரப் பணியில் சேர்ந்து விட்டால் பல சலுகைகள் தாமாக வந்து சேரும்.

அந்தப் பேராசிரியரை இனி, பணிக்கு வர வேண்டாம் என்று அலுவலகத்தில் கூறிவிட்டார்கள். மே இறுதி வரை பணியாற்றலாம் என்று நினைத்திருந்தவரை உடனே அனுப்பிவிட்டார்கள். அந்த மாதம் முழுமையாகக் கூடப் பணி செய்ய விடவில்லை. தற்காலிகப் பணியும் நிரந்தரமாகப் போய்விட்டதை எண்ணி வருந்தியபடியே

வெளியேறுவதை மனக்கண்ணில் நினைத்துப் பார்த்தால் வலி இதயத்திற்குள் பாயும்.

இன்றைய சூழல் இப்படி; கல்லூரி அது அரசு அல்லது தனியார் எதுவாக இருந்தாலும் பணியை வாங்கத்தான் முடியுமே தவிர, பெற முடியாது.

1980களிலும் வேலை வாய்ப்பின் நிலை இப்படித்தான் என்றாலும் சற்று மேம்பட்ட நிலை இருந்தது. பல்கலைக்கழகத்தில் நிரந்தரமில்லாத பணி; விரைவில் நிரந்தரப் பணி கிடைப்பதாகத் தெரியவில்லை. இலவு காத்த கிளியாக முனைவர் பட்டம் பெற்றவர்களின் நிலை இருந்தது.

1985இல் நூற்றாண்டுப் பழமை வாய்ந்த திருவையாற்று அரசர் கல்லூரியில் நிரந்தரப் பணி கிடைத்தது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முறைப்படி விடுவிப்புப் பெற்று அங்குப் போய்ச் சேர பேராசிரியர் இராம. சுந்தரம் அவர்களிடம் கடிதம் கொடுக்கப்பட்டது. அவர் துணைவேந்தருக்கு அனுப்பினார். அதில் ஒரு குறிப்பு எழுதப்பட்டிருந்தது.

உடனே விடுவிப்பது என்றால் மூன்று மாதம் வாங்கிய தொகுப்பூதியத்தைக் கட்ட வேண்டும். ஆண்டு முடிந்தது என்றால் கட்ட வேண்டியதில்லை. அலுவலக நடைமுறை ஏதோ உள்ளது.

பேராசிரியர் அழைத்தார். சென்றவுடன் விழுந்து விழுந்து சிரிக்கிறார். ஒன்றும் புரியவில்லை. குறிப்பைப் படித்துக் காட்டினார். குறிப்பு இவ்வாறு இருந்தது. இரண்டே தொடர். எப்போது வந்தார்? எப்போது போவார்?

பேராசிரியர் ச. மெய்யப்பனின் "நண்பர் இராம. சுந்தரம் நல்லவர்; வல்லவர்; இனியவர். பெயருக்கு ஏற்ப அழகிய தோற்றத்தினர். செந்நிறத்தர்; செம்மனத்தர்" என்ற குறிப்பு மிகை இல்லை. பேராசிரியர் இராம. சுந்தரம் அவர்களைப் பார்க்கும்போதும் அவர் பேசுவதை அவர் தோற்றம் மறைத்து விடும். பேசும்போது பற்கள் பளிச்சிட்டு ஏதோ சிந்துவது போல இருக்கும். அவர் சாயலுக்குக் குரல் மென்மைத்தன்மையுடன் இருக்கும் என்றே முதலில் பார்ப்பவர் நினைப்பார். நாதஸ்வர இசை போல் இல்லாமல் மேளத்தில் எழும் இசை போல இருக்கும்.

அந்தக் குறிப்பை பலமுறைப் படித்து வெண்கலக் கடையில் யானை புகுந்தது போலக் கலகலவென்று சிரிக்கின்றார். அப்படிச் சிரித்தவர்களை இதுவரை கண்டதில்லை.

'1949இல் வந்தார்; போவது தெரியாது' இப்படிச் சொன்னவுடன் அதற்கும் விழுந்து விழுந்து சிரிக்கிறார். பணியிலிருந்து விடுபடும்போது மனம் நிறைய வாழ்த்தினார். நிறையப் படிக்கும்படியும் எழுதும் படியும் அறிவுரை கூறினார். நான் படித்த தமிழ் - மொழியியல் படிப்புகளுக்கும் பார்த்த வேலைக்கும் தொடர்பு இல்லாதது பேராசிரியருக்கு நன்கு தெரியும்.

அவர் செய்த பணியும் எனக்கு முதலில் அப்படித்தான் பட்டது. இருந்தாலும் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்காக அவர் செய்துள்ள பணிகள் மகத்தானவை. அவருடைய வாழ்க்கைக்குறிப்பு மலைக்க வைக்கிறது. ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இயங்கி உள்ளார்.

**ஆய்வின் உச்சம்**

மதுரை தியாகராசர் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம், தெக்காணக்கல்லூரி (புனே), வார்சா பல்கலைக்கழகம் (போலந்து), தமிழ்ப் பல்கலைக்கழகம் எனப் படித்த - ஆய்வு செய்த - பணிபுரிந்த கல்வி நிறுவனங்களின் பட்டியல் நீளும்.

இந்தியாவில் நான்கு மொழிக்குடும்பங்கள் இருப்பதாக மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுவர். அவற்றுள் திராவிட மொழிக் குடும்பமும் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பமும் முக்கியமானவை.

இவ்விரண்டு மொழிக் குடும்பங்களைப் பற்றி நிறைய முரண்பட்ட கருத்துகள் பேசப்படுகின்றன. கோட்பாடுகள் வகுத்த மொழியியல் அறிஞர்களே குழம்பும் அளவிற்கு அரசியல் ஆக்கப்படுகின்றன. அவை ஒருபக்கம் இருக்கட்டும்.

தமிழ் மொழியின் அமைப்பை மொழியியல் கண்ணோட்டத்தோடு விளக்கும் முறை கேரளப் பல்கலைக்கழகத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டது. தொன்மையான மொழியாகிய தமிழிலுள்ள பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்றவற்றின் மொழி அமைப்புகள் விளக்க மொழியியல் (Descriptive Linguistics) அடிப்படையில் எழுதப்பட்டன.

எட்டுத்தொகை நூல்களாகிய நற்றிணை (A. Kamatchi nathar, 1964), குறுந்தொகை (S.R. Krishnambal, 1974) ஐங்குறுநூறு (M.Elaya Perumal, 1975) பதிற்றுப்பத்து (S. Agesthialingom, 1961) பரிபாடல் (S.N. Kandaswamy, 1962) கலித்தொகை (Andiappa Pillai, 1970) அகநானூறு (S.V. Subramaniyan, 1965) புறநானூறு (V.I. Subra-monyam 1962) என்பவற்றுக்குப் பல அறிஞர்கள் சொல்லடைவு தயாரித்து இலக்கணம் எழுதினார்கள். பேராசிரியர் இராம. சுந்தரம் தம்முடைய முனைவர் பட்டத்திற்காகப் பத்துப்பாட்டு முழுவதற்கும் சொல்லடைவு தயாரித்து, இலக்கணம் எழுதி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும் (1967, Grammatical Study of Pattuppattu--- Index and Translation, University of Kerala, Trivandram). இந்த ஆய்வுகளில் பரிபாடல் தவிர மற்றவை அனைத்து ஆய்வுகளும் திருவனந்தபுரத்தில் உள்ள கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் செய்யப்பட்டவை.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த குறிப்பாகத் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றவற்றைத் தாய்மொழியாகக் கொண்டோர் சிலர் இவை ஒரு குடும்ப மொழிகள் என்னும் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை. இருப்பினும் இம்மொழிச் சொற்களில் ஆயிரக்கணக்கானவை வேர்ச்சொல் (Roots) ஒற்றுமை உடையவை.

ஆலய வழிபாட்டில் ஒற்றுமையாக இருக்கின்றார்கள். அங்கிருந்து இங்கு வருகின்றார்கள்; இங்கிருந்து அங்குப் போகின்றார்கள். போகும் வழி நல்லதாக அமைய ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். கேரளம், கர்நாடகம், ஆந்திரத்தில் வாழ்வோர் தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுக்கமாட்டோம் என்று அணை போடுகின்றார்கள்.

வரலாற்று நிலையிலும் இன அடிப்படையிலும் ஒன்றுபட்டு வாழ வேண்டியவர் முரண்பட்டு மோதிக் கொள்கின்றார்கள். 'ஊரு இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்னும் பழமொழி பழைய வரலாறு தெரிந்தவர்களுக்கு நினைவில் வரும்.

அறிவியல் தமிழில் ஈடுபாடு கொள்வதற்கு முன்பு மொழியியல் அடிப்படையில் பல இலக்கணக் கட்டுரைகளைப் பேராசிரியர் இராம. சுந்தரம் எழுதி உள்ளார்.

"கிளவியாக்கம் பற்றித் தொல்காப்பியர்" தொல்காப்பிய மொழியியல் *(பக். 143 - 154)* என்னும் கட்டுரை மொழியியல் கண்ணோட்டத்தில் சொல்லதிகாரத்தின் முதல் இயலாகிய கிளவியாக்கம் பற்றி விரிவாக ஆராய்கின்றது.

"எதிர்மறை வினையெச்சம்" *(செந்தமிழ்- 60)*, The Treatment of Vocatives is Tamil Grammar *(ஆய்வுக்கோவை - 4)* எனப் பல இலக்கணக் கட்டுரைகளை மொழியியல் சார்ந்தே எழுதியுள்ளார். அறிவியல் தமிழ் சார்ந்து பல நூல்களையும் கட்டுரைகளையும் பேராசிரியர் இராம. சுந்தரம் எழுதியுள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வந்தபிறகு அவரின் அறிவியல் தமிழ் பற்றிய பார்வை விரிவடைகின்றது. அறிவியல் தமிழ் பற்றிய ஆய்வுக்கு வராமல் தொடர்ந்து இலக்கண - மொழியியல் ஆய்வில் பேராசிரியர் ஈடுபட்டிருந்தால் இவ்வளவு நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்திருப்பதற்கு வாய்ப்பில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. அவருக்கு முந்தைய தலைமுறையைச் சார்ந்தவர்கள் அல்லது ஒருசாலை ஆய்வாளர்களில் குறிப்பிட்ட சிலரைத் தவிர, பெரிய அளவில் தங்கள் பங்களிப்பை வழங்கியதாகப் பதிவாகவில்லை.

பேராசிரியர் இராம. சுந்தரம் அவர்களின் அறிவியல் தமிழுக்கான பங்களிப்பும் மிகவும் பரந்துபட்டதாக உள்ளது.

"பொறியியல், மருத்துவப் பாட நூல்களும் கலைச்சொல் அகராதிகளும் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகளுமாக 60 நூல்கள் வெளிவர ஊக்குவித்துள்ளார்" *(தமிழியல் ஆய்வுகள், ப. 6)*.

1930களிலேயே மருத்துவப் படிப்பைத் தமிழில் பயிற்றுவிக்க இலங்கையில் முயற்சி நடந்ததாகத் தெரிகின்றது. மருத்துவம், பொறியியல், மற்றைய அறிவியல் துறைகள் என எவையாக இருந்தாலும் அவரவர் தாய்மொழியில் படிக்க வேண்டும். அவற்றுக்கான வழிகளைச் செய்து தரவேண்டும். நம்முடைய இந்திய அறிவியல் வளர்ச்சி கடன் வாங்கியே காலத்தை ஓட்டுவதாகத் தெரிகின்றது. அதி நவீன போர் விமானம் பிறநாட்டில் இருந்தே வாங்க வேண்டி உள்ளது. இந்தக் கொரோனாத் தொற்று மருந்து தயாரிப்புத் தொழில் நுட்பங்கூடப் பிற நாட்டு இறக்குமதியாகவே இருக்கின்றது. நம் நாட்டிலேயே கண்டுபிடித்து உற்பத்தி செய்யப்பட்டால் நமக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும்? இவ்வாறு ஒரு தொய்வு ஏற்படுவதற்குத் தாய்மொழியில் அறிவியலைப் படிக்க வாய்ப்பு இல்லாமையே முக்கியமான காரணமாகும்.

பேராசிரியர் இராம. சுந்தரம் அறிவியல் தமிழுக்காக 80,000 கலைச்சொற்கள் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்துள்ளார் என்பதை அறிந்தபோது வியப்பாக இருந்தது.

பேராசிரியர் இராம. சுந்தரம் பன்மொழிப் புலமை உடையவராக இருந்தாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழங்கால் பட்டவர். போலந்து நாட்டுப் 'போலிஷ்' மொழியியல் திருக்குறள், திருவெம்பாவை, திருப்பாவை, திருமுருகாற்றுப்படை, சில பாரதிபாடல்கள், ஜெயகாந்தனின் ஒன்றிரண்டு கதைகள்' வெளிவர துணை புரிந்துள்ளார் என்பதையும் அவரின் வாழ்க்கைக் குறிப்பில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பல ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்தி உள்ளார். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார்.

பேராசிரியர் இராம. சுந்தரம் மொழிபெயர்த்த நூல்களுள் குறிப்பிடத்தக்கது தாமஸ் டிரவுட்மன் எழுதிய திராவிட மொழி பற்றிய ஆய்வு நூலாகும் (Thomas R. Trautmann 2006, Language and Nations: The Dravidian Proof in Colonial Madras Yode Press, New Delhi)

இந்நூலினைத் "திராவிடச் சான்று. எல்லிஸும் திராவிட மொழிகளும்" எனப் பெயரிட்டுப் பேராசிரியர் இராம. சுந்தரம் மொழி பெயர்த்துள்ளார். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனமும் காலச்சுவடு பதிப்பகமும் இணைந்து வெளியிட்டுள்ளன *(2007)*.

தொல்காப்பிய உரையாசிரியர் காலத்தில் இருந்தே வடமொழி தேவபாடை - உயர்ந்தது என்னும் கருத்து மேலோங்கி இருந்தது. இடைக்காலத்தில்

சமஸ்கிருதமே தமிழுக்குத் தாய்மொழி என்றும் கூறத் தொடங்கி விட்டார்கள். மேலை நாட்டில் இருந்து இந்தியா வந்த ஐரோப்பியர்களுக்கும் பார்ப்பனரே குருமார்களாக இருந்ததால் அவர்களில் பலரும் திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி வடமொழியே என்னும் கருத்தை நம்பினார்கள் (Cole Brooke, Carey, Wilkins, G.U. Pope, *திராவிடமொழிகள் - 1, ப. 63*).

முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும் என்னும் சொலவச் சொல்லிற்கு ஏற்ப, அக்கருத்தை மறுப்பதற்கும் மேலை நாட்டு அறிஞர்களே முக்கியமாக இருந்தார்கள். Sir William Jones (1788) என்பவர் முதன் முதலாக சமஸ்கிருதம் போன்ற இந்தோ- ஆரிய மொழிகள் கிரேக்கம், இலத்தின் போன்ற இந்தோ - ஐரோப்பிய மொழிகளுடன் குடும்ப உறவு கொண்டுள்ளன என்னும் கோட்பாட்டிற்கு வித்திட்டார்.

திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படும் இராபர்ட் கால்டுவெல் வடமொழிகள் இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை; தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றவை திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்பதற்கு நிறைய சான்றுகள் தந்து நிறுவி உள்ளார் (1856. A Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages).

இராபர்ட் கால்டுவெல் விளக்குவதற்கு முன்பே A.D Campbell என்பவர் எழுதிய *1816*, A Grammar of the Teloogoo Language என்னும் தெலுங்கு இலக்கண நூலுக்கு எழுதிய முன்னுரையில் Francis whyte Ellis (1816) சமஸ்கிருதமும் தமிழும் வேறுவேறு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (*திருக். 972*) எனக் குறிப்பிடும் உலகப் பொதுமறையின்பால் அளவில்லா ஈடுபாடு கொண்ட எல்லீஸ் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். திராவிடவியலில் ஈடுபாடு கொண்ட தாமஸ் டிரவுட்மன் திராவிட இனம் தொடர்பான புதிய கருத்துகள் பலவற்றை முன்மொழிந்துள்ளார்.

தாமஸ் டிரவுட்மன் எழுதியுள்ள Languages and Nations: The Dravidian Proof in Colonial Madras என்னும் ஆங்கில நூலைப் படித்து விளங்கிக் கொள்ளவே சிரமமாக இருக்கும். இதனை மொழிபெயர்ப்பது பேராசிரியர் இராம. சுந்தரம் போன்ற ஆன்றவிந்து அடங்கிய அறிஞர்களால் மட்டுமே முடியும் என்பதை ஆ.இரா. வேங்கடாசலபதி பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

“இந்நூல் எளிதில் மொழி பெயர்க்கக் கூடியது அல்ல. முக்கியமாக முதல் இரண்டு இயல்கள் மொழியியல், மானிடவியல், வரலாறு முதலான துறைகளில் புரிதலும் பயிற்சியும் வேண்டும் பணி இது. மொழியியலில் ஆழங்கால் பட்டவரும் திராவிட மொழிக் குடும்பம் என்ற கருத்தாக்கத்தின் புலமை நியாயத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருபவருமான பேராசிரியர் இராம. சுந்தரம் இந்நூலை மொழிபெயர்த்துள்ளது மிகப் பொருத்தமானது” (*திராவிடச்சான்று... ப. 21*).

திராவிட மொழிக் குடும்பம் தனித்தன்மை வாய்ந்தது என்னும் கருத்தை இராபர்ட் கால்டுவெல் (*1856*) விளக்குவதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ் (*1816*) விளக்கியுள்ளார். எல்லிஸ் பற்றிய தாமஸ் டிரவுட்மனின் ஆங்கில நூலைத்தமிழுக்கு அளித்த பேராசிரியர் இராம. சுந்தரம் போற்றத்தக்கவர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தற்காலிகப் பணியில் இருக்கும்போது (*1982 - 1985*) பேராசிரியர் என்னிடம் எஸ்.வையாபுரிப்பிள்ளையின் தொகுப்பாகிய சங்க இலக்கியம் இத்தொகுதிகளையும் ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொள்ளப் பெற்றுக் கொண்டார். கழகப் பதிப்பு நூல்கள் இருந்ததால் நானும் கேட்கவில்லை.

சில ஆண்டுகள் கழிந்த பிறகு தற்செயலாகப் பார்த்தபோது நினைவுபடுத்தி எப்படிக் கொடுத்து அனுப்புவது என்று கேட்டார். ‘தங்களிடம் இருக்கட்டும்; சங்க இலக்கியம் பெருமையுடன் இருக்கும்’ என்றேன்.

புத்தகம் கைமாறும்போது இரண்டு நிலை ஏற்படும். படிக்க எடுத்துக் கொண்டு போனவர் அவரும் படிக்கமாட்டார்; நம்மிடமும் கொடுக்கமாட்டார். காந்தி கணக்கில்தான் எழுதவேண்டும். இப்படிக் கை மாறிய புத்தகம் அடிக்கடி தேவைப்படக் கூடிய ஒன்றாகும்.

அவரிடமே இருக்கட்டும் என்று சொல்லிய பிறகும் எப்போதாவது பார்க்கும்போது நினைவு கூர்வார் இன்னொன்றையும் நினைவு கூர்வார். எப்போது வந்தார்? எப்போது போவார்?

பேராசிரியர் இராம. சுந்தரம் இராமநாதபுரம் மாவட்டம் அலவாக்கோட்டையில் *1.4.1938*இல் பிறந்தவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பலரைப் போல இராஜா வீட்டுக் கன்றுக் குட்டியாக வாழ்ந்திருக்கலாம். ஒரு காலத்தில் அறிஞர் பெருமக்களைத் தேடிப் பிடித்து அவர்களுக்குப் பணியைக் கொடுத்துப் பெருமை சேர்த்துக் கொண்ட பல்கலைக்கழகம். முதுகலையில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்குத் தானாகப் பதவி தேடிவரும்.

மார்க்சியச் சிந்தனை மிக்க பேராசிரியர் இராம. சுந்தரம் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருந்ததால் பணி நீக்கம் செய்யப்பட்டார். அதன் பிறகு தான் (*1981*) தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியில் சேர்ந்தார். மொழியியல் துறை மாறினாலும் பேராசிரியர் பொன். கோதண்டராமன்

“பேராசிரியர் இராம. சுந்தரம் அறிவியல் தமிழ்த் துறைக்குத் தலைவராகவும் பேராசிரியராகவும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியது, தமிழ் வரலாற்றில் மறவாமல் குறிப்பிடப்பட வேண்டிய சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்ச்சி. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மருத்துவம் முதலான எல்லாத் துறைகளிலும் தகுந்த வல்லுநர் வாயிலாகத் தமிழில் துணை நூல்கள் உருவாக்கி நமது தமிழுக்கு வளம் சேர்த்த பெருமை இந்தப் பெருமகனாரையே சேரும்” *(தமிழியல் ஆய்வுகள், ப. 18)* எனக் குறிப்பது உள்ளத்தில் உள்ளது.

பேராசிரியர் நட்பு வட்டம் சூழ நிற்பது போல நகைச்சுவையும் அவரைச் சுற்றிக் கொண்டிருக்கும். விழாவிற்கு வந்திருந்த ஒரு பேராசிரியரிடம் குடும்பத்தைப் பற்றி விசாரிக்க, அவர் வந்திருப்பதாகக் கூற இவர் போய்ப் பார்க்க, பார்த்த இவருக்கும் சிரிப்புத் தாங்க முடியவில்லை. அந்த நிகழ்ச்சியைப் பேராசிரியர் கூறும்போது சுற்றி நின்றவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். பேராசிரியர் விசாரித்தது அவரின் துணைவியாரை; ஆனால் பார்த்தது இன்னொருவரை.

இப்படிப் பேராசிரியர் இராம. சுந்தரம் அவர்களைப் பற்றி நிறைய எழுதிக் கொண்டே போகலாம். தொடர்ந்து தமிழ் இலக்கணம் - மொழியியலில் ஆய்வு மேற்கொண்டிருந்தால் தமிழ் மொழியியலின் தந்தை தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர்கள் ச. அகத்தியலிங்கம், முத்துச் சண்முகன், செ.வை. சண்முகம், பொன். கோதண்டராமன், இரா.கோதண்டராமன், மோ.இசரயேல், கி.அரங்கன், சு.இராசாராம் போன்ற தமிழ் மொழியியல் அறிஞர்கள் வரிசையில் இடம் பெற்றிருப்பார்.


துறை மாறினாலும் அறிவியல் தமிழ்த்துறை அவரின் ஆய்வோடு தொடர்புடையது. அத்துறையில் முதன்மையர் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் எப்போதும் முழங்கிக் கொண்டிருக்கும்.

பேராசிரியர் இராம சுந்தரம் *(84, 8. 3. 2021)* அவர்களின் இறப்பும் தோழர் தா. பாண்டியன் *(89, 26. 2. 2021)* இறப்பும் தமிழுக்கும் அரசியலுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இருவரும் நிறைவாக வாழ்ந்ததோடு தாங்கள் சார்ந்திருந்த துறைகளுக்கு நல்ல பங்களிப்புகளைச் செய்துள்ளார்கள் என்பதை அவர்களின் எச்சங்களாகிய - எழுத்துகள் இனங்காட்டிக் கொண்டிருக்கும்.

இருவர் வாழ்வும் முறையே இளம் ஆய்வாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கும்.

●

## அஞ்சலி



மார்க்சியப் பெரியாரியப்
பொதுவுடைமைக் கட்சித் தலைவரும்
பெரியாரியப் பேரறிஞரும்
சமூகநீதிப் போராளியுமான தோழர்
வே.ஆனைமுத்து அவர்களின் மறைவுக்கு
‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’
அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

தந்தை பெரியாரின் அடியொற்றி
அவரது சுயமரியாதைப் பாதையில்
தனது இயக்கத்தைக் கட்டமைத்து
ஆண்டுதோறும் இளைஞர்களுக்கு
சுயமரியாதைப் பயிற்சி வகுப்பு
நடத்தி பெரியாரிய நெறியோடு
மார்க்சிய, அம்பேத்கரிய
நெறிகளையும் போதித்து வந்த
அவரது பெருந்தொண்டு
என்றென்றும் போற்றுதலுக்குரியது.



# பேரா.இராம.சுந்தரம் அவர்களின் நினைவேந்தல்

**கி.அரங்கன்**

> பல்வேறு சோதனைகளுக்கும், கோட்பாடுகளுக்கும், பயன்படுத்தலுக்கும் ஆளான முதலாளித்துவ அறிவியலுக்கு, சோதனைக்கு ஆளாகாத அனுபவத்தாலும் கூர்ந்து நோக்காலும் மட்டுமே பதிவு செய்யப்பட்ட நிலவுடைமை அறிவியல் ஈடுகொடுக்க முடியாது.
> (சுந்தரம், 2004: i)

இந்த மேற்கோள் அறிவியல் குறித்த பேரா. இராம.சுந்தரம் அவர்களின் பார்வையைக் குறிக்கிறது. அவருக்கென்று ஒரு தனித்த பார்வை இருந்தது. அதை அவர் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக்கொடுக்கவில்லை.

**வாழ்க்கைப் பின்னணி**

பேரா இராம.சுந்தரம் அவர்கள் 1938-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி அலவாக்கோட்டையில் பிறந்தார். பெற்றோர்கள் இராமநாதன் - அன்னபூரணி. 1954 இல் நாட்டரசன்கோட்டை ச.இராம உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ.(ஹானர்ஸ்) பட்டத்தை 1959 இல் முடித்தார். பின்னர் அவர் மதுரை தியாகராயர் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றினார். கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பேரா.வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் (1964-1966) மேற்பார்வையில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டார். அப்போது பேரா வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் பேரா. இராம. சுந்தரத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்திற்கு அனுப்பிவைத்தார். அவர் தன் மேற்பார்வையின்கீழ் ஆய்வை மேற்கொள்ளும்

முனைவர் பட்ட மாணவர்களைப் பல்வேறு பல்கலைக்கழக மொழியியல் துறைகளுக்குக் குறுகிய காலம் அங்குத் தங்கி ஆய்வை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இது அவர்களைப் புதிய சூழலில் புதிய பேராசிரியர்களையும் துறைசார்ந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் சந்தித்துத் தங்கள் ஆய்வை விசாலப்படுத்திக்கொள்ள மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அப்படிதான் பேரா. இராம.சுந்தரம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்திற்கு வந்தார். அப்போது நாங்கள் (பேரா.பொற்கோ, பேரா.வ.ஞானசுந்தரம், நான் ஆகியோர்) முதலாம் ஆண்டு மொழியியல் முதுகலை மாணவர்களாகவும் பேரா.கி.கருணாகரன், பேரா.க.பாலசுப்பிரமணியம் ஆகியோர் மொழியியல் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்களாகவும் இருந்தோம். இதுதான் பேரா. இராம.சுந்தரம் அவர்களுடனான எங்கள் அறிமுகம். அது நட்பின் தொடக்கம். பேரா. இராம.சுந்தரம் அவர்கள் *"A Descriptive Grammar of Pattuppaattu"* (பத்துப்பாட்டு வண்ணனை இலக்கணம்) என்ற பொருளில் ஆய்வை மேற்கொண்டிருந்தார். அமைப்பு மொழியியல் கோட்பாட்டு வரையறைக்குள் இவ்விலக்கியத்தின் ஒலியனியல் அமைப்பையும் உருபனியல் அமைப்பையும் விவரித்த பிறகு தொடரியலை விவரிக்க ஹெம்ஸ்லேவ் *(Hjemslev)* என்ற அறிஞரின் க்ளோஸெமேட்டிக்ஸ் *(Glossematics)* என்ற கோட்பாட்டை எடுத்துக்கொண்டார். இது ஒரு கடினமான முயற்சி.இக்கோட்பாட்டை விவரிக்கின்ற நூல்கள் மொழியியலில் அதிகம் இல்லை.

முனைவர் பட்ட ஆய்வேட்டைக் கேரளப் பல்கலைக்கழகத்திற்கு அளித்த பிறகு, பேரா. இராம.சுந்தரம் அவர்கள் புனேயில் உள்ள டெக்கான் கல்லூரி மொழியியல் துறையில் பல்கலைக்கழக நிதி நல்கையுடன் ஆய்வாளராகச் சேர்ந்தார். பேரா. எஸ்.எம்.கத்ரே, பேரா.ஏ.எம்.காடகே, பேரா.ஹெச். எஸ்.பிலிகிரி போன்ற அறிஞர்களுடன் பழகவும் மொழியியல் அறிவை விரிவுபடுத்திக்கொள்ளவும் அது அவருக்கு வாய்ப்பாக அமைந்தது. இந்திய அளவில் டெக்கான் கல்லூரி மொழியியல் துறையும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையும் உயராய்வு நிறுவனங்களாகப் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் மேம்படுத்தப்பட்டன. பேரா.எஸ்.எம்.கத்ரே அவர்கள் டெக்கான் கல்லூரி மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநராகவும், பேரா.தெ.பொ.மீனாட்சி சுந்தரம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநராகவும் அமர்த்தப்பட்டார்கள். அத்துடன் கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறையும் ஹைதராபாத்தில் உள்ள உஸ்மானியப் பல்கலைக்கழக மொழியியல் துறையும் அனைந்திய நிலையில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

பேரா.இராம. சுந்தரம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் பயிலும்போது பேரா.அ.சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் மாணவராகவும் பேரா.தெ.பொ.மீனாட்சிசுந்தரம் அவர்களின் மாணவராகவும் இருக்கக் கூடிய நல்வாய்ப்பைப் பெற்றிருந்தார். பின்னர் பேரா வ.அய்.சுப்பிரமணியம் அவர்களின் மாணவராக இருந்தார். சிறந்த தமிழ் அறிஞர்களிடம் தமிழும் மொழியியலும் பயிலும் வாய்ப்பை அவர் பெற்றிருந்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநராக இருந்த பேரா. ச.அகத்தியலிங்கம் அவர்கள் அம்மையத்தில் விரிவுரையாளராகப் பணியாற்ற அழைப்பு விடுத்ததை ஏற்று அங்குப் பணியில் சேர்ந்தார். அங்குப் பணிபுரியும்போது போலந்து நாட்டில் உள்ள வார்சா பல்கலைக்கழகத்தில் தமிழையும் மலையாளத்தையும் பயிற்றுவிக்க அவரை அழைத்தார்கள். ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் போலந்தில் பணிபுரிந்துவிட்டுத் தமிழகம் திரும்பினார். போலிஷ் மொழியில் நன்றாகப் பேசவும் படிக்கவும் தேர்ச்சி பெற்றதுடன் திருக்குறள், திருவெம்பாவை, திருப்பாவை, திருமுருகாற்றுப்படை, சில பாரதி பாடல்கள், ஜெயகாந்தனின் ஓரிரு கதைகள் ஆகியவற்றைப் போலிஷ் மொழியில் வெளிவர அம்மொழி அறிஞர்களுடன் இணைந்து மொழிபெயர்ப்பை மேற்கொண்டார். அம்மொழியில் நல்ல புலமையை வளர்த்துக்கொண்டார். எல்லோருடனும் நன்றாகவும் பாசத்துடனும் பழகும் பண்பு உள்ளவராதலால் மாணவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஆசிரியராக அவர் அங்கு இருந்தார். அவர் இருக்கும் இடத்தில் நகைச்சுவையும் மகிழ்ச்சியும் பொங்கி வழியும்.

போலந்திலிருந்து தமிழகத்திற்கு வந்த பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தில் முதுநிலை ஆய்வாளராக அவர் சேர்ந்தார். பேரா.ச.அகத்தியலிங்கம் அவர்கள் பேரா. இராம.சுந்தரம், பேரா.குமாரசாமி ராஜா, பேரா. செ.வை.சண்முகம், பேரா.க.பால சுப்பிரமணியம், பேரா.பொன்.கோதண்டராமன் (பொற்கோ) ஆகியோர் அடங்கிய ஒரு சிறு குழுவை உருவாக்கினார். தொல்காப்பியத்தையும் தொல்காப்பிய உரைகளையும் ஆழமாகப் படித்து விரிவாக விவாதிக்கின்ற தளமாக அக்குழு இருந்தது. விவாதங்கள் பரபரப்பாகவும் கடுமையாகவும் நிகழ்ந்த காலம் அது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை விட்டு வெளிவந்த பிறகு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் பேரா.இராம.சுந்தரம் அவர்களைத் தமிழ் வளர்ச்சி என்ற திட்ட இயக்ககத்தின் இயக்குநராக நியமித்து அறிவியல், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் தமிழைப் பாடமொழியாகப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். மருத்துவத்தில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்கும் பொறியியலில் பி.இ. படிப்பிற்கும் தேவையான நூல்களையும் கலைச்சொற்களையும் உருவாக்கும் பணியை மேற்கொள்ள அவர் பேரா இராம.சுந்தரத்திடம் அறிவுறுத்தினார். தமிழகத்தில் தலைசிறந்த மருத்துவர்களையும் பொறியியலாளர் களையும் கண்டறிந்து முதல் இரண்டு ஆண்டுகளுக்குரிய பாடத்திட்டங்களையும் நூல்களையும் உருவாக்கும் பணிகளைப் பேரா இராம.சுந்தரம் அவர்கள் மேற்கொண்டார். அவருடைய அயராத உழைப்பின் காரணமாக பொறியியலில் 13 நூல்களும் மருத்துவத்தில் 14 நூல்களும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளிக்கொணரப்பட்டன. தமிழில் அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன (சுந்தரம், 2019: 198-199). பல்வேறு அறிவியல் நூல்கள் தமிழில் வெளிவந்தன.

1987-இல் அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை என்ற புதிய துறையை இரண்டாம் துணைவேந்தராகப் பணியாற்றிய பேரா ச.அகத்தியலிங்கம் அவர்கள் உருவாக்கி அத்துறையின் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பேரா. இராம. சுந்தரம் அவர்களை நியமித்தார். அத்துடன் அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம் ஒன்றைத் தொடங்கி அதன் செயலாக்கத்தை அவரிடம் ஒப்படைத்தார். இக்கழகம் 1987 முதல் இதுவரை 24 கருத்தரங்குகளைத் தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுடனும் கல்லூரிகளுடனும் இணைந்து நடத்தியுள்ளது என்பது அவரின் சாதனைகளுள் முக்கியமானது. "யார் எப்போது கலந்துரையாட விரும்பினாலும் அவர்களுக்கு வாய்ப்பளித்து, இசைவாகவும் இனிமையாகவும் அவர்களோடு கலந்துரையாடி அவர்களுக்கு உதவுகிற உயர்பண்பும், பல்துறை அறிவுத் திறமும் ஒருங்கு அமையப் பெற்றவர் முனைவர் இராம.சுந்தரம் அவர்கள்" என்று சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேரா.பொற்கோ அவர்கள் (1999) கூறுகிறார். இக்கருத்தரங்குகள் தொடர்ந்து நடைபெற இப்பண்புகள்தான் காரணமாக அமைந்தன. அறிவியல் தமிழ் என்ற அறிவுத் துறை இன்று ஆல் போல் தழைத்து வளர்ந்து செயல்பட அவருடைய பணி மகத்தானது. "அறிவியல் தமிழின் தந்தை" என்று அவர் அழைக்கப்படுகிறார். 1998-இல் அவர் தன்னுடைய பணியை நிறைவுசெய்தார்.

பணி நிறைவு பெற்றாலும் அறிவியல் தமிழ்த் துறையோடு அவருடைய தொடர்பு அறுபடாமல் தொடர்ந்துகொண்டிருந்தது. அதேபோல் டாக்டர் சு.நரேந்திரன், மறைந்த பேரா சா.கிருட்டினமூர்த்தி, தற்போதைய அறிவியல் தமிழ்த் துறைத் தலைவர் பேரா தியாகராஜன் ஆகியோருடன் இணைந்து அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகத்தின் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார். இதுவரை 24 கருத்தரங்குகளில் படிக்கப்பட்ட கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'வளர்தமிழில் அறிவியல்' என்ற வரிசையில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அறிவியல் கலைச்சொற்களைத் தொகுத்ததும் அவற்றைத் தரப்படுத்தியும் தரப்படுத்தியதன் பின்னணியில் கொள்கைகளை வகுத்ததும் அவருடைய முக்கியப் பணிகள்.

**தமிழ்ப் பணி**

பேரா.இராம.சுந்தரம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. (ஹானர்ஸ்) படித்ததால் தமிழில் மரபுசார் புலமையும் பேரா. அ.சிதம்பரநாதன் செட்டியார், பேரா. தெ.பொ.மீனாட்சி சுந்தரம் போன்ற தமிழ் அறிஞர்களிடம் தமிழ் கற்றதால் மேலை நாட்டு ஆய்வு முறையையும் ஒருங்கே பெற்றிருந்தார். பேரா.மா.இராசமாணிக்கனார், பேரா. ஔவை துரைசாமிப் பிள்ளை, பேரா. அ.கி.பரந்தாமனார், மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் ஆகிய பேராசிரியர்களைப் போற்றிப் புகழ்வார். முனைவர் பட்டத்திற்காகப் பேரா. வ.அய்.சுப்பிரமணியம் அவர்களின் மேற்பார்வையில் ஆய்வை மேற்கொண்டதால் மொழியியலிலும் ஆழமான அறிவை வளர்த்துக்கொண்டார். பேரா.வ.அய்.சுப்பிரமணியம் அவர்களைத் தன் 'ஞானத் தந்தை' என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. அத்துடன் பேரா.நா.வானமாமலை போன்றோரின் தொடர்பால் நாட்டுப்புறவியலிலும் தம்முடைய புலமையைத் தக்கவைத்துக்கொண்டார். சங்க இலக்கியத்தை முனைவர் பட்ட ஆய்விற்காக எடுத்துக்கொண்டதால் சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியம் போன்ற மரபிலக்கணங்களிலும் ஆழ்ந்த அகன்ற அறிவைப் பெற்றிருந்தார். தமிழ்ப்

பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்' என்ற திட்டம் அவர் இட்ட வித்து. பின்னர் அது ஒரு தனித் திட்டமாக வளர்ந்து பல நூல்கள் வெளிவந்தன. வரலாற்றில் ஆர்வம் நிறைந்து இருந்ததால் தமிழ் வரலாற்றிலும் ஆழ்ந்த புலமை கொண்டிருந்தார். பணிவழியான அறிவியல் தமிழும் ஆழமாக அவரிடம் குடிகொண்டது. எடுத்த காரியத்தை எவ்வித சமரசமும் இன்றி நேர்மையாகவும் முறையாகவும் துடிப்பாகவும் செய்யக் கூடியவராக அவர் இருந்தார்.

## நூல்கள் வெளியீடு

1999ஆம் ஆண்டு அவருடைய பணிநிறைவைச் சிறப்பிக்கும் வகையிலும் அவரைப் பெருமைப்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும் என்று விரும்பிய அவருடைய நண்பர்கள் அவருடைய அறுபதாம் ஆண்டைக் கொண்டாடும் வகையில் மலர் ஒன்றைக் கொண்டுவரப் பாடுபட்டார்கள். மணிவாசகர் பதிப்பகம் அதனை நிறைவேற்றும் வண்ணம் 'தமிழியல் ஆய்வுகள்' என்னும் தலைப்பில் மலர் ஒன்றைப் பதிப்பித்தது. பேரா.சா.கிருட்டிணமூர்த்தி, பேரா.கி.அரங்கன், பேரா.எ.சுப்பராயலு ஆகியோர் பதிப்பாசிரியர்களாகச் செயல்பட்டு அம்மலரை வெளிக்கொணர்ந்தார்கள். பேரா.இராம.சுந்தரம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு சுருக்கமாகவும் அவர் படைத்த நூல்கள், கட்டுரைகள் ஆகியவை தொகுக்கப்பட்டு அம்மலரில் கொடுக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தும் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்தும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டும் உள்ளது அவருடைய சிறப்பு.

அவருடைய மொழிபெயர்ப்பு இயல்பாக அமைந்திருக்கும். இதற்கு உரிய சான்றாக, பேரா. தாமஸ் ட்ரவுட்மேன் அவர்களின் ஆங்கில நூலைத் "திராவிடச் சான்று" என்ற தலைப்பில் மொழிபெயர்த்துக் காலச்சுவடு பதிப்பகத்தின்வழி வெளிவந்ததை நாம் இங்குக் குறிப்பிடலாம். இந்திய இலக்கியச் சிற்பிகள் என்ற வரிசையில் பேரா.எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்கள் பணி குறித்தும் பேரா. க.கைலாசபதி அவர்களுடைய பணி குறித்தும் நூல்கள் எழுதித் தரும்படி சாகித்திய அகாதெமி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பேரா. இராம.சுந்தரம் அவர்கள், அவர்களைப் பற்றி இரு நூல்களை அந்நிறுவனத்திற்கு அளித்தார். அவ்விரு நூல்களும் பேரா. இராம.சுந்தரம் அவ்வறிஞர்களின் மீது கொண்டிருந்த அன்பையும் புலமை மீது கொண்டிருந்த மரியாதையையும் காட்டும். அதேபோல் பேரா கா.சிவத்தம்பி அவர்களுடனான அவருடைய நட்பும் குறிப்பிடப்பட வேண்டியது. அவருடைய கல்விப் பணியைப் பாராட்டி 1997 ஆம் ஆண்டு ஆதித்தனார் நிறை முத்தமிழ் மன்றத்தின் சார்பாக மேனாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தமிழ்வழிக் கல்வி சாதனைக்கான 'நல்லறிஞர்' விருது வழங்கினார்.

25 கருத்தரங்குகள் நடத்தியதோடு 60க்கும் மேற்பட்ட மாநில/ தேசிய/ சர்வ தேசிய கருத்தரங்குகளில் அவர் பங்கெடுத்துள்ளார். வார்சாவில் நடைபெற்ற கீழைத்தேயயியல் அறிஞர் கருத்தரங்கு (1977), கொழும்பில் நடைபெற்ற பிராந்திய மொழியியல் கருத்தரங்கு (1992), கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாசிரியர்கள் மாநாடு (1994), தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாடு ஆகியவற்றில் கலந்துகொண்டுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் "அறிவியல் தமிழ் அமைப்பு" என்னும் தலைப்பில் பத்து சிறப்புரைகள் அவர் நிகழ்த்தியுள்ளார். சுருக்கமாகச் சொல்வது என்றால் அவர் தமிழ் இலக்கியம், இலக்கணம், திறனாய்வு, மொழியியல், மொழிபெயர்ப்பியல், அறிவியல் தமிழ், மொழித் திட்டமிடுதல், நாட்டுப்புறவியல் ஆகிய துறைகளில் சிறந்த பங்களிப்பைச் செலுத்தியுள்ளார்.

## சமூகப் போராளி

அறிவுத் தேடலோடு நிற்காமல் சமூகத்தின் மேன்மையிலும் வளர்ச்சியிலும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டவர் அவர். அவர் தொடக்க காலகட்டத்தில் திராவிட இயக்கத்தால் - குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தால் - கவரப்பட்டார். அவர் மாணவராக இருந்தபோது இயக்கத்தின் தீவிரப் பற்றாளராக இருந்தார். பின்னர் இடதுசாரிக் கொள்கைகளால் கவரப்பட்டு இயக்கமாகச் செயல்பட்டார். இடதுசாரி இயக்கங்களோடும் தொடர்பு கொண்டிருந்தார். பின்னர் ஆசிரிய இயக்கங்களோடு தன்னைப் பிணைத்துக்கொண்டு போராட்டங்களில் கலந்துகொள்வதோடு முன்னின்று இயக்குபவர்களுள் முதன்மையானவராகவும் அவர் இருந்தார். 1980-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் போராட்டத்தில் பங்கு பெற்றதோடு மற்ற சங்கங்களின் ஆதரவைப் பெறத் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டு போராட்டத்திற்கு ஆதரவு திரட்டினார். இதனால் அவருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் பெரிய முரண் ஏற்பட்டு அவருடைய திட்டம் முடிந்ததும்

பணியைத் தொடரவிடாமல் நிர்வாகம் அவரை வெளியேற்றிவிட்டது. இதனால் அவர் மனம் தளரவில்லை.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளர்களை உதவி ஆய்வாளர்களாக நிரந்தரம் செய்யக்கோரி 1990-களில் நடைபெற்ற ஆசிரியர்-பணியாளர் போராட்டம் 47 நாட்கள் தொடர்ந்து தஞ்சாவூரில் நடைபெற்றது. கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், தொழிற் சங்கத்தினர் ஆகியோரின் ஆதரவைப் பெற்று அப்போராட்டத்தை முறையாக நெறிப்படுத்தி தொய்வடையாமல் காத்து இறுதியில் வெற்றி பெறும்வரை பாடுபட்டோர்களுள் அவர் முதன்மையானவர். சிறை சென்ற ஆசிரியர்கள்-பணியாளர்களுள் அவரும் ஒருவர். பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு கோரிக்கைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு அவர் பெருந்துணையாக நின்றவர். தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவையில் உறுப்பினராக இருந்தபோது ஆசிரியர்-பணியாளர் நலன்களுக்குப் பெரிதும் பாடுபட்டார். மார்க்சியச் சிந்தனைகளும் தொழிற்சங்க உணர்வுகளும் அவருடைய வாழ்நாள் முழுவதும் நிலைத்து நின்றன.

**அவரும் நானும்**

1964-இல் தொடங்கிய எங்களது நட்பு அவர் மரணிக்கும் வரை தொடர்ந்திருந்தது.அது ஒரு குடும்ப உறவு.என்னுடைய நட்பு வட்டாரத்தில் பல நண்பர்கள் எனக்கு மூத்த சகோதரர்கள் போல் இருக்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர் பேரா. இராம.சுந்தரம் அவர்கள். அவரால் கவரப்பட்டும் இருக்கிறேன்; அவருடைய சிந்தனை ஆதிக்கத்திற்கு ஆட்பட்டும் இருக்கிறேன். என்னுடைய சிந்தனை வளர்ச்சியில் முக்கிய இடத்தைப் பிடித்தவர் அவர். அவரைப் பற்றி நான் குறிப்பிடும் இரு மேற்கோள்கள் எங்கள் நெருக்கத்தைக் காட்டுவதாக அமையும்.

"இத்தகைய ஒரு நூலை (நோம் சோம்ஸ்கி-பன்முக அறிமுகம்) எழுத வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் விதைத்தவர் பேரா.இராம.சுந்தரம் அவர்கள். அவருடைய சிந்தனைகளும் செயல்பாடுகளும் என்னை வெகுவாகப் பாதித்துள்ளன.'' (அரங்கன், 2013)

*"A special word of thanks must go to Prof. Rm. Sundaram who is the major source of inspiration for me. I don't remember that any of my research work went without his notice. He is a continuous source of encouragement for me. His influence on me may be witnessed both on my academic and non-academic activities." (Rangan, 2012: xi)*

இவ்விரு மேற்கோள்களும் எங்களுக்கு இடையிலான நட்பை உறுதிப்படுத்தும் வாக்குமூலமாக நான் கருதுகிறேன். இரு கண்களில் ஒன்றை இழந்ததுபோல் நான் உணர்கிறேன்.

''அவர் ஒரு தனி மனிதர் அல்ல; அவர் எப்போதும் ஒரு இயக்கமாகச் செயல்பட்டவர். கொள்கைப் பிடிப்பிற்காக இடைவிடாமல் பல தொல்லைகளை அனுபவித்த இந்தப் பெருந்தகை தனிப்பட்ட முறையில் யார் மீதும் குறைபட்டதில்லை'', என்று அவரைப் பேரா. பொன்.கோதண்டராமன் அவர்கள் (1999) குறிப்பிடுகிறார்.

இந்த நட்பு நிலத்தை விட அகன்றது; கடலை விட ஆழமானது; வானினும் உயர்ந்தது; காலத்தை வென்றது. எங்களுடைய நட்பு வட்டாரப் பூஞ் செடியிலிருந்து அந்த மலர் விழுந்தாலும் அதன் மணம் எங்களை விட்டு என்றும் அகலாமல் தொடரும்.

**உதவிய நூல்கள்**


- அரங்கன்.கி. 2013. நோம் சோம்ஸ்கி - பன்முக அறிமுகம். கோயம்புத்தூர்: மொழியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம்.
- கிருட்டினமூர்த்தி. சா., அரங்கன். கி., சுப்பராயலு.எ. (ப. ஆ.) 1999. தமிழியல் ஆய்வுகள் - முனைவர் இராம. சுந்தரம் மணிவிழா ஆய்வு நூல். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- கோதண்டராமன், பொன். 1999. ''பேராசிரியர் முனைவர் இராம.சுந்தரம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு'', தமிழியல் ஆய்வு.
- சுந்தரம். இராம.2004.தமிழக அறிவியல் வரலாறு. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- ------------------ (மொ.பெ.)2007.திராவிடச் சான்று-எல்லீசும் திராவிட மொழிகளும். நாகர்கோவில் & சென்னை: காலச்சுவடு பதிப்பகம் & சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (*Tamil translation of Thomas Trautmann's Language and Nation: The Dravidian Proof in Colonial Madras*).
- ------------------- 2019. ''அறிவியல் வளர்க்கும் தமிழ்'', இராமசாமி. மு., முத்தையா.இ. சேதுபாண்டியன்.தூ. (ப. ஆ.)இலக்கணமும் மொழியியலும் (ஆய்வுக் கட்டுரைகள்). சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்..பக்.188-201.
- *Rangan.K.2012.Toward, Formulating Formal Phonological Rules of Tolkappiyam-Ezhuttatikaaram. Chennai: Central Institute of Classical Tamil.*


**(நன்றி கணையாழி)**

அஞ்சலி



# அவர் ஓர் இயக்கம்

**கி.ரா.சங்கரன்**

அறிவியல் தமிழின் தாத்தா என்று மருத்துவர் சு.நரேந்திரன் அவர்களால் மதிப்புடன் அழைக்கப்படும் பேராசிரியர் இராம.சுந்தரம் அவர்கள் இன்று நம்முடன் இல்லை. அவர் கொடுத்துச்சென்ற சிந்தனை உள்ளது. அவரின் நூல்கள் வாயிலாகவும் கட்டுரைகள், உரைகள், அரங்கப்பேச்சுகள் வாயிலாகவும் வாழ்கிறார். பன்மொழியறிவு கொண்ட மொழிபெயர்ப்பாளராக, மொழியியல் வல்லுநராக, சமூக சிந்தனையாளராக, செயற்பாட்டாளராக இயங்கியவர். திராவிட இயக்கச்சிந்தனையில் இருந்து, மார்க்சியத்திற்கு நகர்ந்து அவ்விரு கொள்கைகளையும் தமிழ்த்தேசியத்திற்குப் பயன்படும்படி இயங்கியவர். அவர் ஓர் இயக்கம். அவர் இருக்கும் இடத்தில் இயக்கம் இருக்கும். இயக்கம் இருக்கும் இடத்தில் அவர் இருப்பார். என் முதல் நூலிற்கு அவரிடம்தான் அணிந்துரை வாங்கினேன். அளவற்ற மகிழ்ச்சியுடன் அதனை செய்து தந்தார். பாசாங்கு அற்ற அணுகுமுறை, எவ்வளவு பெரிய எதிரியினையும் எதிர்க்கும்

துணிச்சல், அனைவரையும் மதிக்கும் மாண்பு, எல்லா கருத்துகளையும் உட்செரித்து உண்மை காணும் நேர்மை - இவையே அவரது பலம். ஒதுக்குதல் என்ற கொள்கை அவரிடம் இல்லை. இணைத்தல் என்பதே அவரின் வாழ்முறை. அவருடைய 'சொல்புதிது சுவை புதிது' நூலில் அவருள் இருந்த ஒரு வரலாற்று ஆசிரியருக்கான பகுப்பாய்வு முறையினைக் கண்டு வியந்தேன். சிலப்பதிகாரத்திற்கு அவர் செய்த காலவரையறை அறிவியல்பூர்வமானது. அவருடைய பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்களின் கருத்திலிருந்தும், பேராசிரியர்.ச.வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்திலிருந்தும் மாறுபட்டு துணிச்சலான, அழுத்தமான சான்றுகளுடன் தம் காலவரையறையினை உறுதிப்படுத்தியிருப்பார். பவுத்த, சமண தத்துவநூல்களைக் கற்றபோது அக்கட்டுரைகளை எழுதியதாகக் கூறுவார். அனைவரையும் அன்பால் வசீகரிக்கும் தன்மை கொண்ட அவர் சாதிப்பற்றறுத்த உண்மையான மார்க்சியவாதியாவார். 1990களில் தமிழ்ச்சூழலில் நிகழ்ந்த, ஆய்வுப்போக்குகளில் உருவான உடைத்தல் கூறுகளைப் பற்றி பல சுற்றுகள் அவருடன் வாதித்திருக்கிறேன். உடைத்தல் போக்குகள் எதிர்காலத்தில் அடிப்படைவாதிகளுக்கு உரமாகும் என்று கூறியதை ஒரு தலையசைப்புடன் ஏற்றுக்கொண்டார். தமிழ்த்தேசியவாதிகள் மாநில எல்லைப்பகுதி மக்களுடன் கலந்துபேசி தம் கோட்பாடுகளை வகுப்பதற்கு சொல்லுங்களேன் என்றபோது, அது இயலும் என்றார். இளையதலைமுறையினர் அதனைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பார். மூத்த தலைமுறையினர் வழிகாட்டுங்கள் என்றேன். 1990களில் பெரியார் குறுக்கும் நெடுக்குமாக பகுப்பாய்வு செய்யப்பட்டபோது அப்போக்கு எதிர்காலத்தில் சமயவாதிகளுக்கு வலுசேர்க்கும் என்ற என் கருத்தினை உற்றுக்கேட்டார். அதனை அவர் மறுக்கவில்லை. உங்கள் நூலகத்திலும் சமூக விஞ்ஞானத்திலும் வெளிவரும் என் ஒவ்வொரு கட்டுரையினையும் படித்தபின் தொலைபேசியில் கருத்துடன் விமர்சனத்தையும் முன்வைப்பார். ஊக்கப்படுத்துவார். சிலவற்றை சுட்டிக்காட்டுவார். தோழர் தேவ.பேரின்பன் தலைமையில் நிகழ்ந்த கலந்தாய்வுக் கூட்டங்களில் என் கருத்துகளை தயக்கமின்றி பதிவிட ஊக்கினார். பிற துறை பயில்வினை வளர்த்துக்கொள்வதற்கு இரு மானிடவியல் நூல்களைப் பரிசளித்தார். ஆர்.எஸ்.சர்மாவும் டி.என்.ஜாவும் வெளியிட்ட டி.டி.கோசாம்பியின் நினைவுமலரினை அன்பளிப்பாக அவரிடம் பெற்றது பெரும் பேறு. ஆர்.எஸ்.சர்மாவின் 'ஆரியரைத்தேடி' நூலினை மொழிபெயர்ப்பதற்கு எனைப்பெரிதும் ஊக்கப்படுத்தி, மெய்ப்படியும் சரிபார்த்து திருத்தம் செய்தளித்தார்.

ஒவ்வொருமுறையும் நானும் சண்முகம் சரவணனும் மாறி மாறி அவரைச் சந்திக்கிறபோது என்னை சரவணன் என்றும் அவரை சங்கரன் என்றும் அழைப்பார். நாங்கள் திகைக்கிறபோது ரெண்டுபேரும் ஒன்னுதானப்பா என்பார். முகத்தில் சிரிப்பு கொப்பளிக்கும். நாங்கள் இருவரும் அவரை பேட்டியெடுக்கவேண்டும் என்று பலமுறை முயன்றும் இயலாமல் போனது. தம் ஆசிரியர் வ.ஐ. சுப்பிரமணியன் அவர்களுடனான ஆய்வு அனுபவத்தினை பகிர்ந்தபோது ஒரு முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக நாமும் பிறந்திருக்கலாமே என்று தோன்றும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பல துணைவேந்தர்களை நல்வழியில் இயக்கினார் என்றே சொல்லவேண்டும். அவர்கள் எடுத்த நல்லதிட்டங்களுக்கு இவர்தான் காரணியாக இருந்தார். தலைமுறை இடைவெளியின்றி இளம் ஆசிரியர்கள் வளர்வதற்கும், மாணவர்கள் கற்பதற்கும் முன்மாதிரி ஆசிரியராக இருந்தார். ஓராண்டிற்கு முன்பு தஞ்சாவூரில் இல்லத்தில் சந்தித்தபோது ஒரு மகாசிரிப்புடன் வரவேற்றார். பெரும் பூரிப்புடன் வழியனுப்பி வைத்தார். அவரை வழியனுப்பிவைக்க என்னால் செல்லமுடியவில்லை என்பது ஒரு வரலாற்றுப்பிழை.

●


**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**







கட்டுரை

# முதல் மூன்று தமிழ் நாவல்கள் சரித்திரமும் பயணமும்

**தி.சு. நடராசன்**

"முன்னொரு காலத்திலே..." இப்படித்தான், மொழிகள் பலவற்றிலும் கதைகள் தொடங்குகின்றன. அல்லது, 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா...' என்று இப்படித் தொடங்குகின்றன. இவை, பெரும்பாலும் நாட்டார் மரபு வழிக் கதைகளின் தொடக்கங்கள். இதிலே கவனிக்கத்தக்க ஒன்று கதைகளுக்குரிய காலம் இடம் பற்றிய குறிப்புக்கள், அல்லது தேவைகள் பற்றியது. புனையப்பட்ட கதையேயானாலும் இடமும் காலமும் அவை சார்ந்த சூழல்களும் முக்கியமான அச்சுக்கள் என்பதை இந்த மரபுகள் சொல்லுகின்றன. எனினும் எந்தக் காலம், எந்த இடம், எந்த ஊர் என்பன போன்றவற்றை இன்னதெனக் குறிப்பிட்டுக் கூறுவதில்லை. அரூபமாகவே சொல்லுகின்றன; எழுத்துமரபு, சீர்மை பெற்றிருக்காத காலப் பகுதியில், வாய்மொழி மரபே,

எல்லாமாக இருந்தது. கதை சொல்லலுக்கு உகந்ததாக உரிய சாதனமாக இருந்தது.

மேலும், முதலில் கதைகள், ஒரு அகன்ற பரப்பிலிருந்துதான் தொடங்குகின்றன. வாசிப்போர்க்கு அல்லது கேட்போருக்குத் தேவை கருதி, அவை கூர்மைப்படுகின்றன, வடிவமைகின்றன. இது பொதுவான நியதி. இது, கதை சொல்லுவதற்கு ஒரு வசதி தருகிறது என்பது மட்டுமல்ல; ஒரு ஆர்வநிலையையும் தருகிறது. நோக்கத்தினையும் இலக்கையும் குறிப்பிட்டு நிற்கிறது.

அது சரி... கதைகள் சொல்லப்படுகின்றனவா? எழுதப்படுகின்றனவா? இரண்டும்தான். இந்த இரண்டும் முரண்பட்டவை அல்ல; இரண்டும் வெவ்வேறு மரபுகள் இணைந்து கிடக்கும் ஒரு நடப்பினைச் சொல்லுகின்றன. எதிரே கேட்பவர் இருக்கிறார்; முகபாவனைகள் மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ, எதிர்வினை நிகழ்த்தக் கூடும் என்ற ஒரு நிலைமை கொண்டது இது. கதையை முன்னிலைப்படுத்துகிற அல்லது நின்று புலப்படுத்துகிற ஓர் அம்சம் இதிலே இருக்கிறது. திட்டமிட்டது என்பது போன்ற நிலையில் அல்லாமல், உணர்வுகளை நேரிடையாக இது பரிமாறிக் கொள்கிறது. கதையை எழுதுதல் என்பது கற்றோர் நெறிமுறையோடு சேர்ந்தது; திட்டமிடுதல்-செதுக்குதல்-சீரமைத்தல் என்ற பண்புகளோடு கூடியது. சொல்வதும் எழுதுதலும் ஆகிய முறைமைகள் இரண்டும் ஒன்று சேர்ந்து இருப்பது என்பது புனைகதைத் திறனை வளமுடையதாக ஆக்குகிறது. எழுத்தாளி என்பவனுக்குள்ளே கதை சொல்லி என்பவன் இயங்குகிறான்.

முனிசீப் வேதநாயகம் பிள்ளையின் பிரதாபா முதலியார் சரித்திரம், கதை சொல்லுவதிலும், கதை மாந்தர்கள் வழியாகச் சம்பவங்களைக் கோப்பதிலும் கற்பனை மேலிட்ட அற்புதப்புனைவுகளைக் கொண்டு வருகிறார். இவற்றின் ஓட்டத்திற்கும் எடுத்துரைப்புக்கும் நாட்டார் கதை சொல்லும் மரபே, அவரை வழி நடத்துகிறது. அவர் எழுதுகின்ற கதை, இப்படித்தான் தொடங்குகிறது, "இந்தத் தேசம், இங்கிலீஷ் துரைத்தனத்தார் காலத்திற்குப் பின்பு, சத்தியபுரி எனும் ஊரிலே தொண்டைமண்டல முதலியார் குலத்திலே நான் பிறந்தேன்..." கதாநாயகன் இப்படிச் சொல்லிக் கொள்கிறான். இது, வேளாளர்களுடைய பெருமையை முன்னிட்ட கதை. இனி, மூன்றாவது நாவலாகிய பத்மாவதி சரித்திரம், இப்படித்தான், பரந்துபட்ட ஒரு புனைவுடன் கூடிய ஒரு களத்திலிருந்து தொடங்குகிறது. "பாண்டிய நாட்டிலே, திருநெல்வேலி ஜில்லாவிலே, சிறுகுளம் என்ற ஊரிலுள்ள சுமார் இருநூறு வீடுகளில் வேளாளராலும் 'கீழ்ச்சாதி'களாலும் குடியிருக்கப் பெற்ற அறுபது வீடுகளைத் தவிர, மிகுதியாக பிராமணர் கிரகங்களே...." என்று ஆரம்பிக்கிறது. பிராமணர்களையும் வேளாளர்களையும் சொல்லிவிட்டு மற்றும் மேம்போக்காகக் கீழ்ச்சாதிகளையும் அங்கீகரித்துக் கொள்கிறது. அடுத்து இந்தச் சிறுகுளத்திலே வாழ்கின்ற சீதாபதி ஐயரைப்பற்றிச் சொல்லத் தொடங்குகிறது. "கள்ளச்சாட்சி சொல்வதிலும் உருட்டுப்புரட்டுக்கள் பண்ணுவதிலும் மொட்டை மனுக்கள் எழுதிக் குற்றமில்லாதாரை குற்றப்படுத்துவதிலும், ஏழைகளைப் பயமுறுத்திப் பணம் பறிப்பதிலும் அவரை வெல்வதரிது" என்று ஒரு சித்திரம் வரையப்படுகிறது. அதாவது பத்மாவதி சரித்திரம் பிராமணர்களைப்பற்றிய கதையேயானாலும், அவர்களை ஒரு விமர்சனக் கண்ணோட்டத்துடன் தான் சித்திரிக்கின்றது என்பதற்கு, இது ஒரு அடையாளம்.

இரண்டாவது நாவலாகிய கமலாம்பாள் சரித்திரம் இவ்விரண்டிலிருந்தும் வித்தியாசப்பட்டது. இதுவும் தன்னுடைய கதைக்குரிய தளமாக ஒரு இடத்தைப் புனைவு செய்கிறபோது அதற்குச் சிறுகுளம் என்றுதான் பெயரிடுகிறது. ஆனால் விரிவாக இது பற்றிப் பேசவில்லை. 'பெரியவீடு' என்ற வீட்டிற்கு வருகிறார். அங்கே முத்துசாமி ஐயர் என்பவரையும் கமலம்மாள் என்ற அவருடைய மனைவியையும் கொண்டுவந்து பேச வைக்கிறார். "ஸ்திரீ - புருஷ சம்வாதம்" என்ற உள் தலைப்புடன் அது இடம் பெறுகிறது. நகைச்சுவை, கிண்டல் இவற்றுடன் அது ஆரம்பிக்கிறது. அவள், எல்லாவற்றிற்கும் அமுங்கிக் கிடப்பவள் அல்ல, என்பது போன்ற ஒரு படிமத்துடன் தொடங்குகிறது, அந்த 'சம்வாதம்' உரையாடல். அவர், "அடியே உன்னைத் தாண்டி, அடியேய்...." என்று மனைவியை அழைக்கிறார். அந்த மனைவி உடனே மறுபேச்சு பேசத் தயாராகிறாள். "இங்கே அடியையும் காணோம் நுனியையும் காணோம். அடியாம்-அடிக்கவேண்டியதுதான். காசு கொடுத்துச் சந்தையில் வாங்கினால் போல் தான். இனிமேல் அப்படிச் சொல்லுங்கள், வழி சொல்லுகிறேன்". என்று சாகசமாய்ச் சொன்னாள்.

இங்கே தொடக்கங்களைச் சொன்னதற்குக் காரணம், அவற்றிற்குக் கதை சொல்லுதலாகிய வழிமுறையைத் தவிரவும் கதையின் போக்கு இன்னது என்ற அடையாளத்தையும் பாத்திரப் பண்பையும் இவை சுட்டுகின்றன என்பதையும் சொல்லுவதற்காகத்தான்.

சுவாரசியமாகக் கதை சொல்லுவதை ஒரு வழி முறையாகக் கொண்டிருக்கிறது கமலாம்பாள் சரித்திரம், மேலும் பின்னால் வருகிற கதைக் கட்டுக்கோப்புக்கு ஒரு அனுசரணையான பின்புலனும், எதிர்வுகள், வேறுபட்டமுனைகள் என்ற ஒரு நிலையையும் சொல்லிக் கொண்டு போக விரும்புகிறார் ஆசிரியர். பாத்திர வார்ப்புக்கு இந்த நாவலின் தொடக்கம், வலுவும் அழகும் சேர்க்கிறது.

பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் எனும் மூன்று நாவல்களும் அடுத்தடுத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அந்திமத்தில் பிறக்கின்றன. சரித்திரமாய்ச் சொல்லுகிறோம் என்ற முடிவோடு இந்த நாவல்கள் பிறக்கின்றன. பல நூற்றாண்டுகளாய் ஆண்களை மையமிட்ட சமூகத்தில் அவர்களால் அடக்கி வைக்கப்பட்ட பெண் இனத்திற்கு விடுதலையும் உயர்வும் வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்களால் எழுதப்பட்டவை இந்த நாவல்கள். காப்பியங்கள் பழசு; அந்த மரபில் வந்த நாவல்கள் புதுசு; நாவல் எழுதுகிற அனுபவங்கள் புதுசு. புதிதாக எழுதுகிறோம் என்ற உணர்வோடும் ஆர்வத்தோடும் இவை எழுதப்பட்டன. இவற்றை எழுதிய வேதநாயகம் பிள்ளை, ராஜம் ஐயர், மாதவையா மூவருமே நிறையப் படித்தவர்கள்; நிறைய எழுத முடியும் என்ற நம்பிக்கை யிலிருந்தவர்கள். ஒருவர், மயிலாடுதுறைக்காரர்; அடுத்தவர், மதுரை-வத்தலக்குண்டுக்காரர்; மூன்றாமவர் திருநெல்வேலிக்காரர். இம்மூன்று நாவல்களும் தமக்குள் வித்தியாசமான தளங்களையும், வித்தியாசமான போக்குகளையும் கொண்டவை. முன் மாதிரியாக இருக்கத் தகுதியானவை.

வேதநாயகம் பிள்ளை, தான் நாவல் எழுதுவதற்குரிய பின்புலம் பற்றியும், தான் எழுதும் நாவலின் முக்கியமான விஷயங்கள் குறித்தும் வாக்குமூலம் தருகிறார். அ.மாதவையாவும் தன்னுடைய முயற்சி பற்றிச் சுருக்கமாகப் பேசியிருக்கிறார். வேதநாயகம் பிள்ளை ஆங்கிலத்தில்தான் முன்னுரை தருகிறார். ஏன், ஆங்கிலத்தில் முன்னுரை எழுதுகிறார் என்று கேள்வி கேட்காமல், அவர் கூறியுள்ள சங்கதிகள் பற்றி மட்டுமே விவாதத்தில் எடுத்துக்கொள்ளலாம். "தமிழில் உரைநடை இலக்கியம் இல்லை என்ற குறையை நீக்கும் நோக்கத்துடன் தான் இந்தக் கற்பனை நூலை எழுத முன்வந்தேன்" என்று சொல்லுகிறார். இது ஒன்று; இதனை எழுதுவதற்குரிய இன்னொரு தேவையும் அவருக்கு உண்டு. அவர் சொல்லுகிறார், "நீதிநூல், பெண்மதிமாலை, சமரசக் கீர்த்தனம் முதலிய எனது நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறநெறிக்கொள்கைகளுக்கு விளக்கம் காட்டவும் இந்த நூலை எழுதினேன்".

எனவே, இந்த நாவல் எனும் நவீன எழுத்துப் படைப்புக்கு இரண்டு நிலைப்பாடுகள் இருந்திருக்கின்றன. நாவல் படைப்பாளி இதனை அறிவுப்பூர்வமாக உணர்ந்திருக்கிறார் என்பதுதான் முக்கியம். இது போன்றுதான் பத்மாவதி சரித்திரம் எழுதிய அ.மாதவையாவும், தான் ஒரு நாவல் எழுதுவதற்குரிய தேவை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதைச் சொல்லுகிறார். முதலில் அவருக்கு நாவல் பற்றிய பொதுவான கருத்தியல் தெரிந்திருக்கிறது. நாவல் எனும் சொல்லும் பொருளும் ஆங்கிலத்தில் எப்படி இருந்தது என்பதைச் சொல்லுகிறார். மேலைநாடுகளில், நாவல்கள் நிறையவே உண்டு. அவற்றில் பலவற்றிற்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புக்களும் உண்டு என்று சொல்லுகிறார். ரயில் நிலையங்களிலுள்ள புத்தகக் கடைகளை அவர் சுட்டிக்காட்டிச் சொல்லுகிறார். அதேபோல, தமிழில் வசனகிரந்தங்களே இல்லையே என்று வேதநாயகம் பிள்ளையின் கருத்தினை ஒட்டிப் பேசுகிறார். பின்னர், வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' எனும் நாவல் வெளிவந்திருக்கிறது என்ற செய்தியையும் மறக்காமல் குறிப்பிட்டுக் கூறுகிறார். அதோடு மட்டுமல்லாமல் அதன் பிறகு ராஜம் ஐயரின் 'கமலாம்பாள் சரித்திரம்' வந்திருப்பதாகவும் சொல்லுகிறார். இப்படி அவர், தமிழ் நாவல்கள் தனக்கு முன்னரே இருந்தன என்பதனை மறக்காமல் சொல்லுகிறார்; அங்கீகரிக்கிறார்; தமிழ் வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறார். மாதவையாவின் பரந்த உள்ளத்தையும் அறிவையும் பாராட்டாமலிருக்க முடியாது. ஏனெனில், இப்படியிருக்கையில், நான்காவது நாவல் என்று பலரும் சொல்லக்கூடிய 'தீனதயாளு' என்பதனையெழுதிய நடேச சாஸ்திரி என்பவர்; 'நமது தீனதயாளுதான் தமிழில் முதல்' என்று சொல்லிக்கொள்கிறார். இதிலுள்ள அறியாமையும் வம்பும் நினைத்துப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

மாதவையா, நாவல் இலக்கியத்தின் நோக்கம் அல்லது பணி பற்றியும் பேசியுள்ளார். "மற்றெல்லா உயர்ந்த கிரந்தங்களையும் போல நானும் என்னுடைய கிரந்தமும் படிப்பவர் மனத்தைக் கவர்ந்து, மகிழ்வூட்டலை முதற்கருத்தாகவும், நல்லறிவூட்டலை உட்கருத்தாகவும் கொண்டது". இது இவருடைய நிலைப்பாடு. ஆனால் வேதநாயகம், அறநெறி புகட்டுதலை முதன்மையானதாகக் குறிப்பிட்டுள்ளார். இருக்கட்டும். இந்த மூன்று முதல் நாவல்களுமே தம்மைத் தங்களுடைய முதன்மைக் கதைமாந்தர்களின் சரித்திரம் என்பதாகச் சொல்லியிருக்கின்றன. பின்னால் வந்தவை அப்படிச் சொல்லிக் கொள்ளவில்லை. மேலும் இவை மூன்றுமே பெண்களை உயர்வு செய்பவை. இவற்றுள்ளும் வேதநாயகம்பிள்ளையின் நாவல், பெண்களை அற்புத நவிற்சிகளாகச் சித்திரிக்கின்றது. பிரதாப முதலியாரின் சரித்திரத்தில் ஞானாம்பாளே நாயகி; தலைமைப்பாத்திரம்; குணமென்னும் குன்றேறி நிற்பவள், அவள். உயர்ந்த ஆளுமையோடு கூடவும் பன்முக ஆற்றலும் ஆளுகைத்திறனும் உடையவளாக எடுத்துரைப்புச் செய்யப்படுகிறாள். மழலை மொழி மாறாத சிறுமியாக இருந்த காலத்திலிருந்து தன்னுடைய அபூர்வத் திறமையினால் அரசனாகச் சில காலம் கோலோச்சிய காலம் வரை, கதை அவளுடைய பெருமையைச் சுற்றியே பேசுகிறது. பிரதாப முதலியாரைவிட ஞானாம்பாள் பலவிதங்களில் புத்திசாலி. "பிள்ளை பெற்றவளைப் பார்த்து, மலடி பெருமூச்சு விட்டது போல"

அவளுடைய திறமையைப் பார்த்து இவனுக்குப் பொறாமையும் வெட்கமும் உண்டாகிறது. இரண்டு பேரும் உறவுக்காரர்கள் தான். இருவருக்கும் திருமணப் பேச்சு நடக்கிறது. ஆனால் 80ஆவது பக்கத்தில் ஆரம்பித்து 120ஆவது பக்கம் தாண்டிய பிறகுதான் திருமணம் நடக்கிறது. ஆனால் கதையென்னவோ நேர்கோட்டில் தான் போகிறது.

கொஞ்சகாலம் கணவரை விட்டு ஞானாம்பாள் பிரிந்திருக்கிறாள். அந்த இடைக்காலத்தில் அவள் ஆண்வேடம் தரித்துக்கொள்கிறாள். விக்கிரமபுரி எனும் நாட்டின் பட்டத்து யானை வருகிறது. அவளை அப்படியே தூக்கித் தன் முதுகின் மேல் ஏற்றிக் கொள்கிறது. அரசியாக அவள் அரியணை ஏறுகிறாள். அறநெறியுடனும் அறிவுடனும் தீர்ப்புக்கள் வழங்குகிறாள், நிர்வாகம் பண்ணுகிறாள். தற்செயலாக அங்குவந்த பிரதாப முதலியை அடையாளம் காணுகிறாள். தன்னுடைய அரியணையின் ஓரத்தில் அவனைத் துணை அரசனாக உட்கார வைத்துக்கொள்கிறாள். (இப்போது எங்குப்பார்த்தாலும் துணைமுதல்வர்கள் இருக்கிறார்களே-அது போன்றதா?) ஆண்வேடத்தில் கவர்ச்சிகரமாக இருந்த ஞானாம்பாளை இன்னாரென்று தெரியாமலேயே ஆனந்தவல்லியெனும் வருங்காலப் பட்டத்துராணி, மனத்துக்குள் காதலை வளர்த்துக்கொள்கிறாள், திருமணம் செய்து கொள்ளவும் பிரியப்படுகிறாள். சமயம் வந்தவுடன் ஞானாம்பாள் உண்மையைச் சொல்லிவிட்டு ஆண்வேடத்தையும் அரச பதவியையும் களைந்து எறிந்துவிட்டுக் கணவனுடன் சொந்த ஊர் திரும்புகிறாள். அங்கு உற்றார் உறவினர்க்கு இவளுடைய ஆண் கோலமும் அரச பாவனையும் தெரிய வருகிறது. உடனே தாங்களும் ஞானாம் பாளுடைய அந்தக் கோலத்தைக் கண்ணால் காண விரும்புகிறார்கள். ஞானாம்பாளும் மனங்கனிந்து அந்தக் கோலத்தை அவர்கள் முன் மீண்டும் நிகழ்த்திக் காட்டுகிறாள். மக்கள் மகிழ்கிறார்கள். பிரிட்டன் அரசாங்கம் இவளுடைய திறமையை அறிகிறது. ராஜஸ்திரீ என்ற பட்டம் கொடுத்து மகிழ்கிறது. கதை இப்படிப் புனைவு நவிற்சியில் தொடங்கி விருப்பார்வத்தோடு அப்படியே வளர்ந்து முடிந்து போகிறது. ஆனாலும் பனுவல் முடியவில்லையே. இதற்கு அப்பால் போய், இதனை வாசித்தவர்களை வாழ்த்துகிறது. ஆசிரியர், இப்படி முடிக்கிறார்; "இதை வாசிக்கிறவர்கள் எல்லோரும், வச்சிர சரீரிகளாய் வாழ்ந்திருக்கக் கடவார்கள்" என்று கிறித்துவப்பாணியில் ஆசீர்வாதம் செய்கிறார்.

பிரதாப முதலியாருக்குப் பிறகு, ஒரு பதினாறு ஆண்டுகள் கழித்து பி.ஆர். ராஜம் ஐயரின் "கமலாம்பாள் சரித்திரம்" வருகிறது. இதற்கு ஒரு துணைத் தலைப்பு உண்டு. 'ஆபத்துக்கிடமான அபவாதம்' என்பது. இது இக்கதையின் போக்கை சொல்லிவிடக்கூடியது. இந்த அபவாதத்தை விதைத்தவர்கள் யார்? ஏன் எப்படி அவர்கள் அப்படிச் செய்தார்கள்? அதனால் நடந்த தீங்கு என்ன? யாருக்கு, எப்படி அது நடந்தது? இந்த அபவாதங்கள், எப்படித் தீர்கின்றன? என்று யோசிக்க வைத்து, நகர்ந்து முடிகின்றது, இந்த நாவல். நாவலின் நகர்வுக்கும் எடுத்துரைப்புக்கும் இந்த அபவாதங்கள் காரணங்களாக அமைகின்றன. இந்த நாவல் அற்புத நவிற்சியின் பக்கம் நுழையவில்லை. தருக்கம் சார்ந்த எடுத்துரைப்பும் வேதாந்தம் சார்ந்த தத்துவ நிலையும் கொண்டமைகிறது, இந்த நாவல். ராஜம் ஐயர் இருபத்தாறே ஆண்டுகள் தான் உயிர் வாழ்ந்தார். அதற்குள் *'Rambles in Vedantha'* என்ற தத்துவ நூலை எழுதியுள்ள இவர், விவேகானந்தரின் கவனத்தைப் பெற்றார். அந்தத் தத்துவ மன நிலையின் தாக்கம் இந்த நாவலில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறது நியாயம் தானே? அவர் பிரகடனப்படுத்திக் கொள்வார்; "இவ்வுலகில் உழன்று தவிக்கும் ஒரு அமைதியற்ற ஆத்மா, பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக் கடைசியாக நிர்மலமான இன்ப நிலை அடைந்ததை விவரிப்பதே இந்த நவீனத்தின் முக்கிய நோக்கம்".

ஆம், கமலாம்பாளுடைய கணவர் முத்துஸ்வாமி ஐயர், வம்பர் மகாசபையின் அபவாதங்களினால் வம்புதும்புகளுக்கு இடங்கொடுத்துக் குடும்பத்தைவிட்டுக் காசிக்குப் போய்விடுகிறார். வம்பர் மகாசபை சமாச்சாரம் - அவ்வளவு முக்கியமானதாகி விட்டதா என்ன? அதிலே, முத்துஸ்வாமி ஐயரின் தம்பி மனைவி முக்கியமானவள் ஆயிற்றே. புறணிகள் பேசுவது எவ்வளவு பெரிய தப்பு என்பது போலக் காட்டப்படுகிறது. தம்பி இறந்த பிறகுதான் முத்துஸ்வாமி ஐயர், வெறுப்படைந்து காசிக்குப் போகிறார். ஆனால் திரும்ப எல்லாரையும் அங்கே சந்தித்து மீண்டும் இல்லற சந்நியாசியாக வீடு வந்து சேர்கிறார்.

கமலாம்பாள் சரித்திரத்தின் இன்னொரு விசேடம் என்னவென்றால், பிராமணர்கள் வாழ்க்கையைப்பற்றி மட்டும் அலாதியாகச் சொல்லாமல், மற்ற இனத்தாரையும் உள்ளே கொண்டு வருகிறார். சும்மா பெயருக்காக அல்ல; உணர்வுடனும் முக்கியத்துவத்துடனும் எடுத்துரைப்புச் செய்கிறார். ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளை வருகிறார். பேயாண்டித்தேவன் வருகிறான். இறுதிவரை இவர்கள் வருகிறார்கள். தங்களுடைய பண்புநலனும் முக்கியத்துவமும் குறையாமல் வருகிறார்கள். பேயாண்டித்தேவன் திருட்டுக் குணத்திலிருந்து மாறி நல்ல குணமுடையவனாக மாறி வருகிறான். அம்மையப்ப பிள்ளையை நகைச்சுவையுடன் சித்திரிக்கும் அதே நேரத்தில் அவருடைய அறிவையும் உண்மையையும் பாராட்டுதலோடு சித்திரிக்கிறார். எனவே கமலாம்பாள் சரித்திரம் வேதாந்தத்தில் மட்டும் முடியவில்லை. பல பரிமாணங்கள் கொண்டதாக அமைகிறது என்பது கவனிக்கப்பட வேண்டும். மேலும், இந்த நாவலில் 'ஜல்லிக்கட்டு'

பேசப்படுகிறது என்பதும் ஒரு முக்கியமான செய்தி. (இது பற்றிப் பின்னர், தனியே ஒரு குறுநாவல் எழுதிய சி.சு.செல்லப்பாவும் இந்த ஊர்க்காரர்தான்).

*1894இல் 'கமலாம்பாள் சரித்திரம் வந்த பிறகு ஆறு ஆண்டுகள் கழித்து, திருநெல்வேலிக்காரராகிய அ.மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' வருகிறது. இது பிராமணர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சித்திரிக்கிறது. ஆனால் அவர்களைப் போற்றியுரைக்கவில்லை. உண்மையில் விமர்சனம் செய்கிற மனப்பான்மையோடுதான் இதைக் கட்டமைக்கிறது. முக்கியமாக மூன்று பிராமணப் பெண்களைப்பற்றி எடுத்துரைப்புச் செய்கிறது; பத்மாவதி, சாவித்திரி, கல்யாணி எனும் மூவர் வருகிறார்கள். இவர்கள் லட்சியப்படுத்தப்படவில்லை; இடையில் இவர்களைப் பற்றி ஒப்பிட்டுப் பேசுகிறார், உடல் அழகை மறந்து விடாமல் குறிப்பிடுகிறார் ஆசிரியர். "இப்பெண்கள் மூவருள் எவள் அதிக அழகி, எவள் சிறந்த குணவதி, எவள் உயர்ந்த பாக்கியவதி என்று கேட்டால், என்ன சொல்லுகிறது? பேச்சுவளர்ச்சியிலும், நடையுடை பாவனைகளிலும் இதழின் அழகிலும் கூந்தல் அழகிலும் சாவித்திரியே சிறந்தவள். மேனியிலும் கண்ணழகிலும் கல்யாணியே சிறந்தவள். சரீரக்கட்டிலும் அவயவங்களின் வடிவிலும் பத்மாவதியே சிறந்தவள். சாந்தத்திலும், குணசீலத்திலும் சாவித்திரியே மிக்கவள்; காதற்பேச்சிலும் வாஞ்சையிலும் கல்யாணியே மிக்கவள்; பர்த்தாவின் மனதறிந்து நடத்தலிலும் ஊக்கத்திலும் பத்மாவதியே மிக்கவள்".*

*மாதவையா இந்த நாவலில் பெண்களைப்பற்றிச் சொல்லுகிறபோது வெறுமனே குணவிசேடங்களைப்பற்றி மட்டும் பேசவில்லை என்பதை அறியவேண்டும். உடல் அழகு பற்றியும் பிரதானமாக எடுத்துரைப்புச் செய்கிறார். இது அவரின் ரசனையோடு கூடியது. இந்த நாவலில் அவர் காதல், கவர்ச்சி, பாலியல் முதலியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். அம்முறையில், பாத்திரங்கள் சிலர் முறை தவறிப்போவதையும் இயல்பாகப் பேசுகிறார். பிராமணர்கள்-தன்னுடைய சுய சாதியினரை-இந்த அளவிற்கு விமர்சனம் செய்கிற நாவலாசிரியர்கள் இருக்கிறார்களா?*

*பத்மாவதி சரிதத்தில் வரும் பல பிராமணர்கள் யோக்கியதை தப்பியவர்கள். கதாநாயகனான நாராயணன் என்பவனே அத்தகையதொரு குடும்பத்திலிருந்து பொறுக்கப்பட்டவன்தான். இவனுடைய தந்தை சீதாபதி ஐயரே-இவர்தான் இந்த நாவலில் நாம் சந்திக்கும் முதலாவது ஆள்-சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிற அளவுக்குச் சீர்கெட்டவர்தான். கள்ளச்சாட்சி சொல்வதிலும், சாட்சிகள் தயார் பண்ணுவதிலும், மொட்டை மனுக்கள் தயார் பண்ணுவதிலும், ஏழைகளைப் பயமுறுத்திப் பணம் பறிப்பதிலும், உருட்டுப்புரட்டுகள் பண்ணுவதிலும் கைதேர்ந்தவர். இதனால் கடுஞ் சிறைக்கு அனுப்பப்படுகிறார். இருந்த சொற்பசொத்து வீடு, தோட்டம் யாவும் கிரயமாகிவிட்டன. மாதவையா நாவலின் முடிவை நாடகச்சுவைபடச் சொல்லி முடிக்கிறார். சீதாபதி ஐயருக்கு வாழ்க்கைப்பட்டதற்கு அடையாளமாக அப்புண்ணியவதிக்கு "மஞ்சள் நூலில் கோர்த்த சிறு தாலி மட்டும் இருந்தது, நாராயணனும் இருந்தான்".*

*மாதவையா, இந்நாவலில் கல்வியின் மேன்மையைப் பற்றி வற்புறுத்துகிறார். குறிப்பாகப் பெண் கல்வியைப் பல கோணங்களிலிருந்து எடுத்துக்காட்டுகிறார்; வலியுறுத்துகிறார். அதுபோல், வைத்தியத் தொழிலின் மேன்மை பற்றியும் பேசுகிறார். தமிழ்மொழியின் சிறப்பைப் பல இடங்களில் எடுத்துரைக்கிறார். அதனைச் சிறப்பாகப் பேண வேண்டுவது பற்றியும் பேசுகிறார். மனித மதிப்புகளுக்குச் சிறப்புத்தரும் மாதவையா அந்தத் திக்கு நோக்கித்தான் எடுத்துரைப்பை நகர்த்துகிறார்.*

*இவர் பழம் இலக்கியங்களிலிருந்து சில எடுத்துக்காட்டுக்கள் காட்டித் தன் கருத்துக்கு அரண் சேர்க்கிறார். தமிழ்க்கவிதைகளில் இவருக்குள்ள ஈடுபாடு போற்றும்படியாக உள்ளது. கம்பனுடைய இராமகாதை, திருக்குறள், சீவகசிந்தாமணி, தாயுமானவர் பாடல், சித்தர்பாடல், அருணாச்சலக் கவிராயர் பாடல் என்று இப்படிப் பல பாடல்கள். இவையன்றியும் சில நாட்டுப்புறப் பாடல்கள், ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட்டிலிருந்து மொழி பெயர்த்த பாடல் என்று இவை அமைந்துள்ளன. இவற்றை அவர் ஏற்புடைமை சொல்லிப் பயன்படுத்திக் கொள்கிறார். இப்படி 42 பாடல்களை அவர் எடுத்துக்காட்டுகிறார். அவருடைய இலக்கிய அறிவின் விசாலத்தை இது காட்டுகிறது. இது போலவே கமலாம்பாள் சரித்திரமும் 20 பாடல்கள் இருக்கும்-அவற்றை இணைத்துக்கூறி இனம் காட்டுகிறார்.*

*மாதவையாவிடம் விமர்சனக் கண்ணோட்டம் இருக்கிறது. பரந்த அனுபவமும் ஈடுபாடும், சமூக நோக்கமும் இருக்கின்றன. கமலாம்பாள் சரித்திரத்திற்கு அடுத்துப் பத்மாவதி சரித்திரம் தமிழில் அன்றைய யதார்த்தவாதத்தின் சித்திரத்தைக் காட்டுகின்ற ஒரு நல்ல நாவலாகத் திகழ்கிறது. இப்படித் தமிழ் நாவல் உலகத்தின் தொடக்கம், சிறந்த முன் மாதிரியாக இருக்கிறது. கற்பனை வயப்பட்ட அற்புத நவிற்சி, வேதாந்தத்தை உட்கொண்ட யதார்த்தவாதம், மேலும் அன்றைய பாணியிலான விமர்சன யதார்த்தவாதம். இப்படி, இவற்றைக் கொண்டவையாக, தமிழில் நாவல் இலக்கியம் தொடங்குகிறது.*

●

மதிப்புரை




# மூன்று முகங்கள்

**பாவண்ணன்**

இனம், மொழி, நிலம் ஆகிய தெளிவான அடையாளங்களுடன் எழுதப்படும் வரலாற்றை ஒரு பெரிய தொகைநூலாக எடுத்துக்கொண்டால், அந்த நூலில் மேற்சொன்ன அடையாளங்களை அழுத்தம் திருத்தமாக நிறுவும் அம்சங்களுக்கே முதன்மையான இடம் வழங்கப்பட்டிருக்கும். அதற்கான மனிதர்களையே அந்தத் தொகைநூல் மாமனிதர்களாக முன்வைக்கும் வாய்ப்பே அதிகம். அதுவே இயற்கை. ஆனால் அந்த அடையாளங்களைக் கடந்து ஒரு குறிக்கோளுக்காகவே வாழ்ந்த மகத்தான மனிதர்கள் எல்லா வட்டாரங்களிலும் வாழ்ந்திருப்பார்கள். ஒற்றை நோக்கத்துடன் உருவாக்கப்படும் பெருந்தொகைநூல்களில் பற்பல சமயங்களில் அத்தகு மாமனிதர்களைப் பற்றிய பதிவுகளுக்கு இடமின்றிப் போகலாம். அவர்களைப் பற்றிய நினைவுகளைப் பாதுகாக்கவும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குத் தெரிவிக்கவும் தனித்த வட்டார

> *“நான் டாக்டர் சொல்றேன். சாப்பிடு. ஒன்றும் ஆகாது. போகும்போது வைத்தீஸ்வரன் கோயில் அங்காரகனுக்கு ஒரு கும்பிடு போட்டுப் போ. அவன்தான் வைத்தியன். நான் வெறும் டாக்டர்”*

வரலாற்றை முன்வைக்கும் தொகைநூல்களை உருவாக்கவேண்டியிருக்கிறது. இவ்விரண்டு தொகைநூல்களிலும் சேராமல் விடுபட்ட கிராம வரலாறுகள் வேறொரு தொகைநூல்களாக உருவாக்கப்படவேண்டும். இவ்விதமாக மூன்று தளங்களிலான வரலாற்றுத் தகவல்களைத் திரட்டி அறிந்துகொள்வதே ஒரு சமூகத்தைப் புரிந்துகொள்ளும் சிறந்த வழி.

இப்படி சொல்லிப் பார்க்கலாம். ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் ஒரு மாபெரும் தொழில்நிறுவனத்தை உருவாக்க ஒரு தொழில்முனைவோர் அல்லும்பகலும் பாடுபடுகிறார் என வைத்துக்கொள்வோம். எண்ணற்ற சிரமங்களையும் தியாகங்களையும் தொடர்ந்து அவர் தன் கனவை நிகழ்த்திக் காட்டினால் நாடே அவரைத் திரும்பிப் பார்க்கும். அனைவருடைய பாராட்டுகளும் புகழ்மொழிகளும் அவர்மீது வந்து குவியும். அந்த மாநகரத்தைப்பற்றிய ஒரு பெருவரலாறு எழுதப்படும்போது அத்தகையோருக்கு அதில் நிச்சயமாக இடமிருக்கும்.


அதே நேரத்தில் ஒரு சின்னஞ்சிறு நகரத்தில் சாதாரண ஒரு கீற்றுக்கொட்டகைக்குள் ஒரு சின்ன உணவு விடுதியை ஒருவர் தொடங்கி நடத்துகிறார் என வைத்துக்கொள்வோம். சுவையையும் தரத்தையும் தக்கவைத்து மக்களின் நம்பிக்கையைப் பெற்று அவர் மெல்ல மெல்ல வளர்ந்து உயர்வடைகிறார் என்றும் வைத்துக்கொள்வோம். அவரைப்பற்றி அடுத்த நகரத்தவர்கள் கூட அறியாமல் போகலாம். ஆனால் அந்தக் குறிப்பிட்ட நகரத்தைப் பற்றிய வரலாற்றில் அவருக்கும் அவருடைய கனவுக்கும் உழைப்புக்கும் நிச்சயமாக இடமிருக்கும்.

ஒரு கிராமத்தில் ஒரு கூடையில் பலகாரங்களைச் சுமந்துவந்து ஏரிக்கரையிலோ ஆலமரத்தின் நிழலிலோ அமர்ந்து தேடி வரும் கூலித் தொழிலாளர்களுக்கு குறைந்த விலையில் உணவைக் கொடுத்து பசியாற்றும் மூதாட்டியைப் பற்றி, அருகிலேயே இருக்கும் நகரமோ மாநகரமோ அறியாமல் போகலாம். ஆனால் அந்த மூதாட்டியின் சித்திரத்துக்கு அந்தக் கிராமத்தைப் பற்றிய வரலாற்றில் எப்போதும் இடமிருக்கும். இங்கு மூன்று விதமான வரலாறுகளுக்கும் தேவை இருக்கிறது.

சந்தியா நடராஜனின் மாயவரம் - சில நினைவுகளும் சில நிகழ்வுகளும் செறிவான ஒரு வட்டார வரலாற்று நூலாக வெளிவந்திருக்கிறது. அவர் பிறந்து வளர்ந்து நண்பர்களுடன் வலம்வந்த ஊர் மாயவரம். பிரிக்கப்படாத அந்தக் காலத்து தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சின்ன நகரமே மாயூரம் என்கிற மாயவரம். நிர்வாக வசதிக்காக கடந்த ஆண்டில் மயிலாடுதுறை என தனி மாவட்டமாக உருமாறிவிட்டது. மாயவரம் பல மகத்தான மனிதர்களை இந்த மண்ணுக்கு அளித்திருக்கிறது. தமிழ்நாட்டின் பொதுவுடைமை இயக்கத்திலும் திராவிட இயக்கத்திலும் பங்காற்றிய அரிய மனிதர்கள் மாயவரத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி தன் மனத்தில் தேங்கியிருந்த நினைவுகளையும் நண்பர்கள் வழியாகத் திரட்டியெடுத்த நினைவுகளையும் அழகாகத் தொகுத்திருக்கிறார் நடராஜன். ஒவ்வொரு நினைவிலும் ஒவ்வொரு காட்சி அடங்கியிருக்கிறது. எல்லாமே வாழ்க்கையின் சிறுசிறு துண்டுகள். ஒரு கோட்டோவியம் போல மிகச்சில வரிகளின் ஊடாகவே அந்த மனிதர்களின் சாயலை உணர்த்திவிடுகிறார் நடராஜன்.

வெவ்வேறு காலகட்டத்தில் காவிரியின் போக்கில் நிகழும் வெவ்வேறு மாற்றங்களின் கோலங்களை தொகுதியின் முதல் கட்டுரையில் வழங்குகிறார் நடராஜன். சில சமயங்களில் மணல்வெளியாகவும் சில சமயங்களில் புதுவெள்ளம் கரைபுரண்டோடும் வெளியாகவும் காணப்படும் காவிரியின் கரையில் அமைந்த அழகான சிறிய நகரம் மாயவரம். அங்கு பலவிதமான மனிதர்கள் தத்தம் கனவுகளோடும் தேடலோடும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைப்பற்றிய சித்திரங்களைத் தீட்டி நம் முன் காட்சிப்படுத்தியிருக்கிறார் நடராஜன். இத்தொகுதியைப் படித்து முடித்தபோது, பண்பாட்டு நிகழ்வுகளை அடையாளப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் ஓவியக்கண்காட்சியைப் பார்த்துவிட்டு வந்த அனுபவத்தைப் பெறமுடிகிறது.

மாயவரம் மணிக்கூண்டுக்கு அருகில் பட்டமங்கலத்தெருவில் இருக்கும் காளியாகுடி ஓட்டலைப் பற்றிய விவரணைகளின் ஊடே ஏழைகளுக்கு மருத்துவம் பார்க்கும் ராமமூர்த்தி என்னும் டாக்டரைப் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. இடுப்பில் ஒரு நாலுமுழ வேட்டி. மேலே உடலை மறைக்க கைவைத்த பனியன். நெற்றியில் திருநீறு. வீட்டையே மருத்துவமனையாக மாற்றிக்கொண்டவர் அவர். அல்லது மருத்துவமனையையே வீடாக நினைத்து வாழ்ந்து வருபவர். காலையில் நோயாளியைப் பார்க்க உட்கார்ந்தால் இரவு வரைக்கும் நோயாளிகள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு மருத்துவம் பார்க்கிறார் அவர். ஒரு நோயாளியிடம் இரண்டு ரூபாய் மட்டுமே மருத்துவக்கட்டணமாக வாங்கிக்கொள்கிறார் அவர். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவச்சேவை ஆற்றிவரும் மருத்துவரைப் பார்த்து உரையாடச் சென்ற நடராஜனை மருத்துவர்




(மாயவரம் - சில நினைவுகளும் சில நிகழ்வுகளும். சந்தியா நடராஜன். சந்தியா பதிப்பகம். 53வது தெரு, ஒன்பதாவது அவென்யு, அசோக் நகர், சென்னை -83. விலை 220)

காளியாகுடி ஓட்டலிலிருந்து அல்வா வரவழைத்துக் கொடுத்து உண்ணச் சொல்கிறார். தன் நீரிழிவு நோயை உத்தேசித்து அந்த இனிப்பை அவர் மறுக்கும்போது "நான் டாக்டர் சொல்றேன். சாப்பிடு. ஒன்றும் ஆகாது. போகும்போது வைத்தீஸ்வரன் கோயில் அங்காரகனுக்கு ஒரு கும்பிடு போட்டுப் போ. அவன்தான் வைத்தியன். நான் வெறும் டாக்டர்" என்று பாசத்துடன் சொல்கிறார். ஒரு வரலாற்றுப் பாத்திரம் ஒரு புனைகதைப் பாத்திரத்தைப் போல பேசும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கிறது.

ராமமூர்த்தியைப் போலவே சேவையுணர்வு கொண்ட மற்றொருவர் ஆங்கிலோ இந்தியரான பெண்மருத்துவர் ரோட்ரிக்ஸ். நடராஜனை அவர் தாய் ஈன்றெடுத்த போது, பிரசவம் பார்க்க வந்தவர் அவர். அன்று ஆருத்ரா தரிசன நாள். பிரசவத்தை முடித்துக்கொண்டு அறையைவிட்டு வெளியே வந்த மருத்துவர் ரோட்ரிக்ஸ் தெருவில் முழு அலங்காரக் கோலத்துடன் செல்லும் நடராஜரைப் பார்க்க நேர்ந்தது. உடனே ஏதோ ஓர் உள்ளுணர்வு தூண்ட அறைக்குத் திரும்பி "நடராஜன் வந்துவிட்டார். குழந்தைக்கு அவர் பெயரையே சூட்டுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். கர்த்தரைத் தவிர வேறொரு கடவுளின் திருவுருவைக் கூட காண விரும்பாத ஒரு சமூகத்திலிருந்து வந்தபோதும் தனது கைகளில் ஏந்திய ஒரு குழந்தைக்கு ஓர் இந்துக் கடவுளின் பெயரைச் சூட்டும்படி சொன்ன விதம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது.

எழுபதுகளில் நெருக்கடி நிலை அறிவிக்கப் பட்டிருந்த காலகட்டத்தில் மாயவரத்தில் தி.மு.க. கட்சி சார்பில் நடைபெற்ற கூட்டங்களைப் பற்றியும், அக்கூட்டங்களில் கருணாநிதி உரையாற்றும்போதே வளைகுடா நாட்டிலிருந்து ஒலிநாடாப் பெட்டிகளைக் கொண்டுவந்த இஸ்லாமிய நண்பர்கள் அவற்றில் அவருடைய உரையைப் பதிவு செய்துவைத்துக் கொள்வதைப்பற்றியும் அவர் புறப்பட்டுச் சென்றபிறகு ஒவ்வொரு நாளும் மீண்டும் மீண்டும் அந்த உரையை ஒலிக்கவைத்து அனைவரையும் கேட்கத் தூண்டிய அனுபவத்தைப் பற்றியும் விரிவாகப் பகிர்ந்து கொள்கிறார் நடராஜன். அந்த அனுபவக் குறிப்பில் அவர் சூரி ஐயர் என்பவரைப்பற்றிக் குறிப்பிடுகிறார். கருணாநிதி உரையாற்றிய கூட்டத்தை அவர்தான் தலைமையேற்று நடத்தியவர். அசலான தி.மு.க. தொண்டர். கையில் முரசொலி இல்லாமல் அவரைப் பார்ப்பது அரிது. அவரைப்போலவே எம்.ஜி.ஆர். கட்சியின் மீதும் பொதுவுடைமைக் கட்சியின் மீதும் பற்றுக்கொண்ட தொண்டர்களைப் பற்றிய குறிப்புகளும் பல இடங்களில் காணப்படுகின்றன. மாயவரம் மக்களின் அரசியல் ஈடுபாட்டையும் அர்ப்பணிப்புணர்வையும் அவை உணர்த்துகின்றன.

கட்சித்தலைவர்கள் மீது மக்கள் காட்டிய ஈடுபாட்டைத் தொடர்ந்து, கட்சிக்கூட்டங்களுக்காக கட்அவுட் எழுதிய ஓவியக்கலைஞர் பி.டி.ராஜன் என்பவரைப் பற்றிய ஒரு சித்திரத்தை அளிக்கிறார் நடராஜன். நாற்பது அடி உயர கட்அவுட்களை உயிர்ச்சித்திரமாக உருவாக்கும் ஆற்றல் நிறைந்தவர் அவர். ஒருமுறை அவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தை அறிமுகப்படுத்திய காலகட்டத்தில் அவர் பள்ளிக்குழந்தைகளுடன் அமர்ந்து உண்பதுபோன்ற தோற்றத்தைக் கொண்ட கட்அவுட் ஒன்றை உருவாக்கினார். ஓவியத்தில் இலைமீது பரிமாறப்பட்ட உணவை உண்மையான உணவென நினைத்து காக்கைகள் பறந்துவந்து கொத்தியுண்ண முயற்சி செய்கின்றன. அந்த அளவுக்கு உயிரோட்டமாக தீட்டிக் காட்டிய ஓவியர் அவர். அவருடைய மறுபக்கமாக ராஜன் மாபெரும் காதலரென்றும் மூன்று பெண்களை மணந்துகொண்டவர் என்றும் ஒரு செய்தியையும் தருகிறார் நடராஜன். இன்று வாழும் அவருடைய வாரிசுகளைச் சந்தித்து சேகரித்த தகவல்கள் ராஜனைப் பற்றிய சித்திரத்துக்கு மெருகூட்டுகின்றன.

நடராஜன் சித்தரிப்பில் நாம் அறிய நேரும் ஒவ்வொரு மனிதரும் ஏதோ ஒரு பெரிய நாவலில் இடம்பெறும் பாத்திரங்களைப்போலவே காட்சியளிக்கிறார்கள். அந்தப் பட்டியலில் மிகமுக்கியமானவர்கள் ராஜாபாதர், வரதாச்சாரி, ஜி.டி.கே.

ராஜாபாதர் வாழ்ந்துகெட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மனிதர். செல்வாக்கான குடும்பமென்றாலும் தந்தையால் ஏற்பட்ட இழப்பு தந்தை தேடிவைத்த சொத்துகளை விழுங்கிவிட்டது. வாழ வழி தேடி, உறவினர் ஒருவரின் உதவியைப் பெற்று மலேசியாவுக்குச் சென்றார் இளைஞரான ராஜாபாதர். அப்போது மலேசியாவில் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவம் வேர் பிடித்த காலம். ராஜாபாதர் உணர்ச்சிவேகத்தில் அந்தப் படையில் இணைந்துகொண்டார். அங்கு அறிமுகமான கணபதி என்னும் தொழிற்சங்கவாதியின் தொடர்பால் பொதுவுடைமைச் சிந்தனையின்பால் ஈர்க்கப்பட்டார். தொழிற்சங்கப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டார். அதனால் மலேசிய அரசு 1948இல் அவரைக் கைதுசெய்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவைத்தது. அந்த நேரத்தில் இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. பொதுவுடைமைக்காரர்கள் தலைமறைவாக வாழ்ந்த காலம். தலைமறைவாக வாழ்ந்தபடி இயக்கம் வளரப் பாடுபட்டார் ராஜாபாதர். ஒருமுறை ரயில்மூலம் எடுத்துச் செல்லப்பட்ட ரயில்வே ஊழியர்களின் மாதச்சம்பளம் தீவிர கம்யூனிஸ்டுகளால் கொள்ளையடிக்கப்பட்டது. அந்த வழக்கின் குற்றவாளிப்பட்டியலில் ராஜாபாதரின் பெயர் எப்படியோ சேர்ந்துவிட்டது. அதனால் மூன்றாண்டு காலம் சிறைத்தண்டனையை அனுபவித்தார் அவர். விடுதலைக்குப் பிறகு மணலி கந்தசாமியின் வழிகாட்டுதலோடு தொடர்ந்து இயக்கப்பணிகளில் ஈடுபட்டு வந்தார். அவரே ராஜாபாதருக்குத் திருமணமும் செய்துவைத்தார். மிகக் குறுகிய காலமே அவர்களுடைய திருமண வாழ்க்கை நீடித்தது. அவர் துணைவியாரின் அகால மரணத்துக்குப் பிறகு இரு குழந்தைகளையும் அவரே வளர்த்து ஆளாக்கினார். மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அவர் மூன்றுமுறை நகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்காகப் பணியாற்றினார்.

கடந்த நூற்றாண்டில் காந்தியக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் இல்லாத நகரமே இந்தியாவில் இல்லை. மாயவரத்தில் அக்கொள்கைகளின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களில் ஒருவர் வரதாச்சாரியார். மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தார். காந்தியடிகளின் அழைப்பை ஏற்று அரசு வேலையைத் துறந்து மாயவரத்தில் பெரிய கண்ணாரத்தெருவில் தனிமருத்துவராக பணிபுரிந்து வந்தார். காந்தியடிகள் மாயவரத்துக்கு வருகை தந்தபோது வரதாச்சாரியாரே வரவேற்புரை நிகழ்த்தினார். காந்திய வழியில் வாழ்ந்து மக்களுக்குச் சேவையாற்றினார். காந்தியடிகளின் மறைவுக்குப் பிறகு பூமிதான இயக்கத்துக்காக வினோபா தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சமயத்தில் கூடுவாஞ்சேரிக்கு அருகில் பெருமாட்டுநல்லூர் கிராமத்தில் தனக்குச் சொந்தமான நிலங்களை தானமாக வழங்கிவிட்டார்.

மாயவரத்தின் மாமனிதர்களில் ஒருவர் தொழிற்சங்கத்தலைவராக தொண்டாற்றி மக்களின் மனத்தில் இடம்பெற்ற ஜி.டி.கே. என்கிற ஜி.துரைக்கண்ணு. சைக்கிள் ரிக்‌ஷா தொழிலாளர்கள் சங்கம், சலவைத் தொழிலாளர்கள் சங்கம் என பல்வேறு அமைப்புகளை உருவாக்கி தொழிலாளர்களை ஒருங்கிணைத்தவர் அவர். தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட்டவர். அவர் பங்கேற்ற பேச்சுவார்த்தை எதுவும் தோல்வியில் முடிந்ததே இல்லை. இயல்பாகவே அவருக்கிருந்த தலைமைக்குணம் அவருக்கு எப்போதும் வெற்றியையே ஈட்டித் தந்தது. தமிழ் மீதும் ஆங்கிலத்தின் மீதும் ஆழ்ந்த பற்றுகொண்டிருந்தார். திருக்குறளை தன் வழிகாட்டி நூலாகவே அவர் கருதினார். அவருடைய கைப்பையில் மு.வரதராசனார் எழுதிய உரையுடன் கூடிய கையடக்கப்பதிப்பான திருக்குறள் புத்தகம் எப்போதும் இருக்கும். அத்துடன் தன் பாதுகாப்புக்காக வைத்திருக்கும் ஒரு கத்தியும் இருக்கும்.


தற்செயல்களின் விளைவாகவே அவர் பொதுவாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கி, பிறகு அதிலேயே தொடர்ந்து இயங்கும்படி நேர்ந்தது. அவர் பத்துவயது சிறுவனாக இருந்த காலத்தில் ஏதோ ஒரு கோவில் திருவிழாவை முன்னிட்டு அவரே தயாரித்த ஒரு வெடி, அவர் எதிர்பார்க்காத நேரத்தில் வெடித்ததால் கை கருகிவிட்டது. மருந்திட்டும் குணமாகாத கையில் புரையோடிவிட்டதால் வெட்டி எடுக்கவேண்டியதாயிற்று. அவரை பம்பாய்க்கு அழைத்துச் சென்று படிக்கவைத்த அவருடைய தாய்மாமன் கொலாபாவில் இருந்த பிரிட்டிஷ் ராணுவத் தலைமையகத்தில் வேலைக்குச் சேர்த்துவிட்டார். இளமை வேகத்தில் ஒரு வெள்ளைக்கார ராணுவ அதிகாரியின் மகளைக் காதலித்தார் அவர். அதனால் ஏற்பட்ட பிரச்சினையால் வேலையை இழந்து அவர் மாயவரத்துக்கே திரும்பவேண்டியதாயிற்று. எதிர்பாராத விதமாக அந்த வெள்ளைக்காரப் பம்பாய்ப்பெண் தன்னிடமிருந்த முகவரியை வைத்துக்கொண்டு ரயிலேறி மாயவரத்துக்கு வந்து சேர, வீட்டு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து அவரை ரயிலில் ஏற்றி சென்னைக்கு அனுப்பிவைத்துவிடுகிறார்கள். மருந்தாளுநருக்கான பயிற்சியை முடித்துவிட்டு ஒரு மருந்துக்கடையை நடத்தத் தொடங்கினார் துரைக்கண்ணு. இலக்கிய

ஆர்வத்தின் காரணமாக பூம்புகார் தமிழ்ச்சங்கம் என்றொரு அமைப்பை நண்பர்கள் உதவியுடன் நடத்தினார். நிலையான வருமானத்துக்கு வழி ஏற்பட்ட பிறகு ஒரு புத்தகக்கடையையும் மாயவரத்தில் தொடங்கினார். பொதுவாழ்வில் அவர் மதிக்கத்தக்க ஆளுமையாக மலர்ந்த பிறகே மக்கள் அவரை ஜிடிகே என்று அழைக்கத் தொடங்கினர்.

மாயவரத்தில் வாழ்ந்த பல ஆளுமைகளைப்பற்றிய நினைவுகளை இத்தொகுதியில் பதிவு செய்திருக்கிறார் நடராஜன். சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்ட நாராயணசாமி நாயுடு, பொதுவுடைமைத் தோழர் காத்தமுத்து போன்றோரின் சித்திரங்கள் அபூர்வமானவை. ஒரு நகர வரலாற்றில் கட்டாயம் இடம்பெற வேண்டியவர்களைப் பற்றிய தகவல்கள் பொருத்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

இது ஒரு நகரத்தின் கதை. எண்ணற்ற மனிதர்களின் சித்திரங்களை இக்கதை வழியாக முன்வைக்கிறார் நடராஜன். ஒவ்வொருவருக்கும் பின்னால் ஒரு வரலாறு இருக்கிறது. தனித்ததொரு முகம் இருக்கிறது. மாயவரம் என்னும் நகரத்துக்கு அவர்கள் ஆற்றியிருக்கும் சேவைகள் மகத்தானவை. என்றென்றும் நன்றியுடன் நினைக்கத்தக்கவை.

மாயவரத்தில் சுதந்திரத்துக்காகப் போராடிய காங்கிரஸ் இயக்கமும் பொதுவுடைமை இயக்கமும் திராவிட இயக்கமும் வேரூன்றி இணைந்தே வளர்ந்திருக்கின்றன. இன்றளவும் உறுதியாக நிலைத்திருக்கின்றன. இம்மூன்று இயக்கங்களின் சாயல்களையும் உள்வாங்கிக்கொண்ட மாயவரம் அவற்றையே தன் மூன்றுமுகங்களாக கட்டமைத்துக்கொண்டது. ஏதோ ஒரு விதத்தில் நகரத்தை வளர்த்தெடுக்கும் ஆக்கசக்திகளாகவே இம்மூன்றும் அமைந்துவிட்டன. அந்த ஆக்கசக்திகளுக்கு ஊற்றுக்கண்களாக விளங்கிய ஆளுமைகளின் தன்னலம் கருதாத மனமும், பிறந்த நகரத்தின் வளர்ச்சியின் மீது கொண்டிருந்த ஈடுபாடும் பாராட்டுக்குரியவை. வேறுவேறு இயக்கத்தவர்கள் என்றபோதும் நகரத்தையும் மக்களையும் முன்னிலைப்படுத்தி உழைத்த இலட்சியவாதத் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அவர்கள். இந்த மூன்றுமுகங்களும் இணைந்ததே மாயவரத்தின் பண்பாட்டு முகம். இந்த நூலில் மாயவரம் எப்படி வளர்ந்து மலர்ந்திருக்கிறது என்ற ஒரு வரலாற்றுத்தடத்தை போன நூற்றாண்டுக்கும் இந்த நூற்றாண்டுக்கும் இடையில் ஒரு கோட்டை இழுத்து தீட்டிக் காட்டியுள்ளார் நடராஜன். ●



## அஞ்சலி

இடதுசாரிக் கோட்பாட்டாளரும்
பொதுவுடைமைக் கருத்துகளை
தனது திரைப்படங்களில்
எளிய புரிதலோடு
வெளிப்படுத்தியவருமான
தோழர் எஸ்.பி.ஜனநாதன்
தனித்துவமான தமிழ்த்திரை
இயக்குனர்களில் முக்கியமானவர்.

சமுக அக்கறையோடும்
பொறுப்புணர்வோடும்
திரைப்படங்களை இயக்கி
வந்த அவரது மறைவுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.





# தமிழ்ச் சமூகத்தின் தொன்மை அடையாளத் தடங்கள்

முனைவர் மு. ஏழுமலை

பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்டு 2021 பிப்ரவரி மாதத்தில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாக தமிழ் ஆய்வுலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள நூல் “பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்” என்னும் நூல்.


பேரா. ஆ.சிவம் அவர்கள் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் வரலாற்றியல், சமூகவியல், மார்க்சியவியல், மானிடவியல் உள்ளிட்ட துறைசார் அணுகுமுறையோடு தனக்கே உரிய ஆய்வு முறையியலை முன்னெடுத்துச் செயல்பட்டுக்கொண்டிருப்பவர். இவருடைய மந்திரம் சடங்குகள், கோபுரத் தற்கொலைகள், பனைமரமே பனைமரமே, தாவர வழக்காறுகள் முதலான நூல்கள் இவரின் ஆய்வு முறையியலுக்கான சான்றுகளாக உள்ளன.

தமிழ்ச் சமூகம் குறித்த அடையாளங்களை மீட்டெடுத்தலுக்கான முறையியலாக: யூகங்களை

முன்வைத்த கற்பனாவாத கருத்தியலைத் தவிர்த்து மக்களின் வாழ்வியல் அடிப்படையில் யதார்த்தவாத பின்புலத்தோடு அணுகுதல் என்பது பேராசிரியரின் ஆய்வு அணுகுமுறையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. நாட்டார் வழக்காற்றியலில் தொடர்ச்சியாக இவ்வாய்வு அணுகுமுறையிலான நூல்களை வெளியிட்டு, தமிழ்ச் சமூக அடையாள மீட்டுருவாக்கத்திலும், புதிய தலைமுறையினர் முன்னெடுக்க வேண்டிய ஆய்வு முறைக்கான வழிகாட்டியாகவும் தம் ஆய்வு நூல்களைக் கொண்டுவருவதில் சிரத்தையான கள ஆய்வை மேற்கொண்டு செயல்படக்கூடிய செயல்பாட்டாளர்.

பேரா. ஆ.சிவம் அவர்களின் தொடர்ச்சியான செயல்பாட்டு வடிவமாகத் தற்பொழுது வெளிவந்துள்ள "பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்" என்னும் நூல் தமிழ்ச் சமூகத்தின் தொடர்ச்சியான வழிபாட்டு மரபை முன்னிறுத்துகிறது. இத்தகைய வழிபாட்டு மரபை தமிழ் மொழியின் இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, நடுகற்கள், வாய்மொழி வழக்காறுகள் முதலானவற்றைக் கொண்டு வெளிப்படுத்தியிருப்பது ஆய்வு முறையியலின் நுட்பத்தை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது. மேலும், இந்நூலின் அமைப்பு முறையியலைப் பொருத்தவரையில் முன்னுரை, தொல் சமயம், இறந்தோர் வழிபாட்டின் சிதைவு, புராண மூதாதையர், இறந்தோர் வழிபாட்டின் எச்சம் என நான்கு தலைப்புகளிலான கருத்தமைவுகள், முடிவுரை, துணைநூற் பட்டியல், கலைச்சொல் (தமிழ், ஆங்கிலம்), ஒளிப்படங்கள் என ஓர் ஆய்வு முறையியலோடு அமைத்திருப்பது முதல் நிலை வாசகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஆய்வுமுறையியலைக் கற்பிக்கக் கூடியதாகவும் உள்ளது. இவற்றோடு, தமிழ் இனம் இயற்கை சார்ந்த வாழ்வியல் சூழல்களில் காரணகாரிய உணர்தலுக்கான முயற்சி, உணர்தல், எதிர்வினையாற்றல் முதலான இயக்கங்களைப் புரிந்துகொள்ளச் செய்கிறது.

தமிழரின் தொல் சமயம் குறித்து உரையாடும் பேராசிரியர், இயற்கையைக் குறித்த புரிதல் இன்மையும், இயற்கையைக் குறித்த அச்சமும் சமயத்தின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்த நிலையைக் குறிப்பிடுகிறார். இவற்றோடு தொல் சமயத்தின் படிநிலைகளாக: ஆவியம், குலக்குறியம், இயற்கைப் பொருள் சார்ந்த வழிபாடு, உயிரியம், வெறியாட்டு ஆகியவற்றை டைலர், குரோவ்கன் முதலானோரின் வரையறைகளை எடுத்துக்காட்டியும் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் உள்ள குறிப்புகளைச் சான்றுகாட்டியும் விளக்கியிருப்பது, திணைசார்ந்து தமிழர்களிடையே உருவாகி நிலைத்திருந்த தொல்சமய மரபின் இருப்பைப் புரிந்துகொள்ளச் செய்கிறது. காலந்தோறும் உருவான இலக்கியங்களில் உயிரும் உடலும் பெற்றிருக்கும் கருத்தியல், சாவின் இரு நிலைகளான மருத்துவச் சாவு, உயிரியல் சாவுக்கிடையிலான வேறுபாடு, துஞ்சுதல், மாய்தல் என்ற சொற்கள் குறிக்கும் பொருண்மைகளும் வேற்றுமைகளும், வீரச்சாவு, கடிமரம், கந்து ஆகிய சொற்களும், அச்சொற்களுக்குப் பின் உள்ள மக்களின் விழுமியநிலையையும் மக்கள் தங்களின் இருப்பிற்கான ஊடாட்டத்தை பேரா.ஆ.சிவம் அவர்களின் தொடர்ச்சியான உரையாடல் உணர்த்துகிறது. இயற்கை வழிபாடு, வெறியாட்டு ஆகிய நிகழ்வுகள் ஆவி குறித்த நம்பிக்கை




பண்டைத் தமிழ்ச் சமூகத்தில்
இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்
ஆ.சிவசுப்பிரமணியன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சென்னை - 50.
விலை: ரூ.145/-

அணங்கு தெய்வமாக வளர்ச்சியடையும் நிலை முதலானவை ஒரு சமூகத்தின் சிந்தனை நிலையை வெளிப்படுத்துவதோடு, அச்சிந்தனையின் மூலமாக வெளிப்படும் பண்பாட்டு அடையாளங்களையும் விளக்குகின்றன.

'இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்' என்னும் தலைப்பில் தமிழரின் வழிபாட்டினூடாக வெளிப்படும் தமிழரின் வாழ்வியல் குறித்த ஆராயும் பேரா.ஆ.சிவம், சமணம், பௌத்தம், வைதீக சமயங்கள் ஆகியவற்றையே தமிழரின் சமய வரலாறாகக் கற்பித்துக்கொண்டும், சைவம், வைணவம் உள்ளிட்ட சமயங்களே தமிழர் சமயம் என்ற அழுத்தமான பதிவுகளும், இன்னும் ஒரு படி மேற்சென்று சமயம் என்பது ஒற்றைத் தன்மையுடையது என்கிற பரப்புதலும் தொடர்ச்சியாகத் தற்பொழுது முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற சூழலில், தமிழ் இனத்திற்கென ஒரு தொல்சமய மரபு உண்டு என்பதை விரிவான விளக்கத்தின் வழி உணர்த்தியிருக்கிறார். இவற்றோடு, தமிழ் இனத்தினரிடையே ஆவிகளின் மீதான நம்பிக்கையாக தன் குடும்பம், குலம், கால்வழி சார்ந்து இறந்தவரையும், முன்னோரையும் முன்வைத்த தொல்சமய மரபின் மூலம் அடைகாத்த நினைவுகளின் படிநிலைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

"பண்டைய மக்கள் சிலரின் அகராதியில் கடவுள் என்பதைக் குறிக்கும் வார்த்தைக்கு இறந்த மனிதன் என்பதே பொருளாக இருந்திருக்கிறது" என்ற வில்டியூரெண்ட் அவர்களின் மேற்கோள் மனிதன் இறப்பின் மீது கொண்டிருந்த விழுமியத்தை உணர்ந்துகொள்ளச் செய்கிறது.

கற்கால சமூகத்தில் வாழ்ந்த மனிதன் ஆவி மீது கொண்ட நம்பிக்கையால், அந்த ஆவியை நிலை நிறுத்துவதற்கான முயற்சியாக ஓவியம் வரைதல், பதுக்கைகள் ஏற்படுத்துதல், நடுகல் உருவாக்கி வழிபடுதல் முதலான நிலையில் செயல்பட்டுள்ளான். இவ்வாறு ஆவியை நிலைநிறுத்துவதற்கு ஏன் 'கல்' பயன்படுத்தினான் என்ற வினா எழுகிறது. இந்த வினாவிற்கான விடையாக பேராசிரியர் அவர்கள், மிர்சியா எலியட் குறிப்பிடும், 'புராதன மனிதர்களின் சமய உணர்வானது கடினத்தன்மை, முரட்டுத்தன்மை, நிலைத்த தன்மை என்ற மூன்றும் இணைந்ததாகும். கம்பீரமான தோற்றமுடைய ஒரு பாறை அல்லது கருங்கல்லை விட உயரமானதும் மரியாதையைத் தூண்டுவதுமான வலிமை பெற்ற எதுவும் அச்சமூகத்தில் இல்லை' என்ற மேற்கோளைக் கொண்டு விளக்கியிருப்பது, ஒரு சமூகத்தின் வாழ்வியல் சார்ந்த உருவ, அருவ நிலைநிறுத்தல்கள், ஒரு சமூகத்தின் வாழ்வியல் சூழலுக்கும் வாழ்வியல் சூழல் சார்ந்து ஏற்படுத்திக்கொள்ளும் கருத்தியலுக்குமான தொடர்பை அறிந்துகொள்ளச் செய்கிறது. மேலும், தொல்காப்பியத்தில் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்துதல் என்றும், புறப்பொருள் வெண்பாமாலை நூலில் கல்காண்டல், கற்கோள் நிலை, கல்நீர்ப்படுத்துதல், கல் நடுதல், கல்முறை பழுச்சல், இல்கொண்டு புகுதல் என்றும் நடுகல் வழிபாட்டின் ஆறு படிநிலைகளை குறிப்பிட்டிருப்பதும், தமிழ் இலக்கியங்களில் பரவலாக நடுகல் குறித்த பதிவுகள் இடம்பெற்றிருப்பதும் ஒரு இனம் சார்ந்த வழிபாட்டு மரபின் தொடர்ச்சிக்கும் பரவலாக்கத்திற்கும் அடையாளமாகிறது.

'இறந்தோர் வழிபாட்டின் சிதைவு' என்னும் தலைப்பில் பேரா ஆ.சிவம் விவாதிக்கும் கருத்துகள் தமிழ்ச் சமூகத்தினர் உணர வேண்டிய இன்றியமையாத வரலாற்றுத் தன்மை. சங்க இலக்கியம் உருவான காலத்தையடுத்து வளர்ச்சிபெற்ற நிலவுடைமைச் சமூகம் கட்டமைக்கும் சிந்தனை மரபு என்பது இறந்தோர் வழிபாடு என்கிற இனக்குழுச் சிந்தனையின் அழிப்பின் மீது உருவாக்கப்படுகிறது. தொல்சமயம் நெறி அழிப்பிற்கான செயல்பாடுகளாக இனக்குழு அமைப்பையும், குறுநில மன்னர்களையும் ஒடுக்கி பேரரசு உருவாக்கல், அரசின் தலைமையாக மன்னன் இருத்தல், மன்னனும் கடவுளும் 'இறை' என்ற சொல்லால் அழைக்கப்படுதல், மன்னனுக்கு செலுத்தும் வரி 'இறை' என்ற சொல்லால் அழைக்கப்படுதல் முதலானவை உருவாகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக கடவுள் இருக்கும் இடங்களை கோட்டம் (புறநானூறு), கோயில் (மணிமேகலை) என்ற பெயர்களால் அழைக்கும் வழக்கம் உருவாதல், கோயில்களில் உறையும் தெய்வங்கள் உருவாதல், தெய்வ உருவாக்கத்தோடு அத்தெய்வங்களுக்குரிய புராணங்களையும் உருவாக்குதல் என்ற செயல்பாடுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தகைய சிந்தனைமுறையின் தாக்கம், தொல் சமய அழிவுக்கும் இறந்தோர் வழிபாட்டின் வீழ்ச்சிக்கும் காரணமாகிற போக்கினை பல்வேறு சான்றுகளின் மூலம் பேரா ஆ.சிவம் எடுத்துக்காட்டியிருப்பது, ஒரு சிந்தனைமுறையின் உருவாக்கத் தாக்கம், அதற்கு முற்பட்ட மக்களின் நிலம் சார்ந்த வாழ்வியல், செய்யும் தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் மரபான சிந்தனை அழிவிற்குக் காரணமாகும் என்ற உண்மையை முன்னிறுத்துகிறது.

வடமொழி ஆகமங்களை உள்வாங்கிய வைதீக சமயத்தவரால் கட்டமைக்கப்பட்ட புராண மரபைக் குறித்து 'புராண மூதாதையர்' என்னும் தலைப்பில் விரிவான இலக்கிய ஆதாரங்களோடு பேரா ஆ. சிவம் உரையாடல் நிகழ்த்துகிறார். வைதீக சமய நெறியைப் பின்பற்றியவர்கள் தங்களின் சமய நிறுவனமயத்திற்கும், சமய நிலைபெறலுக்கும் தக்க களனாக பல புராணக் கதைகளை உருவாக்கினர். அவற்றில் மனுநீதிச் சோழன், சிபி மன்னன், அகத்தியர் என்ற மூவர் குறித்த புராணக் கதைகள் குறிப்பிடத்தக்கவை. இக்கதைகள் சங்கமருவிய கால இலக்கியமான பழமொழி நானூறு (மனுநீதிச் சோழன்) தொடங்கி வள்ளலார் காலம் வரையில் பன்முகங்களில் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய புராணக்கதையின் எழுச்சி, தமிழ்ச் சமூகத்தின் குலக்குறி மரபு, குல வழியினர் அல்லது கால் வழி மரபு மழுங்கடிக்கப்பட்டு, புராணங்களின் அடிப்படையில் பல கதாபாத்திரங்களை உருவாக்கி புராண மூதாதையர்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. புராண மூதாதையர்களை மையமாகக் கொண்டு நீதி, இரக்கம், மருத்துவம், இலக்கியம், இலக்கணம் என்பனவெல்லாம் உருவானதாக ஏற்படுத்தியிருக்கும் மாயை அரசியலை சான்றுகளுடன் எடுத்துக்காட்டியிருப்பதன் மூலம் வரலாற்றின் பொய்த்தன்மையை பிரித்து உணர வேண்டிய கடமை ஒரு இனத்திற்கு உண்டு. இவை மட்டுமின்றி, புராண மூதாதையர்களால் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கைகளையும் கேள்விக்குட்படுத்தி விடைகாண வேண்டிய கடமையும் உண்டு என்ற விரிவான சிந்தனையோட்டத்திற்குரிய களமாக 'புராண மூதாதையர்' பகுதியின் கருத்துகள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உலக மனித இன வரலாற்றில் தொன்மையான இனமாக விளங்கும் தமிழ் இனம் தொடர்ச்சியாக ஒவ்வொரு குறிப்பிட்ட காலங்களிலும் ஒவ்வொரு அரசியல் சூழல்களையும், அவ்வரசியல் சூழல்கள் முன்னிறுத்தும் கருத்தியலையும் எதிர்கொண்ட சமூக அமைப்பாகும். இவ்வாறு மாறுபட்ட பல கருத்தியல்களையும் கடந்து, தமிழினத்தின் தொன்மையான சிந்தனை மரபின் எச்சமாக இடம்பெறும் தொல்சமயக் கூறுகள் மக்களின் வாழ்வியலில் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டுவரை தொடர்ந்துகொண்டு வருவதையும் காண முடிகிறது. இவ்வாறு தமிழினத்தின் சிந்தனைவழி தொடரும் எச்சங்களில் இறந்தோர் வழிபாடு குறித்த சிந்தனைத் தொடர்ச்சியை மையமாகக் கொண்ட பேரா. ஆ.சிவம் அவர்களின் உரையாடல் வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. குடும்ப தெய்வம், குல தெய்வம், ஊர்த் தெய்வம், நீர்த் தெய்வம், நோய்த் தெய்வம் என்ற பல் நிலையிலான தெய்வங்களின் வழிபாட்டில் பொங்கலிடுதல், சாமியாடல், படையல் பொருள்கள் முதலான கூறுகளாக இன்றும் மக்களின் வாழ்நிலையோடு உறவாடிக் கொண்டிருப்பதை பேராசிரியரின் உரையாடல் சுட்டிக்காட்டுகிறது. நாட்டார் தெய்வக் கூறுகளை விழுங்கும் வைதீக சமய நெறிகள், வெகுசன இந்துத்துவ முறையியல் முதலான வைதீக அரசியலின் சூழ்ச்சிகளைக் கடந்து இன்றும் மக்களிடையே தொல்சமயம் வழக்கத்தில் உள்ள நிலை, தொல்சமய நெறி உருவாக்கக் கட்டமைப்பின் உண்மைத் தன்மையையும் மக்களின் நம்பிக்கையையும் உணர்த்துகிறது. தொல் சமயநெறி இந்து என்ற அடையாளத்தவர்களிடம் மட்டுமல்லாமல், இஸ்லாமியர், கத்தோலிக்க சமயத்தினரிடமும் அவரவர் சமயம் சார்ந்த நெறியோடு தொடர்வதையும் பேராசிரியருக்கே உரிய ஆய்வுமுறையிலான உரையாடல் வெளிப்படுத்துகிறது.

தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைப் புரிந்துகொள்வதற்கான தொடர்ச்சியான ஆய்வு முன்னெடுப்பை இந்நூல் கொண்டுள்ளதை, "தொல் சமயத்தின் முக்கிய கூறுகளை உள்வாங்கியுள்ள நாட்டார் சமய நெறியானது ஒரு சமய நெறி மட்டுமல்ல. தமிழக அடித்தள மக்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றுக்கான கணக்கற்ற தரவுகளைத் தம்முள் வைத்துள்ளது. இவற்றை நம் கல்விப்புலம் சார்ந்த வரலாற்று வரைவு புறக்கணித்துள்ளது. இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட தரவுகளின் துணையுடன்தான் தமிழகத்தின் உண்மையான சமூகப் பண்பாட்டு வரலாற்றை எழுத முடியும்" என்ற பேராசிரியரின் வார்த்தைகளாலே உணரலாம். "தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு வரலாற்றைக் கண்டடைவதற்கு பேராசிரியரின் இந்நூல் முதன்மைத் தரவாக அமையும். பண்பாடுசார் ஆய்வுச் சமூகத்துக்குப் புதிய கண்களைத் திறந்து விட்டுள்ளார். பல திறப்புகளை திறனுடை ஆய்வாளர்கள் பெற்றுக்கொள்வதற்கான மடைகளையும் திறந்து காட்டியிருக்கிறார்" என்று முன்னுரையில் பேராசிரியர் ச. பிலவேந்திரன் குறிப்பிட்டிருப்பதும் மெய்ப்படும். தமிழ் இனத்தின் தொன்மையான அடையாளத் தடங்களை எடுத்துக்காட்டியிருக்கும் இந்நூல் தமிழினம் கொண்டாடிக் களிக்க வேண்டியது கடமை. இந்நூலை வாசித்து களித்தும் விமர்சித்தும் பரவலாக்கம் செய்வோம்.

●



# உ.வே.சாமிநாதையர் பார்வையில் தமிழ் நூல்களும் அறிஞர்கள் பார்வையில் உ.வே.சாமிநாதையரும்

முனைவர் இரா. வெங்கடேசன்

தமிழறிஞர்களாகச் சிறந்து விளங்கிய நால்வர் சாமிநாதையர் பிறந்த அதே ஆண்டில் (1855) பிறந்திருக்கின்றனர் என்பதை வரலாற்றில் பார்க்கமுடிகிறது. வெவ்வேறு நிலப்பகுதியில் பிறந்த அவர்கள் பல்வேறு காலச்சூழல்களில் சாமிநாதையரோடு நெருங்கிப் பழகி வாழ்ந்திருக்கிறார்கள் என்பது சிறப்புக்குரியதாகும்.

ஒருவர், கேரள மாநிலத்தின் ஆலப்புழா எனும் ஊரில் பிறந்த மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை (ஏப்ரல் 4, 1855 - ஏப்ரல் 26, 1897). இவர், உ.வே.சாமிநாதையரின் நெருங்கிய அன்பர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர். தாம் எழுதிய மனோன்மணீயம் நாடகத்தைச் சாமிநாதையரிடம் அளித்துப் பயன்மிக்க கருத்துக்களைப் பெற்றுப் பெருமைபெற்று விளங்கியவர். இவர் 42ஆவது வயதில் தம் உலக வாழ்வை நீத்தது வரலாற்றுச் சோகமான ஒரு நிகழ்வாகும்.

இரண்டாமவர், சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் பிறந்த வீர. லெ. சிந்நய செட்டியார் (1855 - 1900). பாண்டித்துரைத் தேவருக்கு நெருங்கிய நண்பரான இவர், ஆசுகவி என தம் சமகாலப் புலவர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர். இவரின் ஆசிரியர் வன்றொண்டர் நாராயணன் செட்டியார். இவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர். சிந்நய செட்டியார் 1897ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கும்பகோணம் மகாமகத்திற்குப் பாண்டித்துரைத் தேவருடன் வந்திருந்தபோது, அந்த மகாமகத்துக்குத் தேசிகருடன் வந்திருந்த சாமிநாதையரைச் சந்தித்திருக்கிறார் என்பது வரலாற்றுச் செய்தியாகும். இவரும் தமது

*45ஆம் வயதில் இயற்கை எய்தினார் என்பது நினைவுகொள்ளத் தக்கது.*

மூன்றாமவர், இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவராயினும், சென்னை கோமளலீசுவரன் பேட்டையில் பிறந்த வி. கனகசபை பிள்ளை (மே 25, 1855 - பிப்ரவரி 21, 1906). தம்மிடமிருந்த பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம் உள்ளிட்ட பழந்தமிழ் நூற்சுவடிகளைச் சாமிநாதையருக்குக் கொடுத்து உதவியவர். The Tamils 1800 Years Ago (ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்) என்ற நூலை எழுதித் தமிழின் பெருமையை உலகம் அறியச் செய்த இவரும் தமது 50ஆவது அகவையில் இயற்கை எய்தியிருக்கிறார்.

நான்காமவர், சென்னையில் பிறந்த ஆ. சிங்காரவேலு முதலியார் (1855 - நவம்பர், 1932). தமிழின் முதல் கலைக்களஞ்சியம் என்ற பெருமை பெற்ற 'அபிதான சிந்தாமணி'யைத் தமிழுக்கு அளித்தவர். 42 ஆண்டுகால பேருழைப்பின் விளைவாக வெளிவந்த அபிதான சிந்தாமணி ஆக்கத்திற்குச் சாமிநாதையர் பதிப்பித்து வெளியிட்ட சங்க நூல்கள் பெரிதும் உதவியதாகச் சிங்காரவேலு முதலியாரே குறிப்பிட்டிருப்பார். இவர் தமது 76ஆம் வயதில் இயற்கை எய்தியிருக்கிறார்.

இந்த நால்வரும் உ.வே. சாமிநாதையர் பிறந்த அதே ஆண்டில் பிறந்து அவருக்கு முன்னரே மறைந்து போயிருக்கிறார்கள். சாமிநாதையருக்குக் காலம் அப்படியான ஊழ்வினையைத் தந்திருக்கவில்லை. 87ஆம் வயதுவரை நிறைவாழ்வு வாழ்ந்து மறைந்திருக்கிறார். இந்தப் பெருமகனார் தமிழ் நூல்களை நோக்கிய பார்வைகளும் இவரைத் தமிழ்ப் பெரியார்கள் நோக்கிய பார்வைகள் சிலவும் இந்த நினைவுப் பகுதியில் திரட்டித் தரப்படுகின்றன.

## உ.வே.சா. பார்வையில் தமிழ் நூல்கள்

### சிந்தாமணியின் சிறப்பு

*சிந்தாமணியே என்னுடைய தமிழ்நூற் பதிப்பில் முதல் அரும்பு. வழக்கொழிந்த பழம் தமிழ் நூல்களை அறிவதற்கும் ஆராய்வதற்கும் அச்சிடுவதற்கும் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி ஊக்கமூட்டியவை அந்த நூலும் அதன் உரையுமே. தமிழ்த் தொண்டினால் இன்பம் உண்டென்னும் உண்மையை எனக்கு முதன் முதலில் வெளிப்படுத்தியது அந்த நூலே. முதல் முயற்சியிலே அடையும் சிரமங்கள் அளவிறந்தன. சிந்தாமணியைப் போன்ற நூல்கள் தமிழ்நாட்டில் வழங்காத அக்காலத்தில் அதன் நடையே ஒரு தனிப் பாஷைபோல இருந்தது. அதன் உரையோ பின்னும் புதியதாகவே தோன்றியது. அதில் உள்ள விஷயங்களோ ஜைன சமயத்தைச் சார்ந்தவை. சைவம், அத்வைதம், வைணவம் என்னும் மூன்று சமயக் கருத்துக்களே தமிழ்நாட்டில் அதிகமாக வழங்கின. ஜைன சமயத்தைப் பற்றி அறிந்தவர்களையோ, கூறும் தமிழ் நூல்களையோ காண்பது அரிதாக இருந்தது. அன்றியும் திருவாவடுதுறையாதீனமாகிய சைவ மடத்தில் படித்த எனக்குப் புறச்சமயமாகிய ஜைனத்தைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு ஏது?*

*[பவ்ய ஜீவன் (கட்டுரை), கலைமகள், தொகுதி 14, பகுதி 79 - 84, 1938; நல்லுரைக் கோவை, பாகம் - 4, 1939]*

### சுவடிகளின் நிலை

*உரையில்லாத மூலங்கள் எழுத்துஞ்சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி, இவற்றுள், சில பாடல்களின்பின் திணையெழுதப்படாமலும் சிலவற்றின்பின் துறையெழுதப்படாமலும் சிலவற்றின்பின் இரண்டுமெழுதப்படாமலும் சிலவற்றின் பின் பாடினோர் பெயர் சிதைந்தும் சிலவற்றின்பின் பாடப்பட்டோர் பெயர் சிதைந்தும் சிலவற்றின்பின் இருவர்பெயருமே சிதைந்தும் சில பாடல்கள் இரண்டிடத்து எழுதப்பட்டு இரண்டெண்களையேற்றும் வேறுவேறிடத்தில் இருத்தற்குரிய இரண்டுபாடல்கள் ஒருங்கெழுதப்பட்டு ஓரெண்ணையேற்றும் சில முதற்பாகங்குறைந்தும் சில இடைப் பாகங்குறைந்தும் சில கடைப்பாகங்குறைந்தும் சில முற்றுமின்றியும் ஒரு பாடலின் அடிகளுள் ஒன்றும் பலவும் வேறுபாடல்களின் அடிகளோடு கலந்தும் ஓரடியே ஒருபாட்டுட் சிலவிடத்து வரப்பெற்றும் பொருளுண்மைகாணாத வண்ணம் இன்னும் பலவகைப்படமாறியும் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தன. இவற்றைப் பரிசோதித்துவருகையில், இந்நூலிலிருந்து வேறு நூல்களினுடைய பழையவுரைகளின் இடை-யிடையே உரையாசிரியர்களால் பூர்த்தியாகவும் சிறிதுசிறிதாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்த உதாரணங்கள், சிற்சில பாடல்களிலுள்ள வழுக்களை நீக்கிச் செவ்வைசெய்துகொண்டு பொருளுண்மை காணுதற்கும், சிற்சில பாடல்களிற் குறைந்த பாகங்களை நிரப்பிக்கொள்ளுதற்கும், பிறழ்ந்து கிடக்கும் சில பாடல்களை ஒழுங்குபடுத்தி வரையறை செய்துகொள்ளுதற்கும் பெருந்துணையாகவிருந்தன.*

*[புறநானூறு, முதல் பதிப்பின் முகவுரை, 1894]*

### சுவடிகளின் இயல்பு

*பழைய பிரதிகளுட்பல, இனி வழுப்படவேண்டுமென்பதற்கிடமில்லாமற் பிழைபொதிந்து, அநேகவருடங்களாகத் தம்மைப்படிப்போரும் படிப்பிப்போருமில்லையென்பதையும் நூல்களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே விரதமாகக் கொண்ட சில புண்ணியசாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. ஒன்றோடொன்று ஒவ்வாது பிறழ்ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருட்டொடர்பின்றிக்கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும்.*

*[சிலப்பதிகாரம், முதல் பதிப்பின் முகவுரை, 1892]*

**மிதிலைப்பட்டி**

மிதிலைப்பட்டி என்னும் ஊரை நான் எந்தக் காலத்தும் மறக்கமுடியாது. மணிமேகலையின் முகவுரையில் '...இவற்றுள் மிகப் பழமையானதும் பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும் மற்றப் பிரதிகளிற் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் போன பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும் கோப்புச் சிதைந்து அழகுகெட்டு மாசு பொதிந்து கிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவள் அணிந்து கொள்ளும் வண்ணம் செப்பஞ் செய்து கொடுத்ததும் மிதிலைப்பட்டிப் பிரதியே' என்று எழுதியுள்ளேன். தமிழ்நாட்டில் எவ்வளவோ புண்ணிய ஸ்தலங்கள் இருக்கின்றன; சிவ ஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் சுப்பிரமணிய ஸ்தலங்களும் பல உள்ளன. அவற்றைப் போல் தமிழ்த் தெய்வம் கோயில் கொண்டுள்ள ஸ்தலங்களுள் ஒன்றாகவே மிதிலைப்பட்டியை நான் கருதியிருக்கிறேன்.

*[பரம்பரைக்குணம் (கட்டுரை), ஆனந்தவிகடன், தீபாவளி மலர், 1934; நான் கண்டதும் கேட்டதும், 1936]*

**கலாசாலை**

நான் காணும் கனவுகளில், கலாசாலையிற் பல மாணாக்கர்களிடையே இருந்து அவர்களுடைய உத்ஸாகமான செயல்களையும் அவர்கள் பேசும் பேச்சுக்களையும் அறிந்து மகிழுங் காட்சிகளே பல. தம்முடைய குடும்பத்தையே மறந்துவிட்டுக் கல்வி கற்றல் ஒன்றையே நாடிப் பறவைகளைப்போலக் கவலையற்றுப் படித்துவந்த மாணாக்கர்களுடைய கூட்டத்திடையே பழகுவதைப் போன்ற இன்பத்தை வேறு எங்கும் நான் அனுபவித்ததில்லை. அவர்களுடைய அன்பை நினைத்தாலே என் உள்ளத்தில் ஒரு புதிய ஊக்கம் உண்டாகும். அந்தக் காலம் போய்விட்டதனாலும் அக்காலத்து நிகழ்ச்சிகளின் நினைவு இன்னும் என் மனத்தைவிட்டு நீங்கவில்லை. அதனால், நான் நினைக்கும்போதெல்லாம் உள்ளத்தால் மீண்டும் கலாசாலையிலிருந்து பாடஞ் சொல்லுகிறேன்; இன்புறுகிறேன்.

*[மாணாக்கர் விளையாட்டுகள் (கட்டுரை), கலைமகள், தொகுதி 10, பகுதி 55 - 60, 1936, தொகுதி 23, பகுதி 137, 1943; நல்லுரைக்கோவை, பாகம் - 3, 1938]*

**சுவடிப் பற்று**

தமிழ் ஆராய்ச்சியில் நான் ஈடுபட்ட பிறகு தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடுவது என் வாழ்க்கையில் ஒரு முக்கியமான வேலையாகிவிட்டது. அச்சிட்ட புத்தகமோ, அச்சிடாததோ எதுவானாலும் சுவடியின் உருவத்திலே காணும்பொழுது ஏதோ ஒரு தெய்வத்தின் உருவத்தைக் காண்பதுபோலவே நான் எண்ணுவது வழக்கம். சுவடிகளைத் தேடி அவை இருக்குமிடம் சென்று மூலை முடுக்குகளிற் கிடக்கும் அவற்றைத் தொகுத்து ஆராய்வதில் என் உள்ளம் ஒரு தனி இன்பத்தை அடையும். என் உடலில் முதுமைப் பருவத்தின் தளர்ச்சி ஏறிக்கொண்டே வந்தாலும் என் உள்ளத்தில் மட்டும் ஏட்டுச் சுவடிகளிலுள்ள பற்று இறங்கவே இல்லை.

*[மாணாக்கர் விளையாட்டுகள் (கட்டுரை) கலைமகள், தொகுதி 10, பகுதி 55 - 60, 1936, தொகுதி 23, பகுதி 137, 1943; நல்லுரைக்கோவை, பாகம் - 3, 1938]*

**சமயங்கடந்த கலைமகள்**

கல்வி கற்பார் யாவரும் கலைமகளின் திருவருளைப் பெற வேண்டும். நம் நாட்டிற் சிறந்த கவிஞர்களாகப் போற்றப்பெறும் காளிதாஸர், கம்பர், ஒட்டக்கூத்தர், குமரகுருபரர் முதலியோர் கலைமகளுடைய திருவருள் நோக்கத்தைப் பெற்றவர்களே. கம்பர் சரசுவதியந்தாதி பாடி-யிருக்கிறார். ஒட்டக்கூத்தர் கூத்தனூரென்னும் ஊரில் திருக்கோயில் கொண்டுள்ள கலைமகளை வழிபட்டுப் புலமை வாய்ந்தனர். குமரகுருபரரோ சகலகலாவல்லிமாலை பாடி ஹிந்துஸ்தானி பாஷையை அறிந்துகொண்டார். பரம சைவராகிய அவர் மனங்கரைந்து கலைமகளைத் துதித்துள்ளார்; 'கண்கண்ட தெய்வம்' என்று பாராட்டுகின்றார். அதனால் கலைமகள் சமயங் கடந்த தெய்வமென்று அறிகின்றோம். பௌத்தர்களும் ஜைனர்களுங்கூடக் கலைமகளை வணங்கி வந்தனர்.

*[மகளிர் கல்வியும் கலைமகள் பெருமையும் (கட்டுரை), நினைவு மஞ்சரி, பாகம் - 2, 1942]*

**தமிழ்க் கோயில்**

திருநெல்வேலி மேலை வீதியில் உள்ள கவிராஜ ஈசுவர மூர்த்திப் பிள்ளை வீட்டில் புத்தக அறை இருந்தது. அதுதான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள். பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது. 'தமிழ்ச் சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ?' என்று விம்மிதமடைந்தேன். ஏட்டுச் சுவடிகளை அடுக்கடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடிகளைக் கட்டி வைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை; பூச்சி இல்லை; ஏடுகள் ஒன்றோடொன்று கலக்கவில்லை. தமிழ்த் தெய்வத்தின் கோயிலென்று சொல்லும்படி இருந்தது அவ்விடம்.

*[என் சரித்திரம், 1950]*

**பஞ்ச மந்திரம்**

சீவகசிந்தாமணி உரையில் ஓரிடத்திலே, 'திருத்தங்குமார்பன், புனலாட்டிலே உயிர் போகின்ற ஞமலிக்குத் தானும் வருந்திப் பஞ்சாட்சரமாகிய மந்திரத்தைக் கொடுத்தபடியும்' என்று இருந்தது. 'இது ஜைன நூலாயிற்றே; பஞ்சாட்சர மந்திரம் இங்கே எப்படிப் புகுந்துகொண்டது?' என்ற சந்தேகம்

வந்தது. மூலத்தில் "ஏமலிக் கமிர் தீர்ந்தவாறும்" என்று இருக்கிறது. 'அமிர்து' என்பதற்கு, 'பஞ் சாட்சரமாகிய மந்திரம்' என்பது உரையாக இருந்தது. 'மந்திரத்தை யென்றிருந்திருக்க வேண்டும்: யாரோ பிரதியைப் பார்த்து எழுதின சைவர் பஞ்சாட்சரம் என்று சேர்த்தெழுதி விட்டார்' என்று முதலில் கருதினேன். பின்னாலே வாசித்து வருகையில் "ஐம்பத வமிர்த முண்டால்" (946) என்று வந்தது. வேறிடங்களில் உள்ள உரையால் பஞ்ச நமஸ்கார மந்திரமென்று தெரிந்தது. ஜைன நண்பர்களை விசாரித்தேன். அவர்கள் மிகவும் எளிதில், "அருகர், ஸித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், ஸாதுக்களென்னும் பஞ்ச பரமேஷ்டிகளை வணங்குதற்குரிய ஐந்து மந்திரங்களைப் பஞ்ச நமஸ்காரமென்று சொல்வது ஸம்பிரதாயம்" என்று தெளிவுறுத்தினார்கள்.

*[என் சரித்திரம், 1950]*

**புலவர்கள்**

தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள் தமிழகத்தில் ஒரு வரையறையின்றி வழங்குகின்றன. கர்ணபரம்பரைச் செய்திகள் முழுவதையும் நம்ப முடியவில்லை. எந்தப் புலவர்பாலும் தெய்வீக அம்சத்தை ஏற்றிப் புகழும் நம் நாட்டினரில் ஒரு சாரார் புலவர்களைப் பற்றிக் கூறும் செய்திகளிற் சில நடந்தனவாகத் தோன்றவில்லை. அங்ஙனம் கூறுபவர்கள் அப்புலவர்களுக்கு மிக்க பெருமையை உண்டாக்க வேண்டுமென்பதொன்றனை மட்டும் கருதுகிறார்களே யல்லாமல் நடந்த விஷயங்களை நடந்தபடியே சொல்லுவதை விரும்புவதில்லை. கம்பர் முதலிய சில புலவர்களை வரகவிகளென்றும் கல்லாமலே பாடிவிட்டனரென்றும் ஸரஸ்வதிதேவியின் திருவருளால் அங்ஙனமாயினரென்றும் கூறுவதுதான் பெருமையெனவும், அவர்கள் பழம் பிறப்பிற் செய்த புண்ணியத்தாலும் திருவருளாலும் கிடைத்த நல்லறிவைத் துணைக்கொண்டு பல நூல்களைப் பயின்று செயற்கையறிவும் வாய்க்கப் பெற்று நூல் முதலியன இயற்றினார்களென்பது சிறுமையெனவும் சிலர் எண்ணுகின்றார்கள். மிகவும் புகழ்பெற்ற ஒரு புலவர் செய்தனவாகத் தெரிவித்தால் அவற்றிற்கு மதிப்புண்டாகுமென்று தாமாகவே கருதி அவருடைய தலையில் பிழை மலிந்த நூல்களையும் உரைகளையும் தனிப்பாடல்களையும் ஏற்றிவிடுகின்றனர்.

*[மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதற்பாகம், முன்னுரை, 1938]*

**பெண்கள்**

பெண்பாலாரைப் பற்றித் தமிழ் நூல்களில் உள்ள செய்திகளெல்லாவற்றையும் தொகுத்து வகைப்படுத்தினால் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் தம் ஆற்றலை வெளிப்படுத்திச் சிறப்புற்ற வரலாறுகள் பல தெரியவரும். அவர்களது பெருமை ஆடவர்களது பெருமையோடு சேர்ந்தே காணப்படுகின்றது. சங்கீதத்தில் சுருதி எத்தகையதோ அத்தகையதே வாழ்க்கையிற் பெண்களுடைய நிலையும். சுருதியில்லாமல் சங்கீதம் நடைபெறாது. ஆனால் சங்கீதத்தில் வாத்தியகோஷங்களும் வாய்ப்பாட்டும் வெளிப்படையாகத் தோன்றி எல்லோராலும் போற்றப்படுகின்றன. சுருதியோ அவ்வளவு பெருமைக்கும் ஆதாரமாகி நின்றும் புலப்படாமல் இருக்கிறது. பெண்களும் எல்லாவற்றையும் கடமையாகச் செய்து பிறர் புகழுக்கு அஸ்திவாரமாக இருந்து அடங்கிச் சுருதியைப்போலக் கலந்து நிற்கின்றனர்.

*[தமிழ் நாட்டுப் பெண்பாலார் (கட்டுரை) கலைமகள், தொகுதி 11, பகுதி 61 - 66, 1937, நல்லுரைக்கோவை, பாகம் - 2, 1937]*

**சிலப்பதிகாரம்**

தமிழ்மகள் களிநடம் புரிந்தகாலத்தில் அவளுடைய சிலம்பொலி எழுந்து தமிழரின் உள்ளத்தைக் கவர்ந்தது. இன்றைக்கு 1800 வருஷங்களுக்கு முன் இளங்கோவடிகளென்னும் புலவர் பிரான் இயற்றிய சிலப்பதிகாரமென்னும் நூல் தமிழ் மக்களின் சிலம்பாகவே கருதத்தகும். இவ்வளவு நாட்களாகியும் அக்காவியம் இன்றும் புதிய சுவையோடு விளங்குகின்றது. தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்குச் சிலப்பதிகாரம் செய்யும் உதவி மிகவும் சிறந்தது. கடைச் சங்க காலத்தை அறிவதற்கு முக்கிய காரணமாக இருப்பது அதுவே. இறந்துபட்ட இசைத்தமிழ் நாடகத் தமிழின் சில பகுதிகளையுடையதாகிப் பழந்தமிழ் வழக்கை வெளிப்படுத்திக் கொண்டு விளங்கும் அந்நூலுக்கு இணையாக வேறொன்றும் இல்லை. அதை நான் முதலில் ஏட்டுச்சுவடியிலே படித்தபோது பல அற்புதங்கள் நிறைந்த புதிய உலகிற்குச் சென்றதுபோல தோன்றியது. மூலத்தைக் காட்டிலும் அடியார்க்கு நல்லார் உரையினால் அறிந்துகொள்ளும் செய்திகள் அளவிறந்தன. இசைத்தமிழ் நாடகத் தமிழ்களைப் பற்றி நாம் இக்காலத்தில் அறிந்துகொள்ளும் செய்திகளிற் பல அடியார்க்கு நல்லார் இட்ட பிச்சையென்றே சொல்ல வேண்டும். எத்தனை நூல்கள்! எத்தனை கலைகள்! எத்தனை மேற்கோள்கள்! சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதின அடியார்க்கு நல்லார் பிற்காலத்தவர். அவர் உரைக்கு முன்பு ஓர் உரை அதற்கு உண்டு; அவ்வுரை அரும்பதவுரை எனப்படும். அடியார்க்கு நல்லார் உரையெழுதுவதற்கு அவ்வரும்பதவுரை பெரிதும் துணை செய்தது. அவ்வாறெனின் அரும்பதவுரையின் சிறப்பை எப்படி நான் தெரிவிக்க முடியும்? ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டம் அரும்பதவுரையுள்ள ஏட்டுப்பிரதி ஒன்றே எனக்குக் கிடைத்தது. பிற்காலத்தில் தமிழ்போன போக்கையும், அடைந்த அலங்கோலத்தையும் அப்பிரதியும் நிதர்சனமாகக் காட்டியது. பிழைகள் மலிந்தும் முன்பின் மாறியும் இடையிடையே விட்டும் அப்பிரதியில் விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன.

அதனை முற்றும் படித்தறிவதே கஷ்டமாக இருந்தது. உரைப்பகுதிகள் வெவ்வேறு இடங்களில் மாறி மாறிக் கலந்திருந்தமையின் 'மூலத்தில் எந்தப் பகுதிக்கு எது பொருள்?' என்று தேடிப் பொருத்திப் பார்ப்பதற்குள் சிலப்பதிகாரம் முழுவதற்குமே உரையெழுதிவிடலாமென்று தோன்றியது.

*[படக்காட்சி (கட்டுரை), கலைமகள், தொகுதி 13, பகுதி 73 - 78, 1938; நல்லுரைக்கோவை, பாகம் - 4, 1939]*

**அறிஞர்கள் பார்வையில் உ.வே. சாமிநாதையர்**

இந்தப் பத்திரிகையி லெழுதப்பட்டிருக்கிற சாமிநாதையர் நமது ஆதீன வித்துவான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் ஆறு வருஷகாலம் இலக்கண இலக்கியங்கள் நன்றாய் வாசித்ததுமன்றி நம்மிடத்திலும் நான்கு வருஷ காலமாக வாசித்துக் கொண்டிருக்கிறார். இலக்கண இலக்கியங்களைத் தெளிவாய்ப் போதிக்கிற விஷயத்தில் நல்ல சமர்த்தர்; நல்ல நடையுள்ளவர்.

*[1880, கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியர் பணிக்குப் பரிந்துரைத்துத் திருவாவடுதுறை ஆதினம் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் எழுதியது]*

"ஸ்ரீமான் ஸ்வாமிநாதையர் தமது பாஷாபிமானம், தேசாபிமானம் என்னும் பெரிய ஆயுதங்களைக் கொண்டே அசௌகர்யங்களை வென்று உயர்வுற்றிருக்கிறார் என்பதில் ஐயமில்லை. இவருடைய அருந்திறமையை நன்கு மதித்துக் கவர்ன்மெண்டார் இவருக்குப் புதுவருஷப் பட்டமாக மகாமகோபாத்தியாயர் என்ற உயர் பட்டமளித்திருப்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். மகாமகோபாத்தியாய ஸ்வாமிநாதையர் அவர்கள் இன்னும் நெடுங்காலம் இருந்து, அவருக்கு நெடுங்காலம் முன்னரே கிடைத்திருக்க வேண்டியதாகிய மதிப்பு முழுதையும் அடைந்தவராகி, இத்தமிழுலகத்தாருக்குப் புதிய புதிய விருந்துகள் ஊட்டிக் கொண்டிருப்பாரென்று மனப்பூர்த்தியாக விஸ்வசிக்கின்றோம்"

*[1906, ஜனவரி, 3, மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றதற்குச் சுதேசமித்திரன் இதழின் பாராட்டு]*

"'மகாமகோபாத்தியாயப் பட்டமென்பது வடமொழியாளர்க்கே உரியது, தமிழ்ப் பண்டிதர் முதலியோர்க்கு உரியதன்று' என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அப்பெயர் பெரும் பேராசிரியரென்று பொருள்படுவதேயன்றி, அதன் பொருளில் வடமொழி வல்லவர் என்பது விளங்காமையால், அந்த ஆக்ஷேபம் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. அந்தப் பெயர் சம்ஸ்கிருத பதமாயிருப்பது மாத்திரங் கொண்டு, அது அவர்களுக்கே உரியதென்று ஆகாது. தமிழ் முதலிய தேசபாஷை நூல்களுக்குச் சிந்தாமணி, மணிமேகலை முதலாகவும், அந்நூல்களின் உட்பிரிவுகளுக்குக் காண்டம், படலம், அத்தியாயம், அதிகாரம், இலம்பகம் முதலாகவும் வடசொற்களாற் பெயரிடும் வழக்கம் தொன்றுதொட்டு உள்ளதனால், அவ்வழக்கின்படியே இவ் வடமொழிப் பெயரும் தென்மொழியாளர்க்கும் உரியதாம். ஆனால் 'இதுவரை வடநூலார்க்கே வழங்கப்பட்டதேயன்றித் தமிழர்க்கு வழங்கியதில்லையே?' என்றால்; ராமாயணம், பாரதம், பாகவதம், ஸ்காந்தம் முதலியன ஆதியில் வடமொழியில் உண்டாகிப் பிற்காலத்தில் தமிழிலும் ஏற்பட்டவையாதலால், அந்த நியாயத்தின்படியே இப்பட்டமும் முதலில் வட மொழியில் வழங்கிப் பின்பு தென்மொழியில் வழங்குதல் தகுதியேயாம். இதுவன்றி வேதம், வேதத்திற்கு அங்கமும் உபாங்கமுமான தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை, தர்க்க சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்கள், வேதாந்தம் இவை தமிழில் இல்லை என்று கொண்டு, இவைகளெல்லாம் வல்லவர்க்கு, வழக்கமாய்க் கொடுக்கப்பட்டுவருகிற இப்பட்டம் தமிழ் வித்துவானுக்கு உரியதன்று என்று வேறோர் ஆக்ஷேபம் உண்டாகலாம். இவையெல்லாம் வட மொழியில் போலவே தென்மொழியிலும் உள்ளனவாதலால் இவை வல்லார்க்கும் அப்பட்டம் சிறக்கு மென்பதே அதற்குத் தக்க சமாதானம். வடமொழியில் அதர்வண வேதம் நீங்கலாக மற்றை மூன்று வேதங்களும் 'த்ரயீ' என்று சிறப்பித்துப் பாராட்டப்படுதல் போலவே தமிழிலும் திருக்குறள், தேவார திருவாசகங்கள், திவ்வியப் பிரபந்தங்கள் இம்மூன்றும் வேதமென்று கொண்டாடப்படுகின்றன. ஸம்ஸ்கிருதத்தில் ப்ராசீனமாகவும், நவீனமாகவும் வழங்குகிற தர்க்கத்திலும் மிகவும் அதிகமான தர்க்க சாஸ்திரம் தமிழில் வழங்கியதென்பது ஸ்ரீமத் சாமிநாதையரவர்கள் தாம் இயற்றிய அரும் பதவுரையுடன் அச்சிட்டிருக்கிற 'மணிமேகலை' எனும் மகா காவியத்தில் 'தவத்திறம் பூண்டு தருமங் கேட்டகாதை' ஒன்றினாலேயே விளங்கும். வடமொழி வியாகரணத்தினும் தமிழ் வியாகரணம் பரந்ததும், அருமையானதும், சிரமசாத்தியமுமாகு மென்பது பாணிநீயம் முதலிய ஸம்ஸ்கிருத வியாகரணங்களையும், தொல்காப்பியம் முதலிய தமிழிலக்கணங்களையும் ஒப்புநோக்குவார்க்குத் தானே தெரியலாம். இப்படியே தரும நூல்களும், வேதாந்த நூல்களும் தமிழில் மிகப் பலவென்பது இவற்றைப் பயில்வார்க்கு எளிதில் விளங்கும். இதிகாச புராணங்களும் அப்படியே."

*[மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றதற்கு நடந்த பாராட்டு விழாவில், வை. மு. சடகோபராமாநுஜாசாரியார் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம், சுதேசமித்திரன், பிப்ரவரி 13, 1906]*

"செம்பரிதி யொளிபெற்றான் பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்த தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்
றெவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல்
பேருவகை படைக்கீன் றீரே?"
"அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்
இன்றெம்மை யாள்வோ ரேனும்
பன்னியசீர் மஹாமஹோ பாத்தியா
யப்பதவி பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நா ளிருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ?"
"நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
யின்பவகை நித்தந் துய்க்கும் கதியறியோம்
என்றுமனம் வருந்தற்க;
குடந்தைநகர்க் கலைஞர் கோவே
பொதியமலை பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்,
இறப்பின்றித் துலங்கு வாயே!"

*[மகாமகோபாத்தியாயர் பட்டம் பெற்றதற்காக, மாநிலக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம் நடத்திய பாராட்டு விழாவில், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதி வாசித்த கவிதை, மார்ச்சு, 17, 1906]*

"எந்தப் புஸ்தகத்தை எப்பொழுது படித்தாலும் பென்ஸிலும் குறிப்புப் புஸ்தகமும் இல்லாமல் படிப்பது அவர்கள் வழக்கமன்று. ஒரு பாட்டைப் படிக்கும்போது அதற்குள் ஆழ்ந்து முழுகி அதிலுள்ள விஷயங்களைத் தனியே பார்த்துக் குறிப்பதும், ஒரே மாதிரிக் கருத்துப் பிற நூல்களில் வந்திருந்தால் அதைக் குறித்துக்கொள்வதும், சந்தேகமாக இருந்தால் அதைத் தனியே குறித்துக் கொள்வதும் அவர்கள் வழக்கம். சந்தேகங்களைப் பின்னும் பின்னும் ஆராய்ந்து யோசித்து முடிவு செய்வார்கள். இல்லையானால் யாரேனும் வந்தால் கேட்பார்கள். உடனிருக்கும் எங்களுக்குச் சில சமயங்களில் மனத்துக்குள் கோபங்கூட உண்டாகும். 'இவருக்கு என்ன தெரியும்? இவரிடம் போய்ச் சந்தேகம் கேட்கிறார்களே!' என்று எரிச்சல் எரிச்சலாக வரும். ஐயரவர்களோ மிகவும் விநயமாக வந்தவருடைய மனசுக்கு உவப்பான விஷயங்களைப் பேசிச் சந்தேகத்தைக் கேட்பார்கள். வந்தவருக்கு அந்த விஷயத்தின் வாசனைகூடத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல் எதையாவது சொல்வார். ஐயரவர்கள் அதைக் குறித்துக் கொள்வார்கள். அந்தப் பரமகுரு போனவுடன் நாங்கள் 'இவரிடம் சந்தேகம் கேட்பதில் என்ன லாபம் உண்டாயிற்று?' என்றால், 'லாபம்; உடனே தெரியாது, லாபம் இல்லாவிட்டால் என்ன? நமக்கு கஷ்டம் ஒன்றுமில்லையே' என்பார்கள்."

*[வித்வான் கி. வா. ஜகந்நாதையர், கலைமகள், 1942, ஜூன்]*

தாங்கள் அனுப்பிய புறநானூற்றை மூன்றாம் தடவையாக இப்போது வாசித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றில் உள்ள பல அரிய பகுதிகளை ஏற்கனவே இங்கிலீஷில் மொழி பெயர்த்துவிட்டேன். மணிமேகலையையும் முழுதும் ஊன்றிப்படித்து மொழி பெயர்த்தும் ஆயிற்று. தங்களுடன் பல மணிநேரம் உட்கார்ந்து நேரில் தமிழைப் பற்றிப் பேச விரும்புகிறேன். தங்களைத்தான் நான் என்றும் என் தமிழ்க் குருவாகக் கொண்டுள்ளேன்"

*[9 - 10 - 1906, ஜி. யு. போப், உ.வே.சா. விற்கு எழுதிய கடிதம், என் ஆசிரியர்பிரான், கி. வா. ஜா. 1983]*

"யான் இம் மணிமேகலைப் பதிப்பைப்பற்றி முகமனாவொன்றும் எழுதுகின்றிலேன். மிகவும் அற்புதமாயிருக்கின்றது. யான் விரும்பியாங்கே குறிப்புரையும் பிறரால் இது வேண்டும் இது வேண்டாவென்று சொல்லப்படாதவாறு செவ்வனே பொறித்திருக்கும் பெற்றிமையை யுன்னுந்தோறு மென்னுள்ளங் களிபேருவகை பூக்கின்றது. இப்போழ்தன்றே யெந்தஞ் சாமிநாத வள்ளலைக்குறித்துக் குடையும் துடியும் யாமும் எம்மனோரும் ஆடிய புகுந்தாம். இன்னும் எம்மூரினராய் நின்று நிலவிய நச்சினார்க்கினிய நற்றமிழ்ப்பெருந்தகை போன்று பன்னூற் பொருளையும் பகலவன் மானப்பகருமாறு பைந்தமிழமிழ்தம் பரிவினிற்பருகிய பண்ணவர் பெருமான் எந்தம் மீனாட்சிசுந்தர விமலன் நுந்தமக்கு வாணாள் நீட்டிக்குமாறு அருள்புரிவானாக"

*[1898, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி, மணிமேகலைக்கு இவர் எழுதிய உரையின் சிறப்பைப் பாராட்டி எழுதியது, என் சரித்திரம், 1950]*

**மகாகவி பார்வையில்**

பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றோரெல்லாம் சுபாஷாபிமானம் என்பது மிகவும் குன்றியிருப்பது அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும்பொழுது நமக்கு வருத்தம் உண்டாகிறது. இதன் சம்பந்தமாகச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மகாவித்துவான்

ஸ்வாமிநாதையர் சொல்லிய வார்த்தையொன்று நமது நெஞ்சை விட்டு ஒருபோதும் அகலமாட்டாது. மேற்படி காலேஜ் தமிழ்ச்சங்கத்தில் ஒரு மீட்டிங் நடந்தது. தமிழ்ப் பாஷையின் அருமையைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது ஸ்வாமிநாத ஐயரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார்: "ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்களில் எத்தனையோ அருமையான கருத்துக்கள் ததும்பிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பாஷை எனக்குத் தெரியாது. அதனால் அவ்விஷயத்தில் ஒருவிதமான அபிப்ராயமும் என்னால் கொடுக்க முடியாது என்றபோதிலும் மேற்கண்டவாறு சொல்வோர் தமிழ்ப் பாஷையிலே அவ்விதமான அருமையான விஷயங்கள் கிடையாதென்று சொல்லும்பொழுது உடன் எனக்கு வருத்தம் உண்டாகிறது. இவ்வகுப்பினர்களுடன் நான் எத்தனையோ முறை சம்பாஷணை செய்திருக்கிறேன். அந்தச் சமயங்களில் நான் இவர்களது தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக்கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்கள் என்று எனக்குப் புலப்படவில்லை. பழங்காலத்து தமிழ் நூல்களில் பயிற்சி இல்லாத இவர்கள் அவற்றைப் பற்றி இழிவான அபிப்ராயம் கொடுப்பதுதான் வெறுக்கத்தக்கதாக இருக்கின்றது' என்று அப்பண்டிதர் முறையிட்டார். வாஸ்தவம்தானே? ஆனையையே பார்த்திராத குருடனா அதன் நிறம் முதலியவை பற்றி ஓர் அபிப்ராயம் கொடுக்க முடியும்.

*[மகாகவி பாரதியார், இந்தியா இதழ், 29, செப்டம்பர், 1906.]*

"சென்ற ஐம்பது வருஷங்களில் இம்மாகாணத்தில் விளங்கிய பெரியார்கள் ஒவ்வொருவரையும் அநேகமாக எனக்குத் தெரியும். ஆனால் அறிவாற்றலில் சிறந்து முழுமனத்துடன் கல்விக்காகப் பாடுபட்டதில் மஹாமஹோபாத்தியாய சாமிநாதையருக்கு ஈடாக வேறு யாரையும் நான் அறியேன். அதிவேகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் காலம் ஒருநாளும் திரும்பிவராது" என்னும் உண்மையை நன்குணர்ந்து அவரைப்போல் ஒவ்வொரு நிமிஷத்தையும் நற்பயன்படுத்தி வருபவர்களையும் நான் பார்த்ததில்லை. கலைஞர்களாகக் கருதப்படுவோர் தங்கள் தங்கள் கலைகளிடத்தில் கொள்ளக்கூடிய சிரத்தா பக்தியில் இப்பெரியாரைப் போல் சிறந்தவர் தென்னிந்தியாவில் - ஏன் இந்தியாவில்கூட - இல்லையென்றே அச்சமின்றிச் சொல்லுவேன்"

*[எண்பதாம் ஆண்டுநிறைவு விழா காலத்தில் (1935) ஸ்ரீ. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் எழுதியது, மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர், கே. சுந்தரராகவன், 1942]*

"ஸ்ரீசாமிநாதையரின் கல்வி, கடலைப் போன்றது. மெய்வருத்தம் பாராத அவருடைய முயற்சியுடன் தேனீயும் எறும்புமே போட்டியிடலாம். தாய்மொழியின் தொண்டிலும் கல்வி முயற்சியிலும் அவருடன் நாம் போட்டியிட முடியாதாயினும் அவருடைய அடக்க குணத்தையாவது நாம் கற்றுக்கொள்ள வேண்டும்"

*[சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர், கே. சுந்தரராகவன், 1942]*

"ஏடு தேடி யலைந்தலு ரெத்தனை
எழுதி யாய்ந்த குறிப்புரை யெத்தனை
பாடு பட்ட பதத்தெளி வெத்தனை
பன்னெறிக்கட் பொருட்டுணி பெத்தனை
நாடு மச்சிற் பதிப்பிக்குங் கூலிக்கு
நாளும் விற்றபல் பண்டங்க ளெத்தனை
கூட நோக்கினர்க் காற்றின வெத்தனை
கோதி லாச்சாமி நாதன் றமிழ்க் கென்றே"

*[ரா. இராகவையங்கார், டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் சதாபிஷேக வரலாறு, 1936]*

ஆதி யுகத்து இருளில் பனையோலைச் சுவடிகளில்
இருந்தது திராவிட நாட்டின் புராதன கீர்த்தி
அந்தப் பெருநிதி, பேராசானே
உன்னால் அன்றோ வெளிப்பட்டது?
அந்தக் காலத்து அகஸ்தியனைப் போல நீயன்றோ
வந்து உன் அன்னையினைச் சிம்மாசனத்தில்
பெரு மதிப்புடன் வீற்றிருக்க வைத்தாய்?
அம்மட்டோ ஐம்பெருங் காப்பியங்களுள்
சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை,
முதலானவற்றை
அந்த அன்னையின் இணையடியில்
சமர்ப்பித்தவன் நீ அன்றோ?
அவற்றுடன் சங்க இலக்கியத்தையும்
நிலவில் மலர்ந்த முல்லை என
ஒளிர வைத்தவனும் நீஅன்றோ?
உன்னை வணங்கு கிறேன்"

*[மகாகவி இரவீந்திரநாத் தாகூர்; தமிழ் மொழிபெயர்ப்பு திரு. சேனாபதி, டாக்டர் உ.வே. சாமிநாதையர் திருஉருவச்சிலைத் திறப்பு விழா, சிறப்பு மலர், 1997]*

பார்காத்தார் ஆயிரம்பேர் பசித்தார்க் காகப்
பயிர்காத்தார் ஆயிரம்பேர் பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டில்
மானங்காத்த தமிழ்த்தாய்என் உடைமை எல்லாம்
யார்காத்தார் எனக்கேட்க ஒருவன் அம்மா
யான்காப்பேன் எனவெழுந்தான் சாமி நாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்
நிலைகாத்த மலைஇமய நெற்றி மேலான்.
பொய்யாத தமிழ்க்குமரி ஈன்ற சாமி
போகாத புகழ்க்கன்னி மணந்த நாத!

செய்யாத மொழித்தொண்டு செய்த ஐயா!
சிறுகாத செஞ்சத்தேம் வணங்கு செம்மல்!
எய்யாத திருவடியால் எண்பத் தாண்டும்
இளையாத உள்ளத்தால் எங்குஞ் சென்று
நெய்யாத தொன்னூல்கள் நிலைக்க வைத்த
நீங்காத தமிழ்க்குயிரே! நின்தாள் வாழ்க.

*[அறிஞர் வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 1962]*

பேச்செல்லாம் தமிழ்மொழியின் பெருமை பேசிப்
பெற்றதெல்லாம் தமிழ்த்தாயின் பெற்றி யென்று
மூச்செல்லாம் தமிழ்வளர்க்கும் மூச்சே வாங்கி
முற்றும் அவள் திருப்பணிக்கே மூச்சை விட்டான்
தீச்சொல்லும் சினம் அறியாச் செம்மை காத்தோன்
திகழ்சாமி நாதஜயன் சிறப்பை எல்லாம்
வாய்ச்சொல்லால் புகழ்ந்துவிடப் போகாதுண்மை;
மனமாரத் தமிழ்நாட்டார் வணங்கத் தக்கோன்.
அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக
அலைந்தலைந்தே ஊரூராய்த் திரிந்து நாடிச்
செல்லரித்த ஏடுகளைத் தேடித் தேடிச்
சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து
சொல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கிச்
சோர்வறியா துழைத்தஒரு சாமிநாதன்
இல்லையெனில் அவன் பதித்த தமிழ்நூலெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்திடாதே.
சாதிகுலம் பிறப்புகளாற் பெருமை யில்லை;
சமரசமாம் சன்மார்க்க உணர்ச்சி யோடே
ஓதிஉணர்ந் தொழுக்கமுள்ளோர் உயர்ந்தோர் என்னும்
உண்மைக்கோர் இலக்கியமாய் உலகம் போற்ற
ஜோதிமிகும் கவிமழைபோல் பொழிமீ னாட்சி
சுந்தரனாம் தன்குருவைத் தொழுது வாழ்த்தி
வேதியருள் நெறிபிசகாச் சாமிநாதன்
விரித்துரைக்கும் சரித்திரமே விளங்கி நிற்கும்.
மால்கொடுத்த பிறமொழிகள் மோகத் தாலே
மக்களெல்லாம் பெற்றவளை மறந்தார் ஞானப்
பால் கொடுத்த தமிழ்த் தாயார் மிகவும் நொந்து
பலமிழந்து நிலைதளர்ந்த பான்மைபார்த்துக்
கோல்கொடுத்து மீட்டுபவள் கோயில் சேர்த்துக்
குற்றமற்ற திருப்பணிகள் பலவும் செய்து
நூல்கொடுத்த பெருமைபல தேடித் தந்த
நோன்பிழைத்த தமிழ்த்தவசி சாமி நாதன்

*[நாமக்கல் கவிஞர், டாக்டர் உ.வே. சாமிநாதையர் திருஉருவச்சிலைத் திறப்பு விழாச் சிறப்பு மலர், 1997]*

●


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!





**ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | |
|---|---|---|---|
| 6066 | 4238 | 6078 | 2415 |
| 4856 | 4710 | 6076 | 4382 |
| 4241 | 6079 | 4858 | 6080 |
| 6084 | 4240 | 4581 | 6901 |
| 6045 | 960 | 909 | 307 |
| 6901 | 959 | 4859 | 306 |
| 6081 | 4857 | 4242 | 4528 |

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

தனி இதழ் ₹ 30.00,
ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00.
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தாத் தொகையை*
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**